# தமிழ் நூல் விளக்கு

(முதற் பாகம்)

ஆக்கியோன்

**P. R. மீனாக்ஷி சுந்தர முதலியார் B.A., B.L.,**

(சென்னை யூனிவர்ஸிட்டி தமிழ் லெக்ஸிக்கன் ஆபிஸில்
1929 முதல் 1936 வரை உதவியாளராயிருந்தவர்)

காப்பி உரிமை
ஆக்கியோற்கே.

1939

[விலை ரூ. 2.

I 253



# தமிழ் நூல் விளக்கு

## முன்னுரை

பாஷை அபிமான சம்பந்தப்பட்ட மட்டில் தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் பல் வகையினராகக் காணப்படுகின்றனர். குழந்தைகளைத் தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டும் போது தாய்மார்கள் தமிழ்ப்பாடலையே உரிமையுடன் பாடினாலும் சமய வேற்றுமையால் தமிழர்கள் வெவ்வேறு பாஷைகளை அபிமானிக்கத் தத்தம் சமயபோதகாசாரியர்களாலும் குருமார்களாலும் கற்பிக்கப் படுகிறார்கள். ஆனதால் வெவ்வேறு சமயப் பிரிவினரிலுள்ள பெருங்குடியாளர்கள் லௌகிக விஷயங்களில் உரையாடுவதற்கு மட்டும் தமிழைப் பயிற்சி செய்து கொண்டு நூலறிவு பெறுவதில் வடமொழியில் ஆசிரியரின் கிரந்த பாஷையாகிய சமஸ்கிருதம், அம்மொழியில் நாடோடி மொழியாகிய பாகதத்தின் பகுதிகளான மாராஷ்டிரம் ஹிந்துஸ்தானி ஆகிய இருபாஷைகள், பாரவசீகச் சொற்களை அதிகமாய் ஏற்றுக்கொண்டு விர்த்தி செய்யப்பட்ட உருது, இங்கிலீஷ், ஆகிய ஐந்து பாஷைகளில் தேர்ச்சி அடைய தம் வாழ்க்கையிற் பெரும்பாகத்தைக் கழித்தும் எல்லா வகுப்பினரும் ஆங்கில ஆட்சியாளரிடத்தும் ஆங்கில வியாபாரிகளிடத்தும் உத்யோகம் பெறும் பொருட்டு இங்கிலீஷ் பயிற்சியிலேயே மனதைச் செலுத்தியும் வருகின்றனர்.

ஆதலால் பழந்தமிழ் நாகரீக விளக்குகளான திருக்குறள் குறுந்தொகை, புறநானூறு முதலிய நூல்களையும் கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் போன்ற அழகு வாய்ந்த நூல்களையும் கவனிப்பதற்குப் பலவகைச் சமயப் பற்றுடைய தமிழ்ப் பெருங்குடியாளர்களுக்கு அவகாசமில்லை. இக்காரணத்தால் தமிழ் நாட்டுக் குடிகளிடை நூலறிவு ஒற்றுமையால் விளையக்கூடிய பரஸ்பர மதிப்பு வளர நிமித்தமில்லாம லிருக்கிறது.

இந் நாட்டில் வாழும் தமிழர் யாவரும் இதர பாஷாபிமானிகள் உட்பட உண்மையில் பழந்தமிழரோடு எவ்வகையிலும் தொடர்புடையவர்களே. தமிழ் நாட்டில் வாழும் பல்வகைக் குடிகளின் சரித்திரத்தை நாட்டு நன்மையைக் கருதி உண்மையாக எழுதுவிக்க ஊக்கம் உதவும் பெரியோர் இதுவரை நமக்குக் கிடைக்காததால் இத் தொடர்பு நம்மால் எளிதில் ஊகிக்க முடியவில்லை. சென்றகாலச் சரித்திரம் எப்படியிருந்தபோதிலும் எதிர் காலத்தில் தமிழர் யாவரும் ஒற்றுமையுடன் இகலும் அழுக்காறும் நீங்கி அளவளாவி உறையத் தற்காலக் கூறுபாடுகளால் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். அவ்வொற்றுமை நயப்பாட்டை நோக்கத்தில் வைத்துத் தமிழ் நூலிற் சிறந்த திருக்குறளின் உட்கருத்தைப் பற்றியும் சிலப்பதிகார முதலிய சில நூல்களைப் பற்றியும் இச்சிறு நாலிலுள்ள கட்டுரைகள் என்னால் எழுதப் பட்டன. இவ்வியாசங்கள் மூலம் தமிழ் நூலறிவு பல சமயத்திலும் பிறந்து வாழ்கின்ற தமிழரிடை பரவவேணும் என்பது என் விருப்பம். இந்த விருப்பம் நிறைவேறும்படி தமிழர்யாவரும் செறிந்து வாழ்வதற்குரிய மக்கட்பண்பை அத்தமிழரிடை பரப்புவதற்கு உதவியாயிருக்கும் ஆண்டவனை என்நெஞ்சார வழுத்துகின்றேன்.

இந்நூலை C. குருவைய்ய செட்டியாரவர்கள் தமது ஆர்ட் பிரிண்டிங் காடேஜ் **(Art Printing Cottage, Madras)** என்ற அச்சுக்கூடத்தில் எனக்குச் சிரமமின்றி அச்சிட்டு வெளியிடுவதற்குத் துணைபுரிந்ததற்கும் அவ்வச்சுக்கூடத்தின் உத்யோகஸ்தர் D. வேதாந்தம் அவர்கள் எனக்கு மிகுந்த ஊக்கஞ் செலுத்திப் பொறுமையுடன் இவ்வச்சு முயற்சியை நிறை வேற்றினதற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

சென்னை,<br>5-7-1939.

ஆக்கியோன்.

# தமிழ் நூல் விளக்கு

## பொருளடக்கம்.

பக்கம்

முன்னுரை i

இந்நூலில் எடுத்தாளப்பட்ட திருக்குறட்பாக்களின் முதற்குறிப்புக் கோவை vii

பிழைதிருத்தம் ix

தமிழின் நிலைமை 1

மக்கள் மேம்பாட்டிற்கு அறிகுறிகள் (1) வழக்குமுறை நூல் (3) குறளின் பெருமை (3) திருக்குறள் முதனூல் (4) மனு (9) திருவள்ளுவரின் கொள்கை (10).

திருக்குறட்கருத்து 16

குறளிற்காணப்படும் மக்கட்டொகுப்பு (16) அறக்கடமையோர் (16) போர்க்கடமையோர் (22) இல்லக்கடமையோர் (23) வறிஞராகிய தொழிலாளர் (36).

தமிழ் முறைப்படி அருணிலையமும், பொருணிலையமும். Church and State in the Tamil System. 39

வைதிக, ஆகம மார்க்கங்கள் (39) பொருணிலயம் (40) அருள் நிலயம் (41) ஆகம முறைக்கும், வைதிக முறைக்கும் உள்ள வேறுபாடு (44) தொண்டமண்டல சதகம் 18-ம் பாடலின் கருத்து (55) சைவ நூல்களில் காதல் மணமுறை (58).

தமிழ் நாட்டில் பண்டையக்காலத்தில் முறை செய்த இயல் பக்கம் 59

குறள் 'இறைமாட்சி' அதிகாரத்தின் முதற் பாடலின் கருத்து (67) 'குடிப்பிறப்புடுத்து' என்னும் பொருளதிகார மேற்கோட் பாடலின் கருத்து (71) குடிப்பிறப்பு (72) பனுவல்சூடி (74) விழுப் பேர் ஒழுக்கம் (76) வாய்மை (78) தூய்மையுடன் கூடிய காதல் மணவாழ்வாகிய இல்லற நிலை (87) நடுவு நிலை நெடுநகர் (90) அழுக்காறு, அவா வின்மை (91) பெரிய புராணத்தில் வழக்குத் தீர்க்கும் முறை (92) சாஸனத்தில் வழக்குத்தீர்க் கும் முறை (95) குறள் ஒழிபியலில் வைக்கப்பட்ட குடிமைக்குரிய அதிகாரங்கள் அங்கவியலில் வைக் கப்படுதல் நேர் (96) மதுரைக்காஞ்சி (97) மலை படுகடாம் (97).

இறையனார் அகப்பொருட்படி தமிழ் நாட்டில் முறைசெய்த வகை 99

[இப்பாகத்தைப் பின்வரும் 'இறையனார் அகப்பொருளும் திருக்கோவையாகும்' என்னும் கட்டுரையுடன் சேர்த்துக் கவனித்தல் நலம்.]

சிலப்பதிகார ஆராய்ச்சி 103

தமிழ்நாட்டில் வழங்கிய நீதிமுறை (103) முப்பால் விளக்கம் (108) அரும்பதவுரைக்கும் அடியார்க்கு நல்லாரின் உரைக்கும் உள்ள வேறுபாடு (112) மங்கல வாழ்த்துப் பாடல் (114) சிலப்பதிகாரக் கதையில் முன்னுக்குப் பின்னுள்ள முரண் (120)

பக்கம்

அறிவனின் நேர்மைக்காட்சியும், புலவனின் பொய்த்தேர்ப் புகழ்ச்சியும் . 121

‘புனிற்றுப் பசியுழந்த’ என்ற பொருளதிகார மேற்கோட்பாடலின் கருத்து (121) புலிமுலை புல்வாய்க் கருளின புராணக் கதை (122) பரஞ்சோதி திருவிளையாடல் (127) மலைபடுகடாம் (135) மணிமேகலை உரையில் மேற்கோளாக ஆளப்பட்ட வீரசோழியப் பாடல்கள் (137).

நக்கீரர், கபிலர், பரணர் 138

வேம்பத்தூரார் திருவிளையாடலிற் சுட்டப்பட்ட ‘ஐந்தாம் பனுவல்’ (141) முத்தமிழ் (145).

முக்குணத்துக்கும், புராணக்கதைகளுக்கும் உள்ள தொடர்பு 155

தடாதகைப் பிராட்டியார் அவதாரம் (155) விஷ்ணு பேய்முலையுண்ட கதை (156) விளங்கனி உதிர்க்கக் கன்றைக் குணிலாகத் திருமால் எறிந்த கதை (159) இராமாயணம் (159) மணிமேகலை (16) கந்தபுராணம் (162) விநாயகப் புராணம் (163).

இறையனார் அகப்பொருளும், திருக்கோவையாரும் 164

நூலோர் பரம்பரையில் பரத்தையிற் பிரிவு கூறப்பட வந்த வரலாறு (166.)

இணைப்பு (அகமருடமந்திரம்) 175

# தமிழ் நூல் விளக்கு

## இந்நூலில் எடுத்தாளப்பட்ட திருக்குறட்பாக்களின் முதற்குறிப்புக் கோவை


| | |
|---|---|
| அஞ்சாமை ஈகை | 25, 33, 60 |
| அடுக்கியகோடி | 91 |
| அரம்போலும் | 63, 74 |
| அருள்கருதி | 17 |
| அவிசொரிந்து | 18 |
| அவ்வித்தழு | 91 |
| அவ்வியநெஞ் | 91 |
| அளவறிந்தார் | 22 |
| அறஞ்சாரா | 37 |
| அறவினையும் | 88 |
| அறனறிந்துமூ | 74, 107 |
| அறனிழுக்கா | 26 |
| அறன் அழிஇ | 82 |
| அறிவற்றங் | 27 |
| அன்புடைமை | 61 |
| ஆபயன் | 96 |
| ஆள்வினையு | 74 |
| ஆற்றுவாராற்றல் பசி | 51 |
| இடை தெரிந்து | 81 |
| இயற்றலும் ஈட்டலும் | 26, 173 |
| இரந்தும் உயிர் | 110 |
| இல்வாழ்வான் | 84 |
| இற்பிறந்தார் | 72 |
| இனத்தாற்றி | 108 |
| இன்மை என | 12 |
| உலகத்தார் | 80 |
| உலகத்தோ | 21 |
| உலகந்தழீஇ | 21 |
| உறுப்பொத்தல் | 62 |
| உற்றநோய் நீக்கி | 66 |
| ஊணுடை | 38, 73 |
| ஊழிபெயரினும் | 91 |
| ஊறொரால் | 8 |
| எண் சேர்ந்த | 87 |
| எண்பதத்தான் | 108 |
| எதிரதாக்காக்கும் | 66 |
| எப்பொருள்எத் | 80 |
| எல்லா விளக்கும் | 83 |
| எந்திய கொ | 64 |
| ஒருமை மக | 63, 90 |
| ஒழுக்கத்து | 75 |
| ஒழுக்கமுடைமை | 12, 77 |
| ஒழுக்கமும் | 26 |
| ஒற்றும் உரை | 107 |
| கடுமொழியும் | 107 |
| கைம்மாறு | 81 |
| கொடையளி | 26 |
| சலம்பற்றிச் | 82 |
| சிறப்பொடு | 19 |
| சிறுமையுள் | 12 |
| சூழ்வார் | 66 |
| செப்பமுடை | 72 |
| செவிகைப்ப | 62 |
| செவியுணவி | 18 |
| செறிவறிந்து | 77 |
| சொற்கோட்ட | 90 |

| | |
|---|---|
| தம்மிற்பெரி | 65 |
| தள்ளா | 28 |
| தற்காத்து | 87 |
| தாழ் வீழ்வார்மென் | 169 |
| துப்புரவில் | 36 |
| தூங்காமை | 26, 32 |
| தெரிந்த | 24 |
| நகல்வல்லரல் | 91 |
| நயனொடு | 74 |
| நலத்தின் | 76 |
| நலம்வேண் | 76 |
| நல்லார்க | 38 |
| நற்பொரு | 36 |
| நன்றிக்கு | 78 |
| நிலையஞ்சி | 10 |
| நுண்மாண் | 75 |
| பகுத்துண் | 20 |
| படைகுடி | 24, 67 |
| பணியுமாம் | 77 |
| பற்றுக | 7 |
| பிணியின்மை | 173 |
| பிறர்பழியும் | 38, 73 |
| புறங்கூறிப் | 82 |
| பொய்ம்மையும் | 78, 83 |
| பொறிவாயிலைந் | 7 |
| போற்றின் | 83 |
| மனத்தொடு | 10 |
| மனநலத்தி | 12 |
| மிகல்மேவல் | 21 |
| முறைசெய்து | 60 |
| யாண்டுச் | 63 |
| யாமெய்யா | 7, 83 |
| வகைமாண் | 64, 70 |
| வகையறிந்துவல் | 80 |
| வழங்குவ | 25, 62 |
| வாணிகஞ் | 30 |

# தமிழ் நூல்விளக்குப் பிழைதிருத்தம்

| பக்கம். | மேலிருந்தாவது கீழிருந்தாவது வரி. | எண். | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 6 | கீ. | 7 | நுன் | நூன் |
| 14 | மே. | 4 | போர | பேரா |
| 15 | கீ. | 4 | மிக்கார், விளங்கு, பேர், அவை | மிக்கார் விளங்கு பேர் அவை. |
| 21 | மே. | 6 | தமீகி | தமீஇ |
| 27 | மே. | 9 | என்றும் | என்னும் |
| 30 | கீ. | 8 | நோக்கினர் | நோக்கின |
| 52 | மே. | 5 | பாட்டியியல் | பாட்டியல் |
| 87 | கீ. | 6 | சூழ்க்சி | சூழ்ச்சி |
| 92 | மே. | 3 | பாடலிள்ள | பாடலிலுள்ள |
| ,, | கீ. | 6 | வேண்டும் | வேண்டும் |
| 94 | அடிக்குறிப்பு | | வாதில் அமணின் | வாதமணின் |
| ~~95~~ | ~~மே.~~ | ~~1~~ | ~~பவம்~~ | ~~தவம்~~ |
| 115 | மே. | 2 | மங்கள | மங்கல |
| 120 | கீ. | 8 | துயா | துயர் |
| 121 | மே. | 7 | மடுதது | மடுத்து |

# இயற்கையில் நிகழும் தாய்க்குரிய அன்பின் தன்மை

நசை நன்கு உடையர், தோழி! ஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக்கு இறைஞ்சிய பரூஉப் பெருந்ததரல்
ஒழியின் உண்டு வழுவில் நெஞ்சில்
தெறித்து நடை மரபின் தன்மறிக்கு நிழலாகி
நின்று, வெயில் கழிக்கும் என்ப, நம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே.—குறுந்தொகை. 213.

[டாக்டர் சுவாமிநாத அய்யர் அவர்களால் ஆக்கப்பட்ட உரையுடன் கூடிய பதிப்பிலிருந்து ஆளப்பட்டது]

---

ததரல்-மரப்பட்டை ; bark of a tree.

# தமிழின் நிலைமை.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் மேம்பாட்டுடன் வாழ்கி றார்கள் என்பதற்கு அறிகுறி அந்நாட்டில் வழங்கும் பாஷை யானது மேனிலை அடைந்திருப்பதுவே. அந்நாட்டு மக்கள் தெய்வ வழிபாட்டு முறையிலும் சமயக் கொள்கைகளைக் கற்கும் முறையிலும் அந்நாட்டிற்குரிய சுவ பாஷையைச் சிறப்பாகப் பயன்படுத்திவருவதும், குடிகளுக்குள் ஏற்படும் வியவகாரங்களைத் தீர்க்கும் வழக்கு முறையானது குடிகள் எளிதில் தெரிந்துகொள்ளும்படி சுவபாஷையில் எழுதப்பட் டிருப்பதும், சுவபாஷைக்குரிய இலக்கணமும் சுவ பாஷையின் உண்மையான இயல்பை அநுசரித்து எழுதப்பட்டிருப் பதும் ஆகிய மூன்றுமே அந்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்கு அறிகுறிகள்.

இவ்வறிகுறிகளில் நம்முடைய தமிழ் நாட்டிற்குரிய வழக்குப்பாஷையான தமிழ் சம்பந்தப்பட்ட மட்டில் இக் காலத்தில் ஒரு அறிகுறி கூட நமக்கு இல்லை. என்னால் ஆக்கப்பட்ட தொல்காப்பியம் சொல்லதிகாரவிளக்கம் என்ற சிறு நூலில் நான் எடுத்துக்கூறியிருக்கிறபடி சொல்லதிகார உரைகாரர்களால் தமிழிற்குரிய உண்மையான இலக்கணம் திரிக்கப்பட்டு பாஷையின் இயல்புக்கு இணக்கமில்லாதபடி செய்யப்பட்டு விட்டது. நன்னூல் முதலிய பிந்திய இலக்கணங்கள் அச்சொல்லதிகார உரைகாரர்களைப் பின் பற்றியே இயற்றப்பட்டிருக்கின்றன. ஆதலால் இப்போது நம்முடைய மொழிக்கு நேரான இலக்கணம் கற்பிக்கப்பட வில்லை என்ற குறை நம்மிடமிருந்துவருகிறது. இரண்டாவது தமிழ்மக்களாகிய நமக்கு வேதமும் ஆகமமும் நம்முடைய

சமயக் கொள்கைகளை உணர்த்தும் சாஸ்திரங்களாகக் கூறப் படுகின்றன. அவைகள் தமிழ் மொழியில் அமையாம லிருப்பது நமக்கு ஒரு குறை என நாம் உணரக் கூடச் சக்தியில்லாமலிருக்கிறோம். தமிழ்மக்கள் உறுதி நூலாகக் கொள்ளும் திருக்குறளில் உணர்த்தப்படும் சாதி வரையறை நீக்கத்திற்குரிய கோட்பாடுகளுக்கு விரோதமாக சித்தாந்தங்கள் வேதாகமங்களில் உணர்த்தப்படுவதாகச் சொல்லப்படுகிறபடியால் அவைகளின் தன்மை தமிழ்மக்கட் குத்தெரியாதபடி இருக்க அவைகள் மொழி பெயர்க்கப் படாமலும் கற்பிக்கப்படாமலும் இருக்கலாம். அப்படி யானுல் நம்முடைய கோயில்களில் வணக்கமுறைகளிலும் பிரார்த்தனை முறைகளிலும் திருக்குறள் போன்ற நூல்களுக்கு ஏன் பிராதானியம் ஏற்படவில்லை என்ற கேள்வி எழுகிறது. இக்குறளிலுள்ள உண்மைகள் தமிழைத் தொட்டில் பாஷை யாகக் கொண்டாடும் நம்மவர்யாவர்க்கும் கோயில் மடம் முதலிய தானங்களில் பிரசாரப்படுத்தப்பட்டு வராதிருப்பது ஒரு பெருங்குறையல்லவா ?

சிவஞானசித்தியார் பரபக்ஷம், இருபாஇருபது, பதி ஞேராம் திருமுறையிலுள்ள நக்கீரர், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் முதலியோரின் பிரபந்தங்கள் கோயில் களில் பாராயணஞ் செய்யப்படவேண்டாமா ? அவைகள் ஜாதிக்கோட்பாட்டை அங்கீகாரஞ் செய்யாமல் எழுதப்பட் டிருப்பதால் கோயில்களில் வணங்கவரும் பக்தர்களுக்கு அவை முக்கியமாக உணர்த்தப் படவேண்டும்.

நாலாயிரதிவ்ய பிரபந்தத்திற்கும் வேதாகமங்களுக்கும் கருத்து வேறுபாடாயிருக்க, அவை ஒரே கருத்து உடையன எனப்போதிக்கப்பட்டு வருவது தமிழ் மக்களிடை அறியா மையை வளர்த்துவருகிறதே. அப்பிரபந்தங்கள் வடமொழி

வேதசம்பந்தத் தொடர்பு அன்னியில் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெரியோர்களால் ஆக்கப்பட்டன என்ற உண்மை தமிழ் மக்களுக்குத் தெரியவேண்டியது அவசியம். அப்போது தான் தமிழ் நாட்டில் தமிழைத் தொட்டிற் பாஷையாகக் கொண்டாடும் தமிழர்யாவரும் ஒருவரை ஒருவர் மதித்துப் பழகுவார்கள். பொய்யுரையினால் ஏற்பட்டு வழக்கத்தி லிருக்கும் பொய்ம்மதிப்பு நாட்டை விட்டு நீங்கினாற்றானே நாட்டுமக்கள் ஒற்றுமை அடைவார்கள்.

## இனி வழக்கு முறை நூலைப்பற்றி.

வியவகார விஷயங்கள் குற்றத்திற்குரிய ராஜ தண்டனை முறை விஷயங்கள் யாவும் ஆதியில் நம் நாட்டில் தமிழ் மொழியில் அமைந்திருந்தன என்றும் அவைகள் தமிழைப் பிரதானபாஷையாக மதித்து வந்த தமிழ்ச்சான்றோர்களால் தமிழ் நாட்டு வேந்தர்களுக்கும் வாழுங் குடிகளுக்கும் எடுத் துக் கூறப்பட்டுவந்தன என்றும் சொல்வதற்குத் திருக்குற ளிலும் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் உய்த்துணரக் கூடிய சாட்சியங்கள் இருக்கின்றன. ஆதி உண்மைத் தன்மை மாற்றப்பட்டு இப்போது வழங்கும் பெரிய புராணம் முதலிய நூல்களின் ஆதரவாலும் பரிமேலழகர் உரை, பொருளதிகார உரை முதலியவற்றாலும் தமிழ்நாட்டிற் பயிலப்பட்டு வந்த பழைய வழக்கு வியவகார முறை மாற்றப்பட்டு விட்டது. பின்னால் குறட்கருத்தைப்பற்றி விரிவாகக்கூறும் பாகத்தில் இப்பிறழ்ச்சி உபதேசம் காட்டப்படும்.

## குறளின் பெருமை

தமிழ்ப்பாஷை சீர்குலைந்து காணப்படுகிற இக்காலத்தில் தமிழின் பெருமையைக் காட்டக்கூடிய தமிழ்நூல் குறள்

ஒன்றே இருக்கிறது. இதை நினைக்க நமக்கு ஒருவகையில் மகிழ்ச்சியே ஏற்படுகிறது.

திருக்குறள் தோன்றிச் சிலகாலத்திற்குப் பின்னால் திருக்குறளின் பெருமையைப் புலப்படுத்த அந்நூலுக்குப் பாயிரமாகத் திருவள்ளுவமாலை என்ற பேருடைய ஒரு நூல் வழங்கலானது. அந்நூலில், சீத்தலைச்சாத்தனார் என்ற புலவரின் பாடல் நாம் விசேஷமாகக் கவனிக்கவேண்டிய பாடல்களில் ஒன்று. அப்பாடல் வருமாறு :—

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியும்
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்.

இப்பாடலிலிருந்து நாம் யூகித்துக் கொள்ளவேண்டிய ஒரு முக்கிய விஷயம் யாதெனில் தமிழ் நாடானது பாண்டிய சோழ சேர மன்னர்களால் சுவராஜ்யமாக ஆளப்பட்டு வந்த காலத்தில் அவர்கள் திருக்குறள் நீதியைத் தத்தம் நாடுகளை ஆட்சிமுறை செய்வதில் அநுசரித்து வந்தார்கள் என்பதே. அம்மன்னர்கள் அணிந்த பெரிய விலை மிகுந்த கிரீடங்களின் மேல் சுற்றப்பட்ட மாலைகளை இத்திருக்குறளானது ஒத்திருந்தது என்று இப்பாடலால் உணர்த்தப்படுகிறது. இதன் கருத்தானது திருக்குறளிலுள்ள ஒப்புரவு நீதியானது தமிழ் நாட்டில் பின்பற்றப் பட்டு வந்ததால் தமிழ் நாட்டிலுள்ள மூன்று வேந்தர்களும் குடிகளாற் புகழப்பட்டுப் பெருமையுடன் ஆண்டார்கள் என்பது தான்.

## திருக்குறள் முதனூலா அல்லது வழி நூலா ?

திருவள்ளுவமாலையில் நக்கீரர் இக்குறளைப் புகழ்ந்த புகழ்ப்பாடல் வருமாறு :

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனுவறமுதலா வந்நான்கும்—ஏனோருக்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

திருவள்ளுவமாலையில் கோவூர்கிழார் பாடினதாகக் கூறப்படுகின்ற பாடல் வருமாறு :—

அறமுதனான்கும் அகலிடத்தோர்க்கெல்லாம்
திறமுறத்தேர்ந்து தெளியக்—குறள் வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

இவ்விரண்டு பாடல்களிலிருந்து திருக்குறள் முதனூல் என்பதற்கு யாதொருதடையும் கிடையாது.

வடமொழியில் வடநாட்டு அரசர்க்கு ஒழுக்கமுறை இது என உபதேசித்த பகவத்கீதையை ஒத்துத் தமிழ் மொழியில் தமிழ் அரசர்க்கு ஒழுக்கமுறை இது எனப் கற்பித்த நூல் திருக்குறள் எனப் பண்டைத்தமிழரால் கருதக் பட்டுவந்தது. திருவள்ளுவமாலையில் நல்கூர் வேள்வியாரால் பாடப்பட்ட பாடல் வருமாறு :—

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்1
உத்தரமாமதுரைக்கச் சென்ப—இப்பக்கம்
2மாதானுபங்கி மறுவில் புலச்சென்னாப்
போதார்3 புனற்கூடற் கச்சு.

---

1. உபகேசி தோண்மணந்தான்...பகவத்கீதையின் ஆசிரியர் கிருஷ்ணபகவான் 2. மாதானுபங்கி—பெற்றதாய்க்கு அடுத்த கல்வித்தாய் அதாவது வள்ளுவர். 3. செம்மையான சொல்லாகிய பூவால் தொடுக்கப்பட்ட மாலையை ஒத்த குறளின் ஆசிரியர். (நா—சொல். போது—பூ.)

பகவத்கீதையானது 10-வது அத்தியாயம் 26-வது சுலோகத்தில் சித்தர்களிற் சிறந்தவன் கபிலமுனி எனக் கூறுகிறது. திருவள்ளுவமாலையில் அசரீரிப் பாடலில் உருத்திரசன்மனும் திருவள்ளுவரும் தாம் கூறிய உண்மைத்திற ஒப்புமையால் சங்கப்பலகையில் சமமாக வீற்றிருக்கத்தகுந்தவர் எனப் கூறப்படுகிறது. பரிபாடலின் ஓர் செய்யுள் உரையில் உருத்திரராவார் கபிலரினம் எனக் கூறப்படுகிறது. ஆகவே திருவள்ளுவரும் கபிலருடைய சாங்கிய ஆகம நூலின் உண்மையைத் தாம் தழுவியே நூல் செய்தார் என்பது அசரீரிப் பாட்டின் கருத்து.

திருவள்ளுவமாலையில் வண்ணக்கஞ் சாத்தனார் பாடிய பாடல் வருமாறு :—

ஆரிய முஞ்செந்தமிழும் ஆராய்ந்திதனின் இது
சீரிய தென்றோன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதமுடைத் துத் தமிழ்திருவள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

இப்பாடலில் வேதம் என்பது மேற் சொன்ன நல்கூர் வேள்வியார் பாடலைப் பின்பற்றி பகவத்கீதை எனக் கருதப் படவேண்டும். வடமொழியிலுள்ள எந்த விசேஷ நூலும் தமிழாசிரியர்களால் வேதம் எனப்பொதுப் பெயரிட்டுச் சுட்டப்பட்டதால் வேதம் என்பது நியதியாய் ஒரு குறிப்பிட்ட வடநூலைக் குறிக்கவில்லை.[1] ஆசிரியன் உத்தேசம் நோக்கியும் அச்சொற்கு இடம் நோக்கியும் பொருள் கொள்ளுதல் நேரானமுறை. திருவள்ளுவமாலையிலிருந்து

---

1பௌத்தர்களும் தம்முடைய கொள்கைக்கு திரிவிச்சா எனப் பேரிட்டதும் சிலப்பதிகாரத்தில் வேதம் ஜைன ஆகமம் என்ற கருத்தில் வழங்கியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

எடுத்துக்காட்டப்பட்ட பாடங்களுக்கு விரோதமாகக் குறளானது வேறு நூலைப் பின்பற்றியது எனக் கூறும் மற்றப் பாடல்கள் பிற்றுரைப் பாடல்கள் என நாம் கருதவேண்டும்.

தம்நூலுக்கு நேராக எந்த ஒரு நூலையும் முதனூலாகத் திருவள்ளுவர் கருதாவிட்டாலும் அவர்கபிலரோ அல்லது வேறு எந்தத்தமிழ் முனியோ இயற்றியதாகக் கருதப்பட்டுத் தமிழரால் நன்கு பாராட்டப்பட்ட ஒரு ஆகமத்தைச் சார்ந்து தாம் நூல்செய்தார் என்று நாம்கருதும்படி பல விடங்களில் உரைகாரர் உரை எழுதிச் செல்கிறுர்.

" பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறி நின்ருர் நீடுவாழ்வார் "என்ற பாடலில் உரைகாரர் பொய்தீர் ஒழுக்கநெறி என்பது கபிலரது செய்யுள் என்பதிற் போல நூலாகக் கருதப்பட்டு, அவித்தான் என்பது அந்நூல் இயற்றிய இறைவனுகிய ஆசிரியனைக் குறிக்கிறது என நாம் யூகிக்கும்படி உரைக்கிறுர்.

" பற்றுகபற்ருற்ருன்பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்ற குறளில் " பற்றற்ருன் பற்றினை " என்பது பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை என்று கொண்டு மேலே விருத்தியுரையில் உரைகாரர் பற்றற்ருன் என்பது (கபிலரது செய்யுள் என்பதிற்போல) செய்யுட்கிழமைக்கண் வந்தது எனக் கூறுகிறுர்.

" யாமெய்யாக்கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையினல்ல பிற " என்ற குறட்பாவின் உரையில் மெய் என்பது மெய் யுணர்த்துவனவாகிய மெய்ந்நூல்கள் எனக் கொண்டு அவை இறைவர் (பல ஆசிரியர்கள்) அருளான் உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள் என உரைக்கிறுர். இவ்வுரையில் உலகத்தார் உறுதி எய்துதற்

பொருட்டு என்பதால் தமிழ் நூல்களே சுட்டப்பட்டன. இவ்வாகமங்கள் அறம்பொருள் இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களையும் உணர்த்தியிருக்கவேண்டும். இவை போலும் முன்னை முதுவோர் மொழி என்று திருவள்ளுவமாலையிற் சுட்டப்பட்ட பழந் தமிழ் நூல்கள். திருக்குறளானது எச்சமாகிய வேள்வி முறைக்கும் ஜாதிமுறைக்கும் மாறாக இயற்றப் பட்ட கபிலரது செய்யுள் போன்ற நூலைத் தலைமையாகக் கொண்டு எழுதப்பட்டது என்ற துணிபுக்கு மாறாகக் குறளின் உரைப்பாயிரத்தில் ஒழுக்கம் வழக்குத்தண்டம் என்றதற்கு நேரான ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்ற மூன்று விஷயங்களைப் பற்றிக் கூறும் யாக்ஞவல்கிய ஸ்மிருதிபோன்ற மனுநூலிலிருந்து திருவள்ளுவர் அறத்துப் பாலிலுள்ள கொள்கைகளை உரைக்கின்றார் எனக் கூறுவதும் வழக்கும் தண்டமும் குறளிற் கூறப்படவில்லை எனக் கூறுவதும்,

"ஊறொரால் உற்றபின் ஒல்கமையிவ் விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்"

என்பதின் உரையில் "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சு பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்" எனக் கூறுவதும் காமத்துப்பால் கடைசிப் பாட்டின் உரையில் "ஈண்டுப் பிரிவினை வட நூன்மதம்பற்றிச் செலவு ஆற்றாமை, விதுப்புப் புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினார்" எனக்கூறுவதும் மெய்யுரைகாரர்பேரால் பின் செருகப்பட்ட பிறழ்ச்சி உரைகளாகும்.

வழக்கு விஷயம் சுருக்கமாகப்பொருட்பாலின் செங்கோன்மை, கொடுங்கோன்மை அறத்துப்பாலின் நடுவுநிலைமை என்ற அதிகாரங்களிலும் தண்டவிஷயம் வெஃருவந்த செய்யா

மை கண்ணோட்டம் என்ற அதிகாரங்களிலும் கூறப்பட்டிருக்க அவ்வழக்கும் தண்டமும் குறளிற் சுட்டப்படவில்லை என்பது முரண்வாதமே. ஸ்மிருதியில் கூறப்படும் ஆசாரம் என்பது பெரும்பாலும் உடல் சுத்தம், தீட்டு, ஜாதகர்மம், நாமகரணம் உபநயனம் போன்ற சடங்குகளைப்பற்றியதேதவிர குறளிற் சொல்லப்படும் மனத்தீங்கின்மை பற்றிய தன்று.

மனு என்னும் பெயரும் வடமொழியில் ஒருவர்க்கே யுரிய சிறப்புப் பெயரன்று; ஒரு தேச மக்களுக்கு நியாயங்கள் கற்பிக்கும் ஆசிரியன் என்று மட்டும் பொருள் படும். ஜைனரில் சேதஸ்மனு என ஒருவர் கேட்கப்படுகிறார். அவர் புத்தரையோ, கபிலர் போன்ற வேறு ஆசிரியரையோ குறிக்கலாம். தமிழ்மக்களுக்கு முறை ஏற்படுத்திய இறைவனைத் தமிழ்மனு என்று அக்காலத்தில் வழங்கியிருக்கலாம். தமிழர் தம் நாட்டதிகார உரிமை இழந்த பிற்காலத்தில் தமிழ் மனு என்பது வடமொழி முறை ஆசிரியரான மனுவினின்றும் வேறன்று என்ற பிழைபட்ட கொள்கை பரவியிருக்கலாம். இப்பிழைபட்ட கொள்கைபற்றி திருக்குறளின் உரைப்பாயிரம் எழுதப்படுகிறது. மேலும் பகவத்கீதையின் 10-வது அத்தியாயத்தின் 6-வது சுலோகத்தில் 'சத்வாரோ மனவஸ்' என நால்வகை மனுக்கள் கேட்கப்படுகிறது. பெரியபுராணம் மனுநீதிகண்டபுராணத்தில் சுட்டப்பட்ட மனுவானவர் வடமொழி ஸ்மிருதி யாசிரியர்களினின்றும் பிரித்து வேறொருவர் என உணர்த்தப்படுகிறார். ஆகவே நால்வகைச் சாதி நியமம் கற்பிப்பதும் யாக்ஞவற்கிய ஸ்மிருதியை ஒத்த ஸ்மிருதி ஆசிரியரான மனுவின் நூலைத் திருவள்ளுவர் பின்பற்றவில்லை என்பதும் தமிழில் ஆக்கப்பட்டதும் கபிலரின், சாங்கிய ஆகமத்தைப்போன்றதுமான ஒரு நூலைத் திருவள்ளுவர் பின்பற்றியிருக்கவேண்டும் என்பதும் யூகிக்கப்படத் தக்கன.

## திருவள்ளுவரின் கொள்கை

அறம், பொருள், இன்பம் எனப்பிரிவு செய்து ஆசிரியர் உபதேசித்த கோட்பாடுகளெல்லாம் அறம் என்னும் பேருக் குரியதாயினும் மெய்ந்நூல்கள் பயிலப்படும் துறவறத்தில் அநுசரிக்கப்படும் வாய்மை சிறந்ததாக ஆசிரியரால் கருதப் பட்டதால் அவ்வாய்மைக்கு யாதொரு தடையும் நிகழக் கூடாத துறவறத்தைச் சிறப்புநோக்கி அறம் என்றார். மனத்தொடுவாய்மை மொழியிற்றவத்தொடு தானஞ் செய் வாரிற்றலை. திருக்குறள். வாய்மை 5.

இன்பத்தை வெறுத்துத் தவஞ்செய்வாரினும், பொருளை வெறுத்துப் பிறர்க்கு அருளுடன் ஈவாரினும் கல்விச் செல் வத்தின் நிமித்தகாரணமாகிய வாய்மைக் குணமானது பொருளும் இன்பமும் அறவே துறந்த சான்றோர்மாட்டுக் காணப்படுவதால், அச்சான்றோர் அநுசரிக்கும் துறவறமே சிறந்த தென வள்ளுவரால் கருதப்பட்டது.

*நிலையஞ்சி நீத்தாருளெல்லாம் கொலையஞ்சி கொல்லாமை*
*சூழ்வான்றலை. திருக்குறள் : கொல்லாமை 5.*

வேட்டையிற் பயிலும் இல்லற வாழ்க்கையரிடமிருந் தும் போரிற் பயிலும் அரசரிடமிருந்தும் கொல்லாமையாகிய அறம் ஆசிரியரால் எதிர்பார்க்கப்படவில்லை என்று இக்குறட் பாவினின்றும் தெரிகிறது. உரையாசிரியரும் துறவு ஒன்றே யாயினும் சமய வேறுபாட்டாற் பலவாமாதலின், "நீத்தாருள் எல்லாம் என்றார்" எனக்கூறுவது கவனிக்கத்தக்கது. இதி லிருந்து திருவள்ளுவர் எச்சமயத்தையும் சாராதவர் என்ப தும் சமயங்களில் எது உண்மை என ஆராய்ந்து அதைக் கூறுவதே தம்சமயம் எனக் கொண்டவர் என்பதும் தெரி கிறது.

இனிக்குற ளாசிரியர் தம் நூலில் பாகுபாடு இல்லாமல் எல்லாமக்கட்கும் உரித்தான இயல்பு களைப்பற்றி விளக்கு கிறார். குறளின் உரையாசிரியர் சிற்சில இடங்களில் இவ் வாசிரியரின் கருத்தைக் கருத்தில் வைத்து உரை எழுதுகிறார். பல இடங்களில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்தைப்பின்பற்றி முதனூலாற் குறிக்கப்பட்ட உண் மைக்கு மாறாக உரையெழுதுகிறார். குறளுக்கு இப்போது பரிமேலழகர்பேரால் வழங்கும் உரையானது ஒருவரின் உரை தானோ, இடையிடையே பலரால் எழுதப்பட்ட உரையும் கலந்திருக்குமோ என்று நினைப்பதற்குக்காரணம் இருக்கிறது.

இயற்பிரிவும், அதிகாரமுறையும் ஆசிரியரால் அமைக் கப்பட்ட முறைகளில் நமக்குக் கிடைத்திருக்கிறது எனக் கூறமுடியாது. குறட்பொருட்களையும் அதிகாரங்களையும் வேறு முறையில் வைத்துக் கோவை செய்யலாம் என என்னுற் கருதப்படுகிறது. அம்முறையை இங்கு காட்டு கிறேன் :—திருக்குறளில் முதல் நான்கு அதிகாரங்கள் பாயிர மாகக் காணப்படும் முறை ஆதியில் இருந்ததில்லை எனத் தெரிகிறது. பாயிரமாவது நூலிற்குப் புற வுரை எனப் படுவதால் நூலகத்ததாகக் கருதப்பட்டு வரும் இந்நான்கு அதிகாரங்களும் பாயிரமாகா. இந்நூலிற்குப் பாயிரம் எங்கு காணப்படுகிறது எனில் முற்காலந் தொட்டுக்குறளோடு இணைத்துச் சேர்க்கப்பட்டிருக்கும் திருவள்ளுவமாலையே பாயிரமாகக்கருதப்பட்டது. இப்பாயிரமும் குறள் செய்யப் பட்ட காலத்தில் இயற்றப்பட்ட தாகத் தெரியவில்லை. பாயிரத்திலுள்ள பாடல்களும் குறளின் தன்மையைப் பற்றியும் ஆசிரியரின் வரலாற்றைப்பற்றியும் ஒன்றும் தெளிவாய் உணர்த்தவில்லை. சிலகருத்துக்களில் பாயிரப் பாடல்கள் தம்முள் முரணுகின்றன.

தாம்பாட எடுத்துக்கொண்ட விஷயங்களைக் குறளாசிரியர் சிறப்பாக இருவகையாகப்பகுக்கிறார். அவைதாம் இம்மைமறுமை என்பன. இம்மை என்றால் இப்பிறப்பு, இவ்வுலகம் எனத் தவறுதலாகப் பொருள் கூறப்படுகிறது. உண்மையில் இம்மை என்பது அத்யாவசியம் என்றும் மறுமை என்பது அத்யாவசியத்துக்கு மேல் இரண்டாவதாக வேண்டப்படுவது என்றும் கருத்துத்தரும் படியாக ஆசிரியர் இப்பதங்களைத் தம் நூலில் வழங்குகிறார்.

இன்மை என் வொரு பாவி மறுமையும்
இம்மையும் இன் றிவரும் கு. 105·2

சிறுமையுள் நீங்கிய இன் சொல்மறுமையும்
இம்மையும் இன்பம்தரும் கு. 10·8.

மனநலத்தினுகும் மறுமைமற் றஃதும்
இன நலத்தினேமாப் புடைத்து.—கு. 46-9.

முதற்றர (Primary education), உயர்தரக்கல்வி (Secondary or higher education) என்ற சொற்றொடர்களில் முதற்றரம் உயர்தரம் என்பன என்ன கருத்தை விளக்குகின்றனவோ அதே கருத்தைத்தான் இம்மை, மறுமை என்பன விளக்குகின்றன. இப்பிறப்பிலேயே பசிநோய் காதல்நோய் ஆகிய இருநோய்களுக்கு மருந்தாக உணவு, காதல் வாழ்க்கையாகிய பொருள்களை நாம் அநுபவித்து வாழ்ந்தால் அவ்வாழ்வு இம்மை அல்லது குடிமை எனப்படும். "ஒழுக்க முடைமை குடிமை" என்பதையும் கவனிக்க. மறுமை என்பது சிறந்த நூல்களைக்கற்று உள்ளத்தைப் பரிசுத்தமாக்கி வாழும் வாழ்வு. இம்மறுமையின்பமாகிய உயர்ந்த வாழ்வுதான் தவத்துக்கும் துறவுக்கும் காரணமான நிலை எனக்கருதப்படுகிறது. திருவள்ளுவமாலையில் 40 வது பாடலிலுள்ள "இம்மை மறுமை

யிரண்டும் எழுமைக்கும், செம்மை நெறியிற் றெளிவுபெற" என்பதில் எழு பிறப்பு என்ற கருத்தில் எழுமை வழங்கப்படுகிறது; இரண்டாவது பிறப்பு ஏழு பிறப்புக்களில் அடங்குவதால், பாடலில் மறுமை என்பது இப்பிறப்பிலே நிகழும் உயர்தர உள்ள நிலையைத்தான் குறிக்கும். இம்மைக்குரிய, காதல்வாழ்வு, வேத்தியல் வாழ்வு ஆகிய இருவாழ்வுகளுக்குரிய இன்பம், பொருள் ஆகிய இருவிஷயங்கட்குரிய உபதேசம் இம்மைப்பொருள எனப்பட்டது. மெய்யுணர்வு, தவம், கல்வி இவற்றிற் குரிய உபதேசம் மறுமைப் பொருள் எனப் பட்டது. பொருளை ஆசிரியர் இருவகையாகப் பகுத்துத்தம் நூலை ஆக்கியிருந்தபோதிலும் அக்காலத்திலுள்ள யாப்பிலக் கணக்கட்டுப் பாடுகளுக்கு ஏற்ப முப்பால் என நூலிற்குப் பெயர் சாத்தி அதிகாரங்களை அறம், பொருள், இன்பம் என மூன்றாக வகுத்திருக்கிறார். பாயிரஞ் செய்த புலவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கையும் ஆசிரியர் சொல்லி விட்டார் என மகிழ்கிறார்கள். மகிழ்ச்சிக்குக் காரணம் அக் காலத்தில் வடமொழிப்பயிற்சிக்கு உரிமையல்லாதார்க்கு மெய்யுணர்ச்சிக்குரியதாக அறையப்பட்ட உபதேசங்களைக் கொடுத்தல் முறையன்று என்ற நிபந்தனை வள்ளுவரால் உபாயத்திற் கடக்கப்பட்டது என்பது தான்.

திருவள்ளுவர்காலத்தில் நூலினால் உணர்த்தப் படும் உபதேசங்கள் ஐந்து வகையாகவும் வகுக்கப்பட்டிருந்தன. திருவள்ளுவமாலையிலுள்ள "ஒருவரிரு குறளே முப்பாலி னோதுந்தரும முதனான்குஞ் சாலும்—அருமறைகள் ஐந்துஞ் சமய நூலாறும் வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள்" என்ற பாடலிலிருந்து மக்கட்கு வேண்டிய நூற்கல்வி வரிசைகள் ஐந்து வகையாகவும் பிரிக்கப்பட்டிருந்தன எனத் தெரிகிறது. குறளில் இல்லற ஒழுக்கம், துறவு, அரசாட்சி,

குடிமை, காதல்வாழ்வு என ஐந்து பிரிவுகள் நோக்கி அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. கௌதமபுத்தர் தங்கியிருந்த அரசமரத்தில் ஐந்து விழுதுகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.[1] வேத சாகையின் பரியாயப் பேராக கருதப்படும் (கொங்கு பிராட்டியார் கூந்தல்) கூந்தலும் ஐம்பால் எனக்கூறப்படுகிறது. ஐயாறு என்ற ஊரில் ஞானாசாரியனாகிய நந்திபிரான் தவஞ் செய்ததாகச் சொல்லப்படுகிறது. (ஐயாறு என்பது ஐவகைப்பிரிவுள்ள ஞானநூல்). பாண்டியனுக்குப் பஞ்சவன் என்ற பெயர் ஐந்து பிரிவுள்ள ஞானநூலை ஆதரித்தவன் என்றதால் ஏற்பட்டிருக்கலாம். இக்காரணங்களினால் குறளும் ஆதியில் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கும் என ஊகிக்கப்படுகிறது.

## ஐந்து பாற் பொருள்கள்.

குடிமை, துறவு, வேந்தமைவு, தடை அல்லது துன்பம், காதல் என ஐந்து பிரிவுகளிற் திருக் குறட்பாக்களை வகுத்தால் புத்திக்கும் ஆதிமுறைக்கும் பொருத்தமாயிருக்கும்.

இனி ஜாதி முறைக்கட்டுப்பாட்டைத் தழுவாமல் மக்கட்கு இம்மை மறுமை நிலைகட்குரிய ஒழுக்க முறையைத் திருவள்ளுவர் தம் குறள் நூலில் காட்டியிருக்கவும், பெரிய புராணம் பொருளதிகாரம் ஆகிய நூல்கள் ஜாதி முறையை அநுசரித்து மக்கட்கு ஒழுக்க முறை கற்பிக்கின்றன.

பெரியபுராணம் தில்லை வாழந்தணர் புராணத்தில் அரசாட்சிக் குரிய போர் உரிமை, முறை செய்யும் உரிமை, ஆகிய ஈருரிமைகளில் தகுதி அல்லது நடுவு நிலைமை எனப்

---

1. சிலப்பதிகாரம். நாடு. காண். 11 பணையைந்தோங்கிய பாசிலைப்போதி, அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி.

படும் முறை செய்யும் உரிமையைத் தானம் தவத்துடன் சேர்த்துத் தில்லையந்தணர்க்கு உரித்தாகக் கூறப்படுகிறது.

"ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்[1]"

என மேற்கண்ட புராணம் 7வது பாடலிற் சொல்லப்படுகிறது. தானம் இல்லறத்திற்கும், தவம் துறவறத்திற்கும், தகுதி அரசாட்சிக்கும் உரியன. இவை இன்பம் அறம் பொருள் என்ற முப்பாலாயடங்கும். ஆகவே முப்பாற்குரிய தருமங்கள் யாவும் அந்தணர்க்கு உரிய என்றும் அவைகளிற் சிலதான் மற்றையர்க்கு உரிய என்றும் கருத்துப்படக் கூறப்படுகிறது. இக்கொள்கையை அநுசரித்தே திருநீல கண்ட நாயனார் சரித்திரத்தில் கூறப்படும் மட்பாண்ட விவாதம் நல்லொழுக்கம் தலைநின்ற தில்லைவாழந்தணர் பேரவையில் கொண்டுவரப்பட்டு அங்கே தீர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தடுத்தாட் கொண்ட புராணத்திலும் சுந்தர மூர்த்தி நாயனார் வேறோர் அந்தணர்க்கு அடிமையாயிருக்க முடியுமா என்ற வழக்கும் திருவெண்ணெய் நல்லூர் நான் மறையோர் முன்னர்த்தீர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இச்சபை வேதபாரகரில் மிக்கார், விளங்கு, பேர், அவை எனப்படுகிறது.

இவ்விரண்டு கதைகளிலும் வழக்கு ஏற்பட்ட பிரதேசங்களில் அரசர் இருந்தார்களா அல்லவா என்ற பிரஸ்தாபமே வரவில்லை. இதற்கு மாறாக எறிபத்த நாயனார் சரித்திரத்தில் சிவகாமி யாண்டார்க்குக் குற்றம் நிகழ்ந்த பொழுது புகழ்ச் சோழனுக்கு வழக்கு முறையிடப்படாமலே எறிபத்த நாயனார் குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்கிறார்.

---

[1] திருநீலகண்ட. பாடல் 30,31.

இச்சரித்திரங்களிலிருந்து நமக்குத் தெரிவது யாதெனில் திருக்குறள் நீதிப்படி முறை செய்யும் உரிமை அரசனிடமிருந்து பறிக்கப்பட்ட பிற்காலத்தில் தமிழ் நாடு சீர் குலைந்து போய் வழக்குகளெல்லாம் வடமொழிவல்லாரே தீர்க்கும்படி ஏற்பட்டது என்பதுதான்.

---

# திருக்குறட் கருத்து.

## 1. குறளிற் காணப்படும் நால்வகை மக்கட் டொகுப்பு.

ஓவ்வொரு மக்கட் டொகுப்பினும்[1] நால்வகைப் பகுப்பினர் காணப்படுகின்றனர். அறக்கடமையோர், போர்க்கடமையோர், இல்லக்கடமையோர், தொழிலாளர் என்னும் நால்வகையினரே அவர்கள்.

இல்லக்கடமையோராவார், நிலத்திருவாளர், பண்டத்திருவாளர் என்று இரு பிரிவினராகக் காணப்படுகின்றனர். தொழிலாளர் பெரும்பாலும் வறிஞராய் இருக்கிறபடியால் அவர் வறிஞர் எனவும் பெயர் பெறுவர்.

அறக்கடமையோராவார் அருளாட்சி யுடையார். அருளானது அறக்கடமையைத் தமக்கு உரித்தெனக் கொண்ட துறவற வியலுடைய சந்நியாசிகளால் பாராட்டப்படும் குணம். அறக்கடமையோர் கூடிய அம்பலம் நம்முடைய நாட்டில் மடம் எனப்படுகிறது. முந்திய காலத்தில் இவ்வம்

1. மக்கள்த் தொகுதி என்றுவது மக்கள் தொகுதி என்றுவது எழுதினுல் இலக்கணவழுவெனத்தமிழ் ஆசிரியர் குற்றங் கூறுவர். ஜன சமுதாயம் என்றுல தமிழன்று. ஆனதால் இவ்வாறு எழுதப் பட்டது.

பலம் கூடல் எனப்பட்டது. இப்போதுள்ள சைவ மடாலயங்கள் ஆதியில் இந்நாட்டில் விளங்கிய அறக்கடமையோர் அம்பலங்களின் மரபில் வந்தவைகள். இம்மை மறுமைக் குரிய துன்பவிடைக்குக்1 கிறிஸ்துவ சமய மார்க்கந்தான் சிறந்த சாதனமெனப் போற்றப்பட்டு வாழ்க்கை மேம்பாடு அடைந்த ஐரோப்பிய அமெரிக்க தேசங்களில் காணப்படும் குருமார் சங்கமாகிய சர்ச்சு (church) என்னும் முறைப்பாடு (institution) தமிழ் நாட்டிற் காணப்படும் மேற்சொன்ன அறக்கடமையோர் அம்பலத்திற்கு நேரானதாகும். 'அருள் கருதி அன்புடையராதல் பொருள்கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.'

இராஜாங்கமுறை (state) ஒன்றேபோதும். மக்கட்குக் கோயில் அல்லது அருட்டுறை (church) என்ற மடாலய ஆட்சி வேண்டா என்பார் கட்சியை மேல் எடுத்துக் காட்டிய குறள் ஆதரிக்கவில்லை. சுங்கம் பெறுவதும் உட்பகை காண்பதும் இகலேதனக்குப் பொருந்திய ஒழுக்கமாக உடையதுமான அரசியற்றுறையானது குடிகள் கல்வி ஒழுக்கம் முதலிய மேம்பாடுகளை அடைதலில் தன் கருத்தைச் செலுத்தாது. ஆதலால் ஒவ்வொருநாட்டிலும் நல்வழித்துறை உபதேசிக்கும் நோக்கம் ஒன்றே யுடைய சங்கமும் (church) இருத்தல் வேண்டும். சங்கத்தார் பொருள்கருதித் தம்மைச் சார்ந்தார் சோர்ந்திருகக விரும்பார் என்பதும் தம் சிஷ்யர்மீது அன்பு செய்து அவர் உள்ளம் கல்வி நிலைக் குரிய அருள் நிலையை அடையச் செய்வார் என்பதும் மேற் சொல்லிய குறட்பாவின் உண்மைக் கருத்தாயிருக்கிறது.

---

1. பாபவிமோசனம்; குற்றவீடு எனத்தமிழ் நூல் கூறுவது இதுதான்.

அறக்கடமையோர் கண்ட மெய்ப் பொருள்களில் திருவள்ளுவர் சிறப்பாகக் கொண்ட மெய்ப் பொருள் யாது? ஒப்புரவு என்பதே. வைப்பு முறையில் இவ்வறம் இல்லறத்தில் வைக்கப்பட்டபோதிலும் இது துறவறத்திற்கும் சிறந்ததெனப் படவேண்டும்.

விளைபொருட்கு வேண்டப்படும் மழையை உத்தேசித்து வடமொழிமந்திரத்துடன் செய்யப்படும் யாகம் படிற்று முறை வழிபாடு எனக் கொண்டு "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டென்னாற்றுங் கொல்லோ உலகு" என்ற குறட்பாவில் உலகத்தாரால் மேகத்திற்குச் செய்யும் கைம்மாறு ஒன்றும் இல்லை என்றார். ஆனால் மக்கள் பஞ்ச பூதங்களினின்றும் மேகத்தினின்றும் பெறும் நன்மைக்கு மகிழ்ந்து வான்சிறப்பு என்று ஒரு அதிகாரம் எழுதியிருக்கிறார். எவ்வழியிலும் அருள்வழியில் நிற்பவன் கொல்லாமையறத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று ஓதியவர்,

"அவிசொரிந்து ஆயிரம்வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்றும்

"செவியுணவிற், கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து" என்றும்

கூறியிருக்கமாட்டார். இவை பின்னால் புகுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட குறட்பாக்களாக இருக்கவேண்டும். அக்குறட்பாக்களின் வடிவங்கள் "அவிசொரிந்தைந்திரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்றும் "செவியுணவிற் கேள்வியுடையார் ~~சேயுலகின்~~, ஆன்றாரோடொப்பர் நிலத்து" என்றும் இருந்தால் பொருத்தமாயிருக்கும். 'ஆயிரம் வேட்டல்' என்றால் வேள்வியால் சிறிது பலன் இருப்பதாக வள்ளுவர் ஒப்புக்கொண்ட

அமிழ்துணவின். (அமிழ்து = உ. ஞானஅநுபவம்)

தாகும்: இந்திரனுக் குரிய யாகம் என்றால் இந்திரனை உயிர் செகுக்காமல் வணங்கல் நேரிது எனக் கொள்ளப்படும். வான்சிறப்புக் கூறுவதில் "சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்கு மேல் வானோர்க்கு மீண்டு" என்ற குறட்பா இயற்றிய ஆசிரியர்க்கு அவி யுண வில்லாமற் செய்யப்படும் வழிபாடு குற்ற முடைத்தன்று. வழிபாட்டின் பயனாக மேகம் மழையைச் சொரிவது என்ற பொய்யோடு கலக்காமல் மழை கொடுத்த இயற்கையுடன் மகிழ்ந்து மகிழ்ச்சியைக் காட்டச் செய்யப்படும் வழிபாட்டிற்குத் தடையின்று என்பது வள்ளுவர் கொள்கை எனத் தெரிகிறது.

கௌதம சகிய முனி சூரிய வணக்கமும் ஜோஸ்யக் குறிமுறையும் கூடாது என்று சொன்னாரே ஒழிய வான் சாஸ்திரம் கூடாது என்று சொன்னதில்லை. பாத்தூண் அல்லது பகுத்துண்டல் தவிர்த்த யாக முறையை நியமித்த தாகக் கூறும் வேதத்தின் கர்த்தாவாகிய பிரமனை வணங்கல் கூடாது என்று புத்தர் கூறினாரே ஒழிய துறவறத்தில் நின்று யாகமுறை வெறுத்துப் பாத்தூண்முறை தழுவிய பிராமணரின் மார்க்கத்தைத் தூஷிக்கவில்லை. அவர்களும் பௌத்த ஸ்ராமணரோடொப்பர் எனக்கருத்துப்பட பௌத்த தர்மத்தில் உயர்ந்தநிலையடைந்தவரையும் பிராமணர் என்னும் நாமத்தால் புத்தர் கூறுகிறார். யாக முறையைக் கண்டித்த பௌத்தரும் சமணரும் பசுக்கொலை யாகத்தில் நிகழ்வதால் யாக முறை தவறுடைத்து என்றார்கள். வள்ளுவர், அவர்கள் போல் போலிக்காரணம் கூறுகின்றாரில்லை. பௌத்தர் மடத்திற்குப் பால் தயிர் நெய் மோர் வெண்ணெய் ஆகிய பஞ்ச கௌவிய உணவுக்காகப் பசுக்கள் மிகத்தானஞ் செய்யப்பட வேண்டியதாயிற்று. சுருதி முறையைக் கண்டித்த பௌத்தர் களுக்குத் தீங்குவிளைப்பதற்காக அவர்கட்குப் பசுக்கள்

போய்ச் சேராதபடி எக்ஞமுறையில் பசுக்கள் புதிதாக வதைக்கப்பட்டிருக்கவேண்டும். யுத்தத்தில் தொடக்கத்தில் எதிரியின் பசு நிரையைக்கவர்வதும் பௌத்தர்க்குத் தீங்கு செய்பவாவது அல்லது கவர்பவனின் நாட்டுப் பௌத் தர்க்குத் தானம் செய்யவாவது நோக்கமாக இருந்திருக்க வேண்டும். பழைய வேத மந்திரங்களில் யாகத்தில் பசுக் கொலைக்கு ஆதாரம் கிடையாது எனத் தேர்ந்த பண்டிதர் களால் கூறப்படுவதால் பௌத்தர்களுக்குக் கெடுதி கருதியே பசுக்கள் பலி செய்யப்பட்டிருக்கவேண்டும். பௌத்தர்கள் ஊன் உண்டலை அறவே ஒழித்தவரல்ல. அறவே ஊனுணவு ஒழித்த ஜைனர்கள் கொலை நிகழ்வதால் யாகம் கெடுதி என்றார்கள். திருவள்ளுவர் கடவுள் தொழுவார் அருள்வழி நிற்கவேண்டும் ஆதலால் பல்லுயிர்பேண வேண்டும் என்றும் தாமே யுண்டல் தவிர்த்து யாவரோடும் பகுத்து உண்ண வேண்டும் என்றும் கொள்கையுடையவர். கொல்லாமை அதி காரத்தில் வரும் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம்தலை" என்ற குறட்பாவில் யாகத்தில் நிகழும் இவ்விரு பாபங்களை உட்கொண்டு முறை இது எனக் கட்டளை யிடுகிறார்.

இனி உலகத்தில் தமக்கு ஊண், உடை, உறையுள், மருந்து முதலிய துப்புரவுகளை ஈவோரின் மேம்பாட்டை மறந்து தம் துறவு வழியே பெரிதெனக் கவனிக்கும் ஜைன மார்க்கத்தையும் கௌதமபுத்தர் தூஷித்தது போன்று வள்ளுவரும் நிராகரிக்கிறார். பொச்சாப்பு (அறத்தை மறத்தற் குரிய சோர்வு) என்னும் குற்றம்நிகழ்வதும், இன்பமே நோக்க மாக உடையதுமான யாக முறையை அங்கீகரி யாதது போல முயற்சியின்மை யாகிய மடிமைக் குற்றம் நிகழ்வதற் குரியதும், வெறுப்பே நோக்கமாக உடையதுமான ஜைனரின் துறவு

முறையையும் திருவள்ளுவர் சிறந்த மார்க்கமாக ஒப்புக் கொள்ளவில்லை. சிரௌதயாக முறைக்கும் கொடுந் துறவு முறைக்கும் இடையில் ஒப்புரவு என்று சிறப்பித்துக் கூறப் பட்ட வழியின் பெருமையைத் திருவள்ளுவர் வற்புறுத்தி உபதேசிக்கிறார்.

"உலகந் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு." குறள். அறிவுடைமை 5.

இங்கே ஒட்பம் என்பது துறவுமார்க்கத்திற்குரிய ஞானம். உலகத்தாருடைய க்ஷேமத்தையும் தழுவிநடக்கும் துற வொழுக்கமே துறவொழுக்கம் எனப்படும்.

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்" குறள். ஒழுக்கம். 10

ஆகம நூற்களைக் கற்பதற்கு உரித்தான துறவியல் தன்னுள்ளத்திற்கு மட்டும் உவகை கொடுப்பது. உலகத் தார்க்கு உபதேசித்து அவருடன் அளவளாவி வாழ்வது தான் சிறந்த மார்க்கம் என்பது இச்குறளின் கருத்து.

"மிகல்மேவல்[1] மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவினவர்" குறள். இகல். 7.

தனியுரிமைப் பாஷை, தாம் உறையும் நாட்டின் எல்லைக்குள் அடுத்து உறைதல் முதலிய நிமித்தங்களினால் கூட்டுறவாகச் சேர்ந்து வாழக் கடமைப்பட்ட ஒரு தேச மக்களிடையே பிரித்தல் என்னும் பண்பின்மையை விளைக்கும் நோய்க்குக் காரணமான ஜாதிவேறுபாட்டு முறையுடைய ஸ்மிருதி

1. மிகல்மேவல் என்பது ஐந்தாம் வேற்றுமைக் காரணப் பொருளில் வந்தது. உரைகாரர் கூறுகிறபடி இரண்டாம் வேற்று மைப்பொருளில் வரவில்லை.

தர்மம் பிறரை இழிவுபடுத்தித் தாம் வெற்றி பெறுதலே நன்மை எனக் கற்பித்தலால் அவ்வாறு கற்பிக்கப்பட்டார் மெய்ப்பொருளாகிய சத்தியவழியைக் காணார் என்பது இக்குறளின் கருத்து.

தவமாகிய துறவொழுக்கத்தில் ஒழுகுபவர் தமக்கு வேண்டும் உண்டி மருந்து உறையுள் முதலான துப்புரவிற்கு இல்லறத்தாரிடைச் சார்தலால் அவ்வில்லறத்தாரோடு அளவளாவாமல் தனியே தன்னயம் கருதி வாழ்தலில் களவு என்னும் குற்றம் உண்டாகிறது.

"அளவறிந்தார் நெஞ்சத்தறம் போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு" குறள். 29. 8.
இங்கே 'அளவு' என்பது மெய்ப்பொருள்.

ஆதலில் இகற்குற்ற முடைய சுமார்த்த ஜாதிதர்மமும் களவுக் குற்றமுடைய சமணரின் துறவொழுக்க தர்மமும் திருவள்ளுவரால் விலக்கப்பட்டு அளவாகிய நடுவு நிலை தர்மம் உபதேசிக்கப்பட்டது.

## போர்க்கடமையோர்

பொருளதிகாரம் புறத்திணைப் பகுதியாகிய வாகைத் திணைக்குத் துறை வகுக்கும் சூத்திரத்தில் அறம், மறம் என இருபாற்பட்ட துறைகள் கூறப்படுகின்றன. இத்துறைகளில் மறத்துறையில் போர் முறைமட்டும் கூறப்படுகிறது. அறத்துறையில் அவைக்கண்சான்றோர் நீதி செய்யும் முறையும், பொருளொடு புணர்ந்த அரசியல் முறையும் அருளொடு புணர்ந்த துறவு முறையும் வண் புகழ்க் கொடைமையுடைய இல்லறவியலும் கூறப்படுகின்றன. போர்த் துறையில் வெற்றி பெறக்கூடிய ஒரு நாட்டிற்றான் பலவகை நாகரீகமும் தழைக்கும் என்ற காரணம்பற்றிப் போர்முறை

தனியே ஒரு துறையாகவும், போர்முறையால் காக்கப்பெறும் துறவு, இன்பம், நீதி ஆகிய மற்றைய இயல்கள் ஒரு துறையாகவும் வகுக்கப்பட்டது.

இந்நான்கு பகுதிகளுள் குறளில் அறம் எனச் சிறப்பித்துச் சொல்லப்பட்ட துறவறம் குறளாசிரியரின் கருத்துப்படி மேல் விளக்கப்பட்டது. இங்கு போர் முறைக்கு உரிமையுடைய அரசரின் தன்மை விளக்கப்படும்.

போர்க்கடமையோராவார் பொருளாட்சியுடைய அரசர். போர்க்கு இன்றியமையாமை வேண்டப்படும் நால்வகைப் படை அரசர்க்குப் பிரதம உறுப்பானபடியால் திருக்குறளில் பொருட்பாலில் முதற்பாடலில் கூறப்படும் ராஜ்ய அங்கங்களில் படை முதலாவதாக வைக்கப்படுகிறது. உரையில் ' அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச்செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார் ' என்று பரிமேலழகர் கூறுவது, பிறழ்ந்த உணர்ச்சியுடைத்தாகும்.

தமிழ் நாட்டிலுள்ள உடையார், வன்னியர்(—வள்ளியர்), மறவர், அகம்படியர், கள்வர் (களவர்—களமர்—அம்பலவர் போர்க்களத்திற் குரியார்), காடவர் (—வேட்டுவர், குறவர், மாயோன் மேயமுல்லைக்காட்டிற்குறிய இடையர்), வலைஞர், முத்திரியர், பண்ணைகாரர் முதலிய தொகுப்பினர்கள் பலரும் ஆதிகாலத்தில் இந்நாட்டில் போர்க்கடமை பூண்டு அறக்கடமையோர், இல்லக்கடமையோர், வறிஞர் ஆகிய முத்தொகுப்பினரையும் தம் படைத்தொழின்மையாற் பேணிக் காத்துவந்த போர்மன்னர்களின் மரபில் வந்தவர்கள்.

## இல்லக்கடமையோர்

இனி இல்லக்கடமையோரில் முதலாமவாரன நிலத்திருவாளர், திருக்குறள்—ஒழிபியல்—குடிமை என்னும் அதிகாரத்

தலைப்பெயரில் சுட்டப்பட்ட குடிமைக் குணமுடைய இற்பிறந்தாரே. தெரிந்த "இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றுமில்" என்ற குறட்பாடலிற் சுட்டப்பட்ட இனம் அல்லது அவைக்குரியார் குடிமையுடைய இந்நிலத்திருவாளரே யாவர். பொருட்பால் முதற்குறளாகிய 'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும், உடையான் அரசருள் ஏறு' என்பதில் குடி என்பது இந்நிலத்திருவாளரைச் சுட்டும். மன்னன் தன்கீழ் வாழ்பவர்க்கு முறைசெய்யுங்கால் அவனுடனிருந்து முறைசெய்யத் துணை புரியும் அவையத்தார், நிலத்திருவாளராம் இக்குடிமையுடையர் தொகுப்பினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர்*

தமிழ்நாட்டில் பண்டையக்காலத்தில் குடிகள் உரிமையாக ஆண்டுவந்த நிலவுரிமைச் சொத்தானது ஒருகுடியிலேயே நிலைத்துநிற்கும்படி வழக்குக்கட்டுப்பாடு (law) அமைந்திருந்தது. நிலையியற் பொருள் இயங்கியற் பொருள் என்ற பாகுபாடு இடம்பெயர் தலைக்காரணமாகக் கொண்டதன்று. உரிமையாளர் மாறுவதைக்கொண்டது. அசையும் பொருள் அசையாப் பொருள் என்ற வழக்கிற்போல நிலமாகிய அசையாப் பொருள் தன்னை உடைய ஒருவனால் விற்கப்பட முடியாது. ஆகையால் நிலத்துக்குரியவர் தம்முடைய நிலைமையைப் பலதலைமுறையாகக் காப்பாற்றக்கூடியவர். தம் நிலைமையால் கொடையிலும் அரசனுடனிருந்து முறைசெய்தலிலும் கல்வித்தேர்ச்சியிலும் பலதலைமுறையாகப் பழகி வந்தவர். நிலமும் ஒரு குடியிற்பிறந்தார் பலராலும் தனித்தனியே பங்கிடப்பட்டுத் தனித்தனியே உரிமைகொள்ள முடியாது. அயல்நாட்டினின்று குடிவந்தவர் அரசனிடமிருந்து நிலம் அடைந்தாலொழியத்தம் இயங்கியற் பொருளாகிய பொன் முதலியகொண்டு பழங்குடியில் வந்தவர்

* அடியார்தமக்கு ஓர்குடியே ஒத்தியால். சு. தேவா திருவஞ்சைக் களம். 4.

நிலத்தை விலைக்குப் பெற்றுக்கொள்ளமுடியாது. ஆதலால் முன்னமே நிலம் உடையவர்கள் புதிதாக வந்த குடியினின்றும் பிரிக்கப்பட்டுப் பழங்குடி எனப்பட்டார்கள்.

> *வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி*
> *பண்பிற்றலைப் பிரிதலின்று—குடிமை : 5.*

இங்கே பழங்குடி என்றதும், வழங்குவது என்றதால் பொருட்கொடை அவர் பயிற்சி என்பதும் பண்பில் ஒழுகல் அவருடைய இயற்கை என்பதும் ஆசிரியர் குறித்துச் சொன்னது நோக்கத்தக்கது. மேல் மூன்றுவது குறளில் வாய்மைக்குடி என்று பழங்குடியைச் சுட்டினது அவைக்கு முறைசெய்ய அரசனால் தேர்ந்து எடுக்கப்படுதல் நோக்கி என நாம் அறியவேண்டும். இப்பழங்குடியிற் பிறந்தவரே இற்பிறந்தார், குடிப்பிறந்தார் எனப்பட்டார்கள். உள் நாட்டிற் பிறந்த நிலத்திருவாளர் என்பது இதன்கருத்து. Native Gentelmen or Landlords என்று இக்கருத்தை இங்கிலீஷ் மொழியிற் கூறலாம். உள்நாட்டு மக்களைப் படைவீரராகக்கொண்டு நாடுகாத்துவந்த காலம்வரையில்தான் பழங்குடியின் ஆதிக்கம் நாட்டில் நிலவும். பழந்தமிழ் மன்னரிற் பின்வந்தார் புறநாட்டு மக்களைக் கூலிப்படையாகக்கொண்டு நாடுகாத்தகாலத்தில் புறநாட்டு மக்களுக்கு உறவினரான பலரும் உள்நாட்டில் அரசனிடமிருந்து நிலவுரிமைபெற்று முறைசெய்யவும் தலைப்பட்டபின் நாட்டின் முறைசெய்யும் நீதியும் புறநாட்டு நீதியாக மாறியிருக்கவேண்டும்.

இனிப்பொருட்பால் இரண்டாவது குறளாகிய "அஞ்சாமை ஈகை யறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கியல்பு" என்பதில் படைத்தலைமை பூண்டற்குரிய அரசனுக்கு அப்படைக்குரிய குணங்கள் வேண்டும் எனக்கூறப்

பட்டது. அடுத்த மூன்றாவது குறள் " தூங்காமை கல்வி, துணிவுடைமையிம் மூன்றும், நீங்கா நிலனாள்பவற்கு " என்பதில் உடனிருந்து முறைசெய்யும் வாய்மைக்குடிக்[1]குரிய குணங்கள் அவ்வரசனுக்கு வேண்டும் எனக்கூறப்பட்டது. " அறனிழுக்காதல்லவை நீக்கி மறனிழுக்கா மானமுடைய தரசு " என்ற அடுத்த நான்காவது பாடலில் முறைசெய்யும் குடியினத்திற்குரிய அறனும் போர்செய்யும் படைக்குரிய மறனும் ஆகிய இரண்டு குணங்களும் அரசனுக்கு இருக்க வேண்டும் எனக்கூறப்படுகிறது.[2] அரசனால் ஈட்டப்படும் பொருளாகிய கூழுக்குரிய தன்மைகள் அடுத்த 5-வது குறட் பாடலில் கூறப்படுவது கவனிக்கப்பட்டால் மேற்சொல்லப் பட்ட கருத்துக்கள் வலியுறுகின்றன. அமைச்சர்க்குரிய வினைசெய்யும் குணம் 5-வது குறட்பாவான " இயற்றலும் ஈட்டலும், காத்தலும், காத்தவகுத்தலும் வல்லதரசு " என்பதாலும் 10-வது குறட்பாவிற் சுட்டப்பட்ட 'குடி யோம்பல்' என்ற மொழியாலும் குறிக்கப்பட்டது. பத்தா வது குறளான " கொடையளி செங்கோல் குடியோம்பனான் கும், உடையானாம் வேந்தர்க்கொளி " என்ற பாடலில் 5-வது உறுப்பான நட்பு என்பது எதிர்க்கும் மன்னரைப் பொருட்கொடையாலும் பணியும் மன்னரை அவர்தம் எதிரி களினின்றும் காத்துத் தலையிரக்கஞ்செய்து காத்தலினாலும் ஆக்கப்படவேண்டும் எனக்கூறப்படுகிறது. செங்கோல் என்ற சொல்லால் வாய்மைக்குடியுடன் அவைக்கண்ணிருந்து முறைசெய்யும் குணம் சுட்டப்பட்டது.

---

1. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார். கு. 95-2. வாய்மைக்குடி கு. 95-3

2. பொருளதி. 76 சூத்-அறத்துறை, மறத்துறை என்ற பாகுபாடு கவனிக்க.

அரசனுக்குரிய ஆறு உறுப்புக்களில் அரணாகிய கடைசி உறுப்பு ஒன்றுமட்டும் பொருட்பால் முதலதிகாரத்திற் சுட்டப்படவில்லை. பொருட்பால் 5-வது அதிகாரம் முதற் குறட்பாவாகிய "அறிவற்றங்காக்குங் கருவிசெறுவார்க்கும், உள்ளழிக்கலாகாவரண்" என்பதில் அறிவானது பகைவரால் அழிக்கலாகா உள்ளரண் என விளக்கப்பட்டபடியால் எண்ணறிவு அல்லது ஞாபகவறிவோடு இயைபுடைய முதலைந்து இறைமையுறுப்புக்களே பொருட்பாலில் 'இறைமாட்சி' என்னும் தலைப்பெயருடைய முதலதிகாரத்தில் சுட்டப்பட்டன. தொழிலறிவிற்குரியதும் பகைவரால் அழிக்கக் கூடியதுமாகிய புறவரணானது மற்றைய உறுப்புக்களோடு ஒத்த சிறப்பின்மை நோக்கி இவ்வதிகாரத்தில் கூறப்படவில்லை.

பொருட்பால் முதற் குறட்பாவிற் கூறப்பட்ட உறுப்புக்களின் முறைவைப்பு மேற்சொன்னபடி நேரிதாயிருக்கப் பரிமேலழகர் "அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாயினும் ஈண்டுச்செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார்" எனக்கூறுவது பொருத்தமன்று.

பௌத்தரின் கொள்கைகளைக் காட்டும் பாலிபஷைச் சொற்களை இங்கிலீஷ் மொழியில் விளக்கும் ஓர் அகராதியில் இராஜாங்கம் என்னும் தலைப்பின்கீழ் அவ்வங்கங்கள் ஏழு எனக்கொள்ளப்பட்டும் அவ்வேழனுள் ராஜனும் ஒரு அங்கம் எனக்கொள்ளப்பட்டும் மற்ற ஆறங்கங்களுக்கு விபரம் கூறுவதில் இவ்வேழங்கங்களும் தோன்றுவதற்கு மூலகாரணமான நாட்டையாவது நாட்டில் வாழும் குடிசமூகத்தையாவது ஓர் அங்கமாகக் கூறவில்லை. அரசன் தான் உரிமையுடன் ஆளும் நாட்டிற்குப்பதிலாக அவன் போர்வெற்றியால் கைப்பற்றிய 'விஜயம்' எனப்பட்ட பிறநாடு ஓர் அங்கமாக அவ்வகராதியில் கூறப்படுகிறது.

ஆதலின் எந்தக்குடி சமூகத்திற்கு அல்லது நாட்டிற்கு அரசாட்சி யுறுப்புக்கள் வேண்டப்படுகின்றனவோ, அக்குடி சமூகம் அல்லது அவர் வாழும்நாடு அவ்வுறுப்புக்களில் ஒன்ருகக் கருதப்படமுடியாது என்பது எம்முறையிலும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயம்.

பாலிபாஷைச்சொல் விளக்க அகராதியில் 'விஜயம்' எனப்படும் பிறநாடு ஓர் அங்கமாகக் கொள்ளப்பட்டதும் நேரானதன்று. பிறமன்னர்களை நட்பாளராகக் கொண்டு தன் நாட்டை முறையுடன் ஆளும் மன்னனுக்குத் தன்நாடே அங்கமாவதல்லது பிறர்நாடு அங்கமாகாது. பாலி பாஷையாகிய அவ்வடமொழி முறையிற்கொண்ட விஜயம் என்னும் பிறநாடு அம்மன்னனுடைய தாய்நாட்டுக் குடிசமூகத்தின் உறைவிடமாகாமல் பிறகுடிகளின் உறைவிடமானபடியால் வடமொழி முறையைப் பின்பற்றிக்குடி என்ற சொல் மூலம் வள்ளுவர் 'நாடு' என்பதையும் ஒரு உறுப்பாகக் கருதினர் என நாம் கருதமுடியாது.

> "தள்ளா விளையுளும் தக்காருந் தாழ்விலாச்
> செல்வருஞ் சேர்வது நாடு"

என்ற குறட்பாவின் மூலம் தக்காராகிய அறவோர் நாட்டிற்குப் பிரதான உறுப்பானபடியால், குடி என்ற சொல்லால் வள்ளுவர் முறைநூல்கற்று முறைசெய்யும் பெருங்குடியாளரின் அவையைக் குறித்தார் என நாம் கருதவேண்டும்.

'குடிமை' என்னும் அதிகாரத்தின் 2-வது குறட்பாவில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் 'குடிப்பிறந்தார்' என்பது 'குடியின்கட் பிறந்தாரில் உயர்ந்தார்' என்ற கருத்தில் அமைந்திருப்பதும், அவ்வதிகாரத்தின் 3-வது குறட்பாவி

துள்ள 'குடி' என்பது ஆகுபெயராய்க் குடியின்கட் பிறந் தார் என்ற கருத்தில் அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கன.

ஜாதிவரிசையை எண்ணுங்கால் பௌத்த நூல்கள் க்ஷத்திரியர், பிராமணர், கிரஹஸ்தர், சூத்திரர், எனவும் ஸ்மிருதி நூல்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் எனவும் வரிசைப்பட எண்ணுகிற படியால் ஸ்மார்த்த நூற்படி உரை எழுதத் துணிந்த உரையாசிரியர் பொருட் பாலின் முதற் குறளின் உறுப்புக்களில் க்ஷத்திரியர்க்குரிய படையைத் தம்மால் புரோஹிதரோடு இயைபுடையவராகக் கருதப்பட்ட அமைச்சர்க்கு முன் முதல் வரிசையில் வைத் ததை நேரிது எனக் கொள்ள மனம் எழாமல் செய்யுளுக்கி முறை பிறழவைத்திருப்பதாக உரைத்தார். பௌத்தர் முறையையும், ஸ்மார்த்த வைதீகர் முறையையும் பின்பற்றாத தமிழ் முறைப்படி படைஞர் முறைஞர், புரோஹிதர், அமைச்சர் என்ற நால் வகையினுள் அடங்காதவர்களும் ஆகமநூலாற் சொன்ன ஒப்புரவுதர்மத்தை அநுசரிப்பதைத் தம் கடப்பாடாகக் கொண்டவர்களுமாகிய அந்தணர் துறவற வொடுக்கத்தில் உறைபவரானபடியால் லௌஹீகத்திற்குரிய நால்வகைசசாதிகளில் ஒருவகையினராகக் கருதப்படவில்லை. இவ்வந்தணராகிய நீத்தார் பொருட்பாலிற்கு முன்வரிசையில் வைக்கப்பட்ட அறத்துப்பாலுக் குரியராய்க் கூறப்பட்ட படியால், பொருட்பால் முதற்குறளில் கூறப்படும் இராஜாங்க உறுப்புக்களுள் ஒருவராகக் கருதப்படமுடியாது. கடவுள் வாழ்த்து அதிகாரத்திற்குரிய இரண்டாவது குறள் உரையின் பிரகாரம் பரிமேலழகர் ஆகமவாதி யானபடியால் பரிமே லழகரே பொருட்பால் முதற் குறளுரையில் உறுப்பு முறை வைப்பைப்பற்றி இவ்வாறு எழுதினர் என்று நாம் கொள்ள முடியவில்லை. இவ்வுரை யாரோ புகுத்திவிட்ட செருகு.

உரை எனக் கருதுதலே தகுதியுடைத்து. அறவோரிடம் தமிழிலுள்ள அறநூலையும் நீதிநூலையும் கற்று அரசரிடம் முறை செய்யத் தேர்ந்தெடுத்தற்குரியார் உண்ணாட்டு நிலத் திருவாளர் என்ற கொள்கைக்கு இணங்காமல் வடமொழி வல்ல புரோஹிதரும் அவர்தம் சிஷ்யர்களான அமைச் சருமே பொருளீட்டும் வினை செய்வதற்கு மட்டு மன்று முறை செய்தற்கும் உரியர் எனத் தம் கொள்கையைப் புகுத்தும் பொருட்டு பரிமேலழகர் பேரால் இச்செருகு உரைகாரர் குடி என்பதை 'நாடு' எனக் கொண்டு பெரியா ரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தின் அவதாரி கையில் பெரியராவார் புரோஹிதரும் அமைச்சரும் என வலிந்துரைவகுத்தார். பெரியராவார் வாய்மைக் குடியாகிய நிலத்திருவாளரே. அவர் அரசரிற் பெரியாரன்று ; குடிகளில் அறனறிந்து மூத்த அறிவுடையராய்ப் பெரியாரானவர்.

இனி இல்லக்கடமையோரில் வேறொரு உட்பிரிவினரான பண்டத் திருவாளர் என்னும் தொகுப்பினர் திருக்குறளில் நடுவு நிலைமைக் குரிய அதிகாரத்தின் கடைசிப் பாடலிற் சுட்டப்படுகிறது. அப்பாடல் வருமாறு : " வாணிகஞ் செய் வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந்தமபோற் செயின்." இக் குறளுரையில் "இப்பாட்டு மூன்றனுள், முன்னைய இரண்டும் அவையத்தாரை நோக்கின; ஏனையது வாணிகரை நோக் கிற்று. அவ்விருதிறத்தார்க்கும் (நடுவுநிலைமையாகிய) இவ்வறம் வேறாகச் சிறந்தமையின்" எனக்காணப்படுவது ஆராய் வதற்குரித்து. அவையத்தாராகிய நிலத்திருவாளர் வாணி கத்திற்குரிய பண்டத்திருவாளர் ஆகிய இருதொகுப்பினரும் ஓரினமானபடியால் ஒருங்கு எண்ணப்படுகிறார்கள் என நாம் கருதவேண்டியிருக்கிறது. பொ. வாகைத்திணை 3வது சூத்திரத்தில் இரு மூன்று மரபின் ஏனோர் என்று வேளா

ளரையும் வாணிகரையும் தொகுத்துச் சுட்டியது கவனிக்கத் தக்கது. மேலும் படை குடிகூழமைச்சு என்னும் இப்பொருட்பால் முதற்குறளில், குடி என்பதைப் பண்டை யோரிற் சிலர் அரசனுடனிருந்து முறை செய்யும் இனம் அல்லது அவை என்று கொண்டிருந்தார்கள் என்ப தற்குச் சான்று தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் உரையில் ஓரிடத்திற் காணப்படுகிறது. பொருளதிகாரம் புறத்திணையியல் 21வது சூத்திரத்திலுள்ள "பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்" என்னும் வாக்கியத்திற்கு உரை எழுதப்படுங்கால் 'அரசர்க் குரிய படை குடி கூழ் அமைச்சு நட்பு முதலியனவும்....ஆகிய பொருட்டிறத்துப் பட்ட வாகைப் பகுதியானும்" எனக் காணப்படுகிறது. ஆகவே பொருட் பாலின் முதற் குறட்பா இச்சூத்திரத்திற் குறிக் கொள்ளப் படுகிறதாக உரைகாரரால் கருதப்படுகிறது எனத் தெரிகிறது.

புறத்திணையியல் 35வது சூத்திரத்திலுள்ள 'கண்படை கண்ணிய கண்படை நிலையும்' என்ற வாக்கியத்திற்கு "அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்களுக்குக் கண்துயில் கொள்ளலைக் கருதிக் கூறிய கண் படை நிலையும்" என்று உரை எழுதப்படுகிறது. கண் படை கண்ணிய என்றார் கண்படை முடிபொருளாக இடை நின்ற உண்டி முதலியனவும் அடக்குவதற்கு.

மேலே சொன்னபடி பொருட்பால் இரண்டாவது குறட் பாவில் அஞ்சாமை முதலிய படைத்தலைவர்க்குரிய நான்கு குணங்கள் கிளந்தோதப்பட்ட பின், மூன்றாவது குறட்பாவில் முறை செய்யும் இனத்திற்குரிய தூங்காமை முதலிய முக் குணங்கள் கிளக்கப்பட்டிருப்பதை நன்று நோக்கினல்

'தூங்காமை' என்ற சொல்லின் மெய்க் கருத்து நெகிழவிடப் பட்டு அச் சொல்லின் பொய்க்கருத்தான[1] போலிப் பொருளை உட்கொண்டு மேற்கண்டவாறு பொருளதிகார உரைகாரரால் உரை வகுக்கப்பட்டிருக்கிறது என நாம் கருதவேண்டியிருக் கிறது.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு.

என்பது குறட்பா. இங்கே அரசன் உடனிருக்கும் அவை முன்னால் முறையிடப்பட்ட வழக்கில் நியாயமான தீர்ப்புக்கு உதவக்கூடிய எல்லா விஷயங்களையும் விடாமல் ஊன்றிய கருத்துடன் விழித்துக் கவனிக்கும் குணம் (இது இங்கிலிஷில் **comprehensive vigilant understanding of all the circumstantial evidence in the case** எனப்படும்) தூங்காமை எனப்படுகிறது. இவ்வுண்மைக் கருத்துக்குப் பதிலாக இச் சொல்லிற்கு பொருளதிகார உரைகாரரால் உறங் காமை அல்லது கண்படாமை எனப்போலிப் பொருள் கொடுக்கப் படுகிறது. வெகு நேரம் அரசனும் அவையத் தாரும் அவையில் தங்கி காலம் கழித்து எய்த்துப் போனது போலவும் பக்கத்தில் நிற்கும் அமைச்சர் உண்டி முதலியன கொணர்வித்து உண்பதற்கு அவர்களைத் தூண்டுவது போலவும் புலவர் பாடுவது வழக்கம் எனவும் சொல்லப்பட்டு முறை செய்வதற் குரிய ஊக்கம் என்னும் தன்மையும் முறை செய்யும் கடமையும மறைக்கப்படுகிறது. இக்குறட்பாவிற் சொல்லப்பட்ட குணம் மூன்றும் முறை செய்யும் இனமாகிய குடிமையாளரை நோக்கின. இக்குடிமைக் குணம் 'பல

1 குறளுக்குப் பிந்திய காலத்தில் 'தூங்கு' என்பது துயில் என்றும் கருத்துடன் வழங்கலாயிற்று.

குடிகூழ்' என்ற வரிசையில் 'குடி' எனச் சுட்டப்பட்ட வருடைய குணம் புறத்திணையியல் 21வது சூத்திரத்திலுள்ள 'பகட்டினானும் மாவினானும் துகள்தபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்' என்ற வாக்கியத்தில் முறைசெய்யும் பொருட்டு நிலத்திருவாளர் தொகுப்பினின்றும் அரசனால் தேர்ந்து எடுக்கப்பட்ட இனமே சுட்டப்படுகிறது. பொருளதிகார உரையில் முறை செய்தலில் தூங்காமை என இம்மூன்றாவது குறட்பாவை நோக்கிப் பொருள் எழுதாமல் உழவஞ்சாமை பகையஞ்சாமை எனப் பொருட்பால் 2வது குறட்பாவாகிய 'அஞ்சாமை ஈகை' என்ற பாடல் நோக்கிப்பிழைபடப் பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது குறட் பாவானது படைத்தலைவர் குணமான மறத்தின் பாலது; மூன்றாவது குறட்பாவோ முறைத் தலைவர் குணமான அறத்தின் பாலது. புறத்திணையியல் 21வது சூத்திரம் மறத் திற்கு ஒன்பது துறையும் அறத்திற்கு ஒன்பது துறையும் கூறுகிறது. 'பகட்டினானும்' என்ற துறையானது அறத்தின் பாலதானபடியால் மறத்துறைக் குரிய பொருட்பால் 2வது குறட்பாவை உட்கொண்டு உரைவகுத்தது தவறுதலே. அறத்துறைக்குரிய 3வது குறட்பாவை உட்கொண்டே இத்துறைக்கு உரைவகுக்கவேண்டும்.

இச்சூத்திரத்திலுள்ள 'கட்டில் நீத்தபாலினானும்' என்ற துறைக்கு இடப்பட்ட உரையும் தவறுதலாயிருக்கிறது. "அவையத்தாருடன் முறை செய்ய ஏறிவீற்றிருந்த அரசன் முறைக்கட்டிலிலிருந்து தீர்ப்புத் துணிந்து கொடுத்த பின் அதனினின்றும் விலகிய" என்பது பொருள். முறைசெய்யும் நிலத் திருவாளராகிய குடிமையுடையார் அமைச்சரின் மேம்பட்டார் என்ற கொள்கையை மறைக்க இவ்வாறு பிறழ்ந்த உரை எழுதப் பட்டிருக்கிறது. 'எட்டுவகை நுதலிய

அவையத்தானும்' என்று சூத்திரத்தில் அடுத்து வழக்கியல் துறை கூறப்படுவது கவனிக்கப்பட்டால் 'கட்டில்' என்பது முறைக்கட்டிலேயே சுட்டும் என்பது தெளிவு.

புறத்திணையியல் 21வது சூத்திரத்தின் உரையில் எட்டு வகை அவையத்தானும் என்பதன் கீழ் மேற்கோளாக ஆளப்பட்ட ஆசிரிய மாலை புறத்திரட்டுப்பாட்டினுள்ள "தூய்மையின் காதலின்பத்துத்தூங்கி[1]" என்பதைக் கவனித்தால் தூங்காமை என்பதற்குச் சிலர் பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கத்தில் தூங்காமை என்று கருத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

ஆகவே 'படை குடி' என்பதில் குடி என்பது முறை செய்யும் அவை எனக் கருதப்பட்டு வந்தது எனத் தெரிகிறது.

சூத்திரத்தின் உரையிற் 'பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்' என்பதன் கீழ் பொருட்பாலின் முதற் குறட்பா மேற் கோள் காட்டப்பட்டுப் பின் "நாடு அரண் முதலாகக் கூறுவன எல்லாம் திருவள்ளுவப் பயனிற் காண்க" என்றும் உரைக்கப்படுகிறது. குடி என்பது அவை என்பதைச் சுட்டு வதாக மேலுரை மூலம் வெளிப்பட்டும அதை மறைக்கப்பின் யாரோ ஒருவர் 'குடி' என்பதை நாடு[2] எனக் கொண்டு

1. இப புறததிரட்டுப்பாடல் குறளுக்குப் பின்னல் ஆக்கப் பட்டிருக்க வேணடும்.

2திருவள்ளுவ மாலையில் போககியார் பாடலில் பொருட்பால் இயல்கள் ஏழு என வகுக்கபபடுவதில் நாடு என்ற வகை கூறப் படவில்லை. வல்லரண் என்னும இயலுக்கு இரண்டு அதிகாரங்கள் உள எனப்படுகிறது. ஆனல பொருட்பாலில் அரணுக்கு ஒரு அதிகாரம்தான் அமைந்திருக்கிறது. ஆதலால் வள்ளுவரால் 'நாடு' என்பது ஆறு உறுபபில் ஒன்ருகக் கருதபபடவில்லை எனவும் அரணு

உரை எழுதுகிறார். இது செருகுரையே எனத் தெற்றிதில் அறியலாம். பொருட்பால் இரண்டாவது குறட்பாவிலுள்ள ஈகை என்பது படைக்குரியது எனப் பரிமேலழகரின் உரையில் காணப்படுகிறது. இவ்வீகைத் தன்மையை மறைத்து அரசனிடம் பொருள் பெறுதற்குரியார் வேறு பரிசின் மாக்கள் எனக் கொள்ளும் பொருட்டு புறத்திணையியல் 90 வது சூத்திரத்தின் 'கண்படை' என்ற பகுதியின்கீழ்,

"வாய்வாட்டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
ஓவா ஈகையின் உயிர்ப்பிடம் பெறுஅா
களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்தினரே
உலகம் காவலர் பலா விழித்திருப்ப
வறிது துயில் கோடல் வேண்டுமெ நின்
பரிசின்மாக்களும் துயில்க மாசிறிதே"

என்ற மேற்கோட்பாடல் காணப்படுகிறது. இல்பொருளும் சொல்லழகும் உடைய செவிக் கினிய இவ்வின்பத்துறை (art)ப் பாடலிலுள்ள 'துயில்' என்பதும குறட்பாவிலுள்ள 'தூங்காமை' என்பதிற் கருதப்பட்ட தூங்குதல்

---

க்குரிய மற்றொரு அதிகாரம எடு பட்டுபோயிருக்கிறது எனவும் தெரிகிறது. திருவள்ளுவமாலை 20வது பாடலில் 'வீடொன்று பாயிரம் நான்கு' என்றிருபபது, 'நாடொனறு பாயிரம்' என இருந் திருக்கலாம. 'நாடு' அதிகாரம ஆதியில் நூலகததுப் பாயிரத்தில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆறுறுபபினுள ஒன்றான குடியை 'நாடு' எனக் கொணடு நாட்டை அரசனுடைய உறுபபாகக் கொள்ளக்கருதி நாடு பினனுல் பொருட்பாலில் வைக்கபபட்டிருக் கிறது; பாயிரததில் 'நாடு' அதிகாரததிறகுப் பதிலாக வான் சிறப்பு புதிதாக ஆக்கபபட்டிருக்கவேண்டும. 'மாரிமாட்டென்றுற்றுங் கொல்லோ உலகு' எனக் கூறிய ஆசிரியா வான்சிறபபுக் கூறி யிருக்கமாட்டாா. நூலகததுபபாயிரமும் சிலப்பதிகாரம் சிவஞா. சித்தி என்ற நூல்களிற் போல ஆதியில் மஙகலவாழதது என்னும் தலைப்புபபேரைக் கொண்டிருக்க வேணடும்.

என்பதும் ஒரே கருத்துடையன எனப் பொருளறிகாத உரைகாரர் மயங்கி உரைவகுத்துச் சூத்திரத்தோடு இணங்காத மேற் கோட்பாடலும் எடுத்தாளுகிறார்.

## வறிஞராகிய தொழிலாளர்

இனி மக்கட் டொகுப்பின் நாலாவதாக எண்ணப் பட்ட பெருமபான்மைப் பகுதியினரான வறிஞர் நிலைக் குரிய தொழிலாளர் என்னும் தொகுப்பானது பொருட் பாலின் மூன்றாவது இயலான ஒழிபியலில் நல்குரவு என்னும் தலைப்பெயர்க்குரிய அதிகாரத்தில் 6வது பாடலான "நற் பொருள் நன்குணர்நது சொல்லினும் நல்கூர்ந்தார், சொற் பொருள் சோர்வுபடும்" என்ற பாடலில் 'நல்கூர்ந்தார்' என்ற மொழியாலும் இவ்வதிகாரத்தின் கடைசிப் பாடலான "துப்புரவில்லார் துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று" என்ற பாடலிலுள்ள 'துப்புரவில்லார்' என்ற மொழியாலும் சுட்டப் படுகிறது. இத்தொகுப்பினர்தாம் வடமொழி ஸ்மிருதியிற் கூறப்பட்ட சூத்திரர் என்ற பதத் திற்கு இலககானவர். இவர்களையும் தங் குடிகளுடன் பொருத்தி அரசன் வாழ வேண்டும் என்பது குறித்துத் தான் பொருட்பால், அரசியலின் கடைசி அதிகாரம், அரசன் இடுக்கணில் அழியலாகாது என்ற கருத்துக் கொண்ட இடுக்கணழியாமை என்பது பற்றி, எழுந்தது. 'நல்குரவு' என்ற அதிகாரத்தில் துப்புரவில்லாரைப் பற்றிய கடைசிக் குறட்கு எழுதப்பட்ட உரையானது பொருத்த மன்று. நல்குரவுடையார் முற்றத் துறத்தல் நலம் எனப் பாடலிற் குறிப்பிட்டிருப்பதில், முற்றத்துறத்தல் என்பது தம் உடம் பினையும் துறத்தல் என வன்கண்மை பொதிந்த உரை வரையப்பட்டிருக்கிறது. மணக்குடவர் 'மனத்தாற்

றுறத்தல்' என உரைத்திருக்கிறார் என்றும் இவ்வுரையில் காணப்படுகிறது. ஆகவே மணக்குடவர் உரையே பொருத்த மாக நாம் கோடல் தகுதி. இக்குறட்பாடலானது மேல் 7வது குறட்பாடலை நோக்கிப் பொருள் கொள்ளற் குரித்து. அப்பாடல் வருமாறு :—

அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன் போல நோக்கப்படும்

இல்லறத்திற்குரிய கடமைகளிற் சிறிதளவும் செய்யக் கூடாத படி நல்குரவு மிகுமாகில் அறஞ்சார்ந்த துறவற மார்க்கம் பூண்டு, அறத்துப்பால் துறவறவியல் தவம் என்ற அதிகாரத்து 3ம் பாடலிற் சுட்டப்பட்ட உண்டி, மருநது, உறையுள் ஆகிய துப்புரவுகளை இல்லறவியல் இல்வாழ்க்கை அதிகாரத்து 7, 8ம் பாடல்களிற் கூறியபடி இயல்பினாலும் அறனிழுக்காம லும் இல்லறம்பற்றி நிற்பாரிடத்துப் பெற்று அறத்துடன் வாழ்வதே முறை என 'நல்குரவு' அதிகாரத்து 'துப்புரவில் லார் துவரத்துறவாமை' என்னும் இக்கடைசிப்பாடல் கூறு கிறது எனவே நாம் கொளல்வேண்டும்.

வியாசரியற்றிய பிரம சூத்திரத்தின் உரையில் நீல கண்டர் ஜானசுருதி என்னும் க்ஷத்திரியன் சூத்திரன் என ஏன் விளிக்கப்பட்டான் என்று வியவகரிக்கும் இடத்தில் சூத்திரன் என்பதற்கு சோகத்தால் துரத்தப் பட்டவன் எனப்பொருள் கொடுத்திருப்பது கவனிக்கத் தக்கது. பிறப்பிடுமபை என்ற அறிவுக்குரிய துக்கத்தால் பீடிக்கப்படுபவனும் சூத்திரனே; நுகர்வதற்குத் துப்புர வில்லாமையால் துக்கப்படுபவனும் சூத்திரனே. பின் குறிப்பிடப்பட்ட சூத்திரன் பாபவிமோசனத்திற்குரிய ஞான மார்க்கத்திற்கு உரியவனல்லன் என்றும் முன் சொல்லப்

பட்ட சூத்திரன் ரித்துவிக்குகளுக்குத் தானம் கொடுக்க ஆற்றலுடையவனு யிருந்த க்ஷத்திரியனுனபடியால் ஞான மார்க்கத்திற்கு உரியவனென்றும் பிரம சூத்திர உரையில் காணப்படுகிறது.

தமிழ் முறைப்படி துப்புரவுடையார், துப்புரவில்லார் ஆகிய இருவகை மக்கட்டொகுப்புகளும் கல்விக்கும் துற வுக்கும் உரியவர் எனக் கருதப்படுகிறபடியால் வடமொழி முறையை உட்கொண்டு துப்புரவில்லார் சாதல் வேண்டும் என வன்கண்மையுரையை யாரோ ஒருவர் பரிமேலழகர் பேராற் புகுத்திவிட்டார் என நாம் நினைக்கவேண்டியிருக் கிறது. "ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல, நாணுடைமை மாந்தர் சிறப்பு" எனவும் 'பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் நாணுக் குறைபதி என்னும் உலகு' என வும் சொல்லியிருக்கிறபடி பொருளுடைமையால் ஏற்றத் தாழ்வும் கல்விஞானங்களுக்குரிய உரிமை வேற்றுமைப் பாடும் தமிழ் முறைககு அடாதடுதான்று.

வடமொழி முறையில் ஆரியர், பூரியர் எனப்படும் மக்கள் வகையினர் தமிழ் முறையில் விழுமியோர், கயவர் என்ப வர்க்கு நேராவர். வடமொழியில் பூரியர் வறுமையினுற் பொருள் நுகர்ச்சியில்லாதவர்; தமிழில் கயவர் என்பார் தமக்கு உறுதியாவன அறியாதவர். நன்றறியும் விழுமியோ ரினும் கயவர் திருவுடையர் எனக் குறளாசிரியரால் இகழப் படுவதுகாண்க. 'நல்லார்கட்பட்ட வறுமையின் இன்னுதே கல்லார்கட்பட்டதிரு' என்ற குறளிலும் வறியோர் நல்லா ராதற் குரியர் என்பதும் திருவுடையோர் இலங்கு நூல் கல்லாராய் விலங்கோடொப்பக் கருதப்படும் சூத்திராாதற் குரியர் என்பதும் முழங்கப்படுகிறது.

# தமிழ் முறைப்படி அருணிலயமும் பொருணிலயமும்

## Church and State in the Tamil system

---

இமயமுதல் தொடியோள்பௌவம் எனப்படும் கன்னியா குமரி வரையுள்ள நம் பரதகண்டத்தில் ஆதிகாலம் தொட்டு மன்பதை ஆட்சி விஷயமாய் இருவகை முறைகள் கூறப்படுகின்றன. ஒருமுறை வைதீகம் எனப்படுகிறது; மற்றொன்று ஆகமமார்க்கம் எனப்படுகிறது. ஆகம மார்க் கத்தைப் பாசண்ட மார்க்கம் என வைதீகச்சார்பு நூல்கள் கூறுகின்றபடியால், உண்மையான ஆகமமார்க்கம் உண்மை யான வைதீகர்களுக்குப் புறம்பானதே. பௌத்த ஜைன வைஷ்ணவ சைவ மார்க்கங்கள் நாலும் ஆகமமார்க்கங்கள் எனப்படும். இவை நாலும் வைதீகர்க்குப் புறம்பே. பௌத்தரில் பின்வந்தாரும், ஜைனரில் பின் வந்தாரும், வைஷ்ணவத்தில் பின்வநதாரும், சைவத்தில் பின்வந்தாரும் தங்கள் தங்கள் பூர்வ பரிசுத்தக் கொள்கையைப் பெரிதும் மாற்றி வைதீகத்திற்கு இணங்க அவற்றைத் திரித்து வைதீகர்களோடு ஒத்து வாழ முயன்றதில் அந்நால் வகைச் சமயங்களும் நாளடைவிற் பிறழ்சசி அடைந்தன.

வைதீகமார்க்கத்தை ஆதரித்தே அதைக் காக்கும் பொருட்டு வடமொழியில் பூர்வமீமாம்சமும் வசிஷ்டாதிரிஷி களின் ஸ்மிருதிகளும் எழுதப்பட்டிருக்கிறபடியால் வைதீக மார்க்கம் கர்ம மார்க்கம் எனவும் சுமார்த்த மார்க்கம் எனவும் பெயர் பெறும். இம்மார்க்கத்தின்படி, ஒரு நாட்டின் வாழும் மக்கட்டொகுப்பின் சமுதாய நன்மை மட்டும் சிறப்பாகக்

மறைமலையடிகள் நூல் நிலையம் MARAIMALAI
6501a

கவனிக்கப்படும். அம்மக்கட்டொகுப்பிலுள்ள ஒவ்வொரு மனிதனின் ஆத்ம இன்பமும் அறிவுவளர்ச்சியும் சுதந்தர உணர்ச்சியும் கவனிக்கப்படா. ஆனதால் இம்மார்க்கம் இக நன்மையை மட்டும் கவனிக்கும் பொருணிலயம் என இவ் வியாசத்தின் தலைப்புப் பெயரில் சுட்டப்பட்டது. இங்கிலிஷ் முறையில் இம்மார்க்கம் பசிப்பிணி தணிக்கும் விளை பொருள்களையும் பண்டங்களையும் ஆக்கி வகுத்து உண்ணற் குரிய லௌகிக தர்மம் (State economy or polity) எனப்படும்.

ஆகமமார்க்கமானது ஒரு தேசத்தின் மக்கட்டொகுப் பின் ஒவ்வொரு மனிதனின் ஆத்ம இன்பத்தையும் தத்வஞான உணர்ச்சியையும் அதன் மூலம் பேதைமை நீங்கிச் செம்பொருளாகிய மெய்ம்மை உணர்ந்து அநுபவிக்க வல்ல மனவன்மையையும் ஆத்ம சுவதந்திர உரிமையையும் கவனிப்பது. இந்தியாவில் முதன் முதலில் இவ்வாகம உணர்ச்சியாகிய தர்ம சக்கரத்தைப் பிரவர்த்தனஞ் செய்து அறிவுலகத்தில் உருட்டியவர் கபில முனியாவார். தர்க்க முறையும் பொருளளவுக் காட்சியாகிய தத்வஞான உணர் வுமே இம்மார்க்கத்தின் பிரதான உறுப்புக்கள். வைதிக மார்க்கம் உலகத்தில் அசையாது நிற்றற்குரிய ஸ்திர நிலைமை யைக் குலைப்பதற்குரிய தன்மை, இவ்வாகம மார்க்கத்திற் காணப்பட்டதால் பசிப்பிணி காமப்பிணிகளை மட்டும் நீக்கி உலகத்தை அமைதியிற் செலுத்தக் கருத்துக் கொண்ட வைதிகப்புலவர்கள் ஆகம மார்க்கத்தை நிரீசுரம் என்றும் பாசண்டம் என்றும் (heresy) கூறினார்கள். இம் மார்க் கத்தின் முதலாசிரியரான கபிலர் சரித்திரத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர் தற்கால ஆராய்ச்சி முறைப்படி இன்னும் நன்குய் ஆராயவில்லை. பாண்டி நாட்டிலுள்ள வாதவூரிற்

பிறந்ததாகக் கூறப்படும் கபிலரே ஆதியாகமம் தோற்றுவித்த கபிலராயிருக்கலாம். இவருடைய அளவு நூலை (Philosophy or truth measured by logic) அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவருடைய மார்க்கம் அமைக்கப்பட்டிருக்கிற தெனத் திருக்குறளுரையால் நமக்குப் புலப்படுகிறது. வடநூற்கலை மார்க்கம் தென்புலக்கலை மார்க்கம் என இரண்டு புகழுடை மார்க்கங்கள் தென்னிந்திய நாகரீக முறையில் நிலவுவதற்குக் காரணம் சித்தரிற் சிறந்தான் எனப் பகவத் கீதையில் போற்றப்பட்ட கபிலரின் செய்யுள் தென்னாட்டில் தோன்றினதுதான். ஜைமினி ஆசிரியனால் ஊன்றப்பட்டதும் நால்வகைச் சாதிதர்மத்தோடு இயைபுடையதுமான மீமாம்ச நூலுக்கு மாறாக மக்களாய்ப் பிறந்தார் யாவரும் கல்வி பெற்று விலங்கின் தன்மையினின்றும் நீங்கற் குரியர் என்ற உண்மையை அருள் நோக்கி உபதேசித்து வருவதால் ஆகம மார்க்கம அருள் நிலயம் என (church economy or polity) இவ்வியாசத்தின் தலைப்புப் பெயரிற் சுட்டப்பட்டது.1

---

1 சிவஞான சித்தியார சுபக்கம் எட்டாவது சூத்திரத்தின் பாடல் ஒன்றில் வேதம் உலகத்திற் குரிய பொதுமாக்கம் என்றும் ஆகமம் அருட்சத்தி பதியப பெற்ற மாாக்கம் என்றும் கூறப்படுவதின் பொருளை கவனிக்க. குறள் ஒபபுரவு அதிகாரத்தின் அவதாரிகையில் உரைகாரர் ஆகமவழிபபற்றிய துறவிக்குரிய பிராயச்சித்தமார்க்கத்தை வேத நடை என்றும் அவவழிபபற்றிய இல்லற வாழ்வுடைய உபாசகரின் பொருட்கொடை மார்க்கததை உலக நடை என்றும் கூறுவதில் வேதம், உலகம் என்ற சொற்கள் நியதியாயுள்ள சங்கேத முறை தவறிபபிரயோகிக்கப படுகின்றன. பௌத்தரிலும் பிராயச்சித்த நூலாகிய பதிமோட்ச நூல் மடங்களில் உறையும் துறவிகட்குமட்டும் உரித்து. துறவிக்குரிய தீக்ஷை சிவதர்மணி என்பதும் இல்வாழ்வானுக்குரிய தீக்ஷை லோகதர்மணி என்பதும் இக்கருத்துப பற்றிததான். வைஷ்ணவாக்குரிய இயற்பா முதற்றிருவந்தாதி 5ம் பாடலில் உண்மை யுறையும் கோயில்

இனி வைதீக முறையின் தாரகக் கோட்பாடு லௌகீக உரிமைகளுக்குப் பிறப்புரிமை ஏற்படுத்தும் நால்வகைச் சாதி தர்மமே. மழைக்கடவுளாகிய இந்திரனை இசையோடு பயிலப்படும் வடமொழி மந்திரங்களாற் பிரார்த்தனை செய்து நாட்டிற்கு மழையை வர்ஷிக்கும் படிவேண்டி அக்கடவுளை வழிபாடு செய்யும் புரோஹிதர் நால்வகைச் சாதிகளில் முதற் றரத்தர் எனக்கருதப்பட்டார். இத்தொகுப்பினரே நாடாட்சி செய்யும் மன்னர்களுக்கு அமைச்சுத் தொழில் பூண்டு நால் வகைச் சாதிகளும் அநுஷ்டிக்கவேண்டிய முறையை வகுத்து அம்முறை தவறினோர்க்குத் தீர்திறன் அல்லது பிராயச்சித்தம் இது எனத் தீர்ப்புச செய்யவும் உரிமை பூண்டவர். இரண் டாவது ஜாதியான க்ஷத்திரியர்கள் உண்ணாட்டில் குடிகளிட மிருந்தும் புறநாட்டிற் போரில் தோற்ற மன்னர்களிட மிருந்தும் தாம் ஈட்டிய பொருளை, இந்திரனை வணங்கும் யாககர்மங்களில் புரோஹிதர்களுக்குக் கொடுத்து அவர்கள் கல்வித்தேர்ச்சியிலும் ஸ்மிருதி சாஸ்திரப் பயிற்சியிலும் தங்கியிருக்கும்படி பல சௌகரியங்களையும் அவர்களுக்குச் செய்து வந்தார்கள். வைசியர் என்பார் நிலம் பண்டம் ஆகிய பொருள்களை உடையவர். சூத்திரர் என்பார் வறியராய்த் தொழில் செய்து வாழ்வார். இந்நால்வகைச் சாதிகளும் அநுஷ்டித்த விவாக முறையானது தொல்காப்பியம் பொரு ளதிகாரத்தில் கற்பியல் என அநாவசியமாகச சிறப்பித்துத்

---

களாகிய மார்க்கங்கள் பாஷ்யம் எனக்கருதப்பட்ட ஆகமம் (= நூல்) ஆதிநூலாகிய வேதம் (= மறை) என இருவகையாக எண்ணப் பட்டதும் கவனிக்க. இப்பாட்டில் நூலின் கருமம் அழிப்பு என்றும் மறையின் தாமத்துக்கு மாறுனது நூல் எனறும் மறையின் கர்மம் அளிப்பு என்றும் மக்களின் உடறபிணி காமபபிணி ஆகிய இரண்டு மட்டும் கவனிபபது மறை என்றும் உய்த்துணரவைக்கபபடுகின்றன. இங்கு அழிப்பு என்பது காமபபிணியின் அழிபபு.

தலைப் பெயர் கொடுக்கப்பட்ட கோடை மண ஒழுக்கம் எனப்படும். ஒவ்வொருசாதியும் தத்தம் இனத்திற் கொண்டும் கொடுத்தும் வருவதே முறை எனச் சட்டநிர்ணயம் ஸ்மிர்தி கர்த்தாக்களால் ஏற்படுத்தப்பட்டது. இம்முறையானது இன்பத்துறையில் முழுகிக்குளித்த முதல் மூன்று சாதி களுக்குள் பகைமையுண்டு பண்ணிவந்ததால் பரத நாட்டி லுள்ள பல சிறு நாட்டு மன்னர்களும் ஒற்றுமை யடையாமல் இகலுடன் வாழ்வதே ராஜ தர்மம் எனக் கருதிவந்தார்கள். பாத்தூண் முறை செய்து அற்றார் அழி பசிதீர்த்து வாழ்வது சிறந்ததர்மம் எனக்கருதப்படாமல் நடனம், இசை, ஓவியம் எழுதுதல், பொழில் விளையாட்டு, காதலிற் பிறரில்லுடனும் வரைவின்மகளுடனும் நிகழும் களவு மார்க்கம் ஆகிய இம் மையின்பத்திற் குரிய செயல்களே நாகரீக மார்க்கம் எனக் கருதப்பட்டுவந்தது. இம்மார்க்கத்தில் ஒழுகிய முதிர்ச்சி யால் தேச மக்கள் அறிவு குன்றித்தாழ்ந்த நிலை அடைந் தார்கள். அக்காலத்தில் இஸ்லாம் சமயத்தை அநுசரித்த புறநாட்டார் இந்நாட்டுட் புகுந்து இந்நாட்டு மன்னர்களை எளிதிற் றோல்வியுறச் செய்தார்கள். அதன் பின்னர் தேசாபி மானத்தை அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட சிக்கியர் சமயம் நாணக்ஷா என்னும் குருவால் உபதேசிக்கப்பட்டு வடநாட்டில் பலத்தது. கிறிஸ்தவ ஆட்சி வந்து புறநாக ரீகத்தின் சரித்திரங்களை அறிந்த பின்னுகிய இக்காலத்திலும் வைதீக மார்க்கத்தார்தம் நால்வகைச் சாதிமுறையே சிறந்த தெனப் புகழ்ந்து கொண்டும் ராஜாராம் மோகனராயும் கேசவசந்திரசேனரும் நாட்டின் நன்மையை உத்தேசித்து உபதேசித்த பிரமோசமாஜத்தின் பெருமையைக் கவனிக்கா மலும் திரிவது அறநூலும் பொருள் நூலும் முறையே கற்றோர் நகைபாடற் குரித்தான செயலாயிருக்கிறது.

இனிமற்றொரு ஆகம முறை இது எனக் கூறுவோம். இம்முறைப்படி மக்கட்பகுப் பிற் பிறந்த எவ்வுயிரும் தர்மம் உபதேசிக்கும் சங்கத்தை அடைக்கல மாகப் புகுந்து எவ் வகைக்கல்விக்கும் உரிமை பூண்டு தம் அறியாமை என்னும் இடும்பையினின்றும் தப்பித்துக் கொள்ள உரிமை யுடைத்து. சைவப் பெரியோராகிய நாயனுர் வரலாறு கூறும் பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் புராணத்தில் கூறப்பட்ட பழயனூர் நீலிசரித்திரத்திற் கண்டபடி இடுக்கணுற்ற மக்கட்கு முறை செய்யும் பொறுப்புத் தமிழ் நாட்டில் தமிழ்க் கல்வி கற்ற வேளாண்மாந்தரிடைத் தங்கி யிருந்ததாகத் தெரிகிறது. வேளாளர் என்பார் தமிழ் முறை ஆக்கிய செவ்வேள் முறையைக் கைக் கொண்ட தமிழ்க் கூட்டத்தார். இவர்கள் தமிழ் நாட்டில் ஆதியில் நிலத்திருவாளராயிருந்த படியால் வேளாளர் என்ற சொல் நாளடைவில் உழுதும் உழுவித்தும் வாழும் மக்கட்பகுப்பு என்று கருத்துப்பட மாறியது. தமிழ்நாட்டில் ஆகம முறை பின்பற்றப்படா விட்டால் நியாயஞ் செய்யும் உரிமை இத்தமிழ் நாட்டுக் குடிகளுக்கு இருந்திருக்க மாட்டாது.

ஆகம முறைக்கும் ஸ்ரௌத அல்லது வைதீக முறைக்கும் உள்ள வேறுபாடு நாலாயிரதிவ்ய பிரபந்தத்திற் காணப்படும் திருவெழு கூற்றிருக்கை என்னும் பாடலையும் சைவத்திரு முறைகளிற் காணப்படும் திருவெழு கூற்றி ருக்கை என்னும் பெயர் பூண்ட பாடல் வகைகளையும் ஆராய்ந்து பார்ப்பார்க்கு இனிது விளங்கும். திருமங்கையாழ் வாரால் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிற வைஷ்ணவத் திருவெழு கூற்றிருக்கை அடியில் எடுத்து எழுதப்படுகிறது.

பாட்டு

ஒருபேருந்தி இருமலர்த்தவிசில்
ஒருமுறை அயனையீன்றனை ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா மும்மதிள்
இலங்கை இருகால்வளைய ஒருசிலை
யொன்றியஈரெயிற்றழல்வாய் வாளியின்
அட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரிநூலொடு மானுரியிலங்கு
மார்வினின் இருபிறப்பு ஒருமாணாகி
ஒருமுறைஈரடி மூவுலகளந்தனை
நால்திசைநடுங்க அஞ்சிறைப்பறவை
யேறி நால்வாய்மும்மதத்து இருசெவி
ஒருதனிவேழத்து அரந்தையை ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை முத்தீ
நான்மறை ஐவகைவேள்வி அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து நான்குடனடக்கி
முக்குணத்து இரண்டவையகற்றி ஒன்றினில்
ஒன்றிநின்று ஆங்கு இருபிறப்பறுபபோர்
அறியும் தன்மையை முக்கண்நால்தோள்
ஐவாயரவோடு ஆறுபொதிசடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை
ஏழுலகு எயிற்றினில்கொண்டனை கூறிய
அறுசுவைப்பயனுமாயினை சுடர்விடும்
ஐம்படை அங்கையுளமர்ந்தனை சுந்தர
நால்தோள் முந்நீர்வண்ண ! நின்னீரடி
ஒன்றியமனத்தால் ஒருமதிமுகத்து
மங்கையரிருவரும் மலரன அங்கையின்

முப்பொழுதும் வருட அறிதுயிலமர்ந்தனை
நெறிமுறைநால் வகைவருணமுமாயினை
மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே
அறுபதமுரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடையடங்கச் செற்றனை அறுவகைச்
சமயமும் அறிவருநிலையினை ஐம்பா
லோதியை ஆகத்திருத்தினை அறம்முதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை குன்றாமதுமலர்ச்சோலை
வண்கொடிப்படப்பை வருபுனல்பொன்னி
மாமணியலைக்கும் செந்நெலொண்கழனித்
திகழ்வனமுடுத்த கற்போர்புரிசைக்
கனகமாளிகை நிமிர்கொடிவிசும்பில்
இளம்பிறைதுவக்கும் செல்வம்மல்குதென்
திருக்குடந்தை அந்தணர்மந்திர மொழியுடன்
வணங்க ஆடரவமளியில் அறிதுயில்
அமர்ந்தபரம! நின்னடியிணைபணிவன்
வருமிடரகலமாற்றோவினையே.

இப்பாடலுக்கு முகவுரையாய் எம்பெருமானார் அருளிச் செய்த இரண்டு பாடல்களில் இரண்டாவதில் இப்பாடலில் உலகு உய்ய மறைப் பொருள் எல்லாம் எடுத்துச் சொல்லப் பட்டிருப்பனவாகக் கூறப்படுகிறது. இந்தத்திருவெழு கூற்றிருக்கையில் தொகைப் பொருள் நாலாகக்கணக்கிடப் படும் நாலு என்ற எண் 9-மடங்கு வந்திருக்கின்றது. அவற்றில் 8-வது நாற் பொருளில் வருணவகை அல்லது ஜாதிபேதக் கொள்கை சுட்டப்படுகிறது. ஆகவே திருமங்கையாழ்வாரின் வைஷ்ணவக் கோட்பாட்டில் ஜாதி

தர்மம் ஒருமூலக் கொள்கையாகக் காணப்படுகிறது. இக் கொள்கைதான் வைஷ்ணவத்தை ஆகம முறையினின்றும் பேர்த்தெடுத்து வைதீகமுறையோடு உறவு கொண்டு நிற்கும் படி செய்கிறது.

இனித் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தம்முடைய முதற்றிருமுறைப் பிரமபுரத் (சீர்காழி) திருவெழுகூற்றிருக் கையில் சொன்னமுறை அடியில் எழுதப்படுகிறது :—

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் உன்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றுகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி

அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன் முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்கு நாற்கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

இச்சைவ முறைப்பாடலிலும் நாலு என்ற எண் 9 முறை வந்திருக்கிறது. இங்கே நால்வகை வருணபேதம் கூறப்

படாதது ஆராயத் தக்கது. 'நால்நிலம் அஞ்ச' என்பதில் நால்நிலம் என்பது முல்லை, குறிஞ்சி, மருதம், கடற்கானல் ஆகிய நால்வகைத்திணை நிலங்களைச் சுட்டுகிறது. நான்மறை என்பது திருமங்கையாழ்வார் பாடலிலும் சம்பந்தர் பாடலிலும் பொதுவாகக் காணப்படுகிறது. சைவமறையில் நால்வகைவருணம் உட்கொள்கையாகக் கருதப்படவில்லை என சம்பந்தர் பாடல் காண்பிக்கிறது.

இனி சைவர்க்குரிய 11-ம் திருமுறையில் நக்கீரரால் இயற்றப்பட்ட திருவெழுகூற்றிருக்கை ஒன்று காணப் படுகிறது. அப்பாடல் வருமாறு :—

ஓருடம்பு ஈருருவாயினை
......................................
கீதம் பாடிய அண்ணல் (சிவபிரான்)
பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே.

இப்பாடலிலும் நாலு என்ற எண் 9 முறை காணப்படுகிறது. நெறிநான்கு, வாய்மொழி நான்கு, நான்மறை என்ற வாக்கி யங்கள் காணப்படுகின்றன. இங்கு கூறப்படும் நான்மறையும் அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் நானெறியும் ஒன்றுதானோ எனும் ஐயப்பாடு நிகழ்வதற்கு இடம் உண்டாகிறது.

இனித் திருநாவுக்கரசு நாயனாரின் முதலாவது திரு முறையில் திருவெழுகூற்றிருக்கை என்ற பாடல் வகையை நிகர்த்த ஒரு பதிகம் காணப்படுகிறது. அப்பதிகத்தில் 10 எண்வரைப் பொருள்த் தொகை கூறப்படுகிறது. ஒவ்வொரு எண்ணும் ஒருபாடலுக்கு அமைந்து ஆகப் பத்துவரை எண்களுக்குப் பத்துப்பாடல் அமைந்திருக்கிறது. அவற்றில் நாலு என்ற எண்ணுக்குரிய பாட்டு வருமாறு:

நாலு கோலாம் அவர்தம் முகமாவன
நாலு கோலாஞ்சனன முதற் றோற்றமும்
நாலு கோலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கோலாம் மறை பாடினதாமே.

இப்பாடலில் நாலு தோற்றங்கள் என்பதால் சுட்டப்பட்டவை சனனம், பிணி, மூப்பு, சாக்காடு என்ற உயிர்க்குரிய நான்கு அவஸ்தைகளும். இந்த உண்மையானது, திருநாவுக்கரசு நாயனாரின் 2-வது திருமுறையிலுள்ள திருச்சேறைப் பதிகத்தில் 3-வது பாடலிலிருந்து விளங்குகிறது. அப்பாடல் வருமாறு:

பிறப்பு மூப்புபெரும் பசிவான் பிணி
இறப்பு நீங்கி இங்கின்பம் வநதெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறியான் கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே.

பிறப்பு, பெரும்பசி முதலிய உடலுறு பிணிகள், மூப்பு, இறப்பு என்ற நாலு அவஸ்தைகளுமே சனனம் முதலாக எண்ணப்பட்ட நால்வகைத் தோற்றங்கள். இத்தோற்றங்களையே திருஞானசம்பந்தரும் அடியிற்கண்ட பாடல்களிற் குறிப்பிடுகிறார். அவை வருமாறு;—

பிணிநீர சாதல் பிறத்தல் இவை பிரியப்
பிரியாத பேரின்பதோடு, அணிநீர மேலுலகம்
எய்தலுறில் அறிமின் குறைவில்லை
தூஙகானைமாடம் தொழுமின்களே

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றி வையுடைத்
தாய வாழ்க்கை யொழியத் தவம், அடங
கும் இடம் கருதி நின்றீரெல்லாம்.

இப்பாடல்களில் இரண்டாவதில் முதல் வரியில் கேடாகிய சாக்காடுத் தோற்றம் சுட்டப்படுகிறது.

'சாநாளும் வாழ்நாளுந் தோற்றம் இவை
சலிப்பாய வாழ்க்கை'

என்ற பாடலில் இந்நாலவஸ்தைகளும் தோற்றம் என்ற குறியாற் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது. இப்பாடல்கள் வரும் பதிகத்தின் 5-வது பாடலில் 'மயல் தீர்மையில்லாத தோற்றம் இவை' எனப்படுவதும் காண்க. "பல் நீர்மை குன்றிச் செவி கேட்பிலா படர்நோக்கிற்கண் பவளநிற, நல் நீர்மை குன்றித் திரை தோலொடு நரை தோன்றுங்காலம் நமக்காதல் முன்" என்ற பாடலில் மூப்பும்பல நோய்களும் சுட்டப்படுகின்றன.

"பகடூர் பசிநலிய நோய் வருதலால்" என்ற பாடலில் பசிநோயும் குறிப்பிடப்படுகிறது.

"ஆற்றுவாராறறல் பசியாற்றல் அபபசியை
மாற்றுவாராற்ற லிற்பின"

என்றகுறளில் பசிப்பிணியின் கொடுமையைச் சுட்டியதும் கவனிக்கத்தகுந்தது.

மேற்குறிப்பிட்ட பாடல்களிலிருந்து வைஷ்ணவத்தில் ஸ்மிருதிக்குரிய வருணபேதக் கொள்கை நுழைந்து அச்சமயம் ஆகமத்திற்குரிய நிலை குன்றியிருப்பதும், சைவத்தில் அவ்வருணபேத தர்மம் நிராகரிக்கப்பட்டு ஆகமத்திற்குரிய நிலை குன்றாமலிருப்பதும் ஆராயத்தக்கன[1].

இனி மணமுறையிலும் ஸ்மிருதி முறைக்கும் ஆகம முறைக்கும் வேற்றுமை காணபபடுகிறது. காதல் மணமும் உடன் போக்கு மணமும் ஆகம முறையில் அங்கீகரிக்கப்

---

1 பின் வந்த சில சைவப்புராணஙகள் ஜாதிதர்மத்திற்குரிய பாடல்களைப் பெருக்கிவிட்டன.

படுகின்றன. திருக்குறளில் காமத்துப்பாலில் ஆகம முறை மணமே சுட்டப்படுகிறது. களவியல் கற்பியல் என்ற தலைப்புப் பெயர்கள் பொருத்தமானவையல்ல. இவை ஆதிகாலத்தில் ஏற்பட்ட பெயர்களாயிருக்க முடியாது. காதற் கூட்டவியல், மனையறப்பாட்டியல் என இவை ஆதியில்பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும். பொருளதிகாரம் களவியல் முதற் சூத்திரத்தில் 'காமக்கூட்டம்' என இம் மணத்திற்குப் பெயர்வாய்ந்திருக்கிறது கவனிக்கத் தக்கது. கற்பு என்னும் மாட்சி இக்காதற் கூட்டத்திற்கும் உரித்தான படியால் கொடை மண முறை மட்டும் கற்பியல் எனக் கூறுவது பிறழ்ந்த உணர்ச்சியின் வயத்ததாகும். சிலப்பதிகாரத்தில் காதல் முறைப்படி மணஞ்செய்விக்கப் பெற்ற கண்ணகியையும் கோவலனையும் அவர் பெற்றோர் மனையறம் படுத்தினதாகக் கூறப்படுகிறது. வரைவுக்கு முற்பட்ட காதற்காட்சிக் காலத்திலிருந்து வரைவுக்குப் பிற்பட்ட மனையற வாழ்க்கைக் காலமானது மனையறவியல் எனப் பிரிக்கப்படுவதன் நோக்கம் பின்னரிலுள்ள பொருட்பிரிவுக்காலத் துன்பத்தையும் புலம்பல் புலவிகளுக்குரிய துன்பத்தையும் தனியே விவரித்துக் காட்டுவதற்காகத் தான். ஆதலால் இப்பிரிவுகாலத்திற்கு மட்டும் கற்பியல் எனப் பேர் சூட்டுதல் வழுவுடைத்து. மனை யறபியல் என அமைந்திருக்க வேண்டும்.

முல்லையானது ஆற்றியிருத்தல் எனப் பொருள் காணப்படுவதால் மணத்திற்கு முந்திய காதற் காட்சிக்காலமானது முல்லையியல் எனப்படலாம். மணந்து இல்லறம் எய்தி இன்புற்று இல்லறக் கடமை யியற்றும் காலம் குறிஞ்சி எனப்படலாம். ஆகவே குறளில் வரும் காமத்துப்பாலில் களவியல் என்ற பெயரை நீக்கி முல்லையியல் எனவும், கற்பியல் என்ற

பெயரை நீக்கிக் குறிஞ்சியியல் எனவும் பெயரிட்டு வழங்கல் நல்வழக்கு ஆகும். அறத்துப்பாலில் உள்ள இல்லறவியற் பகுதியைக் குறிஞ்சியியற்குப்பின் மனையறப்பாடு எனப் பேரிட்டு வைக்க வேண்டும். துறவறம், வேந்தறம், குடிமையறம், துன்பவறம், மனையறம் என ஐந்து வகை இயல்களாகத் திருக்குறள் வகுக்கப்பட்டுப் பயிலப்படவேண்டும்.

இனி இவ்வாகமமானது தர்மசக்கரம் எனவும் முருகனாகிய நெடியோனுடைய குணக்குன்றினின்றும் தோன்றப்பட்ட தொடியாகிய நதி எனவும் கூறப்பட்டது. முருகனுடைய[1] புகழையும் ஞாபகத்தையும் நிலை நாட்டும் பொருட்டுப் பண்டையத் தமிழ் மக்களால் தமிழ் நாட்டின் வடவெல்லையிலுள்ள நெடுமலையை வெண்காட்சிமலை யெனப் பெயர் கூறியும், தென் எல்லையாகிய கடலை முருகன் ஆக்கிய செந்தமிழ் ஞானக்கடலின் உருவகப் பேராகிய அறத்தொடிப் புனல் எனவும் பெயர் கூறினார்கள். அறத்தொடி தாயாக உவமிக்கப்பட்டு கடலுக்குத் தொடியோள் பௌவம் எனப் பெயர் இடப்பட்டது. வடமொழியில் இது கன்யாகுமரி என இரட்டித்த சொல்லால் மொழிபெயர்க்கப்பட்டது. சமுத்திரத்திற்குரிய வடமொழிப் பெயர்கள் அப்பாஷையில் ஆண்பாற் பெயர்களானபடியால் கன்னியாகுமரி என்பது பெண்பாற்குரிய நதியின் பெயராகக் கருதப்பட்டு நதி தெற்கு முனையில் இல்லாததால் நதியுள்ள தென்நாட்டின் பகுதி கடல் கோட்பட்டது எனப் புராணமும் கற்பிக்கப்

---

1 முதறறிருவந்தாதி 5-வது பாடலில் சிவபிரானுக்குரிய சூலம் சுட்டபபடாமல் முருகனுக்குரிய வேல் ஆகமக் குறியாகச் சுட்டப் பட்டது காண்க. அபபாடலில் ஆன்விடை என்பது சேதா அல்லது ஆவிற்கருமுனியாகிய கபில முனியைக் குறிபபதன் மூலம் ஆகமத்தையே சுட்டும்.

பட்டது. தொடி என்பது கநதபுராணக் காப்புச் செய்யுளிற் கூறப்பட்ட விகடசக்கரமே. முருகன் வளைகொண்டு இநதிரன் முடி எறிநதான் என்றகதை யஜுர் வணக்கத்திற் குரிய இநதிரன் என்னும தெய்வம கொற்றவை என்ற தொடிததாயின் கண்ணுள்ள அறிவாகிய ஞானபபாலே யுண்ட தமிழ் மக்களால வணங்கப்படவிலலை என்றதைக குறிக்கும். காஞ்சிநகாத் தெய்வம ஆகிய அமமையாா அண்ணலைததழுவி வளைத்தழும்பு அழுததினள் என்ற கதையும தமிழ முறை யைக் கடவுள அஙகீகரிததார் எனபதே குறிக்கும்.

"நெடியோன குன்றமும தொடியோள பெளவமும் தமிழ வரம்பறுதத தணபுனலநாட்டு"

என்ற சிலபபதிகார வாக்கியத்திற்கு மேற்கண்ட நியாய மான பொருள்தான் பொருத்தமாகக் காணப்படுகிறது. சங்க நூல்கள் கடல்கோட்பட்ட புராணககதைகள இத தொடரிலிருந்து கறபிக்கபபட்டன.

இனிததொடி என்பது தொண்டி எனமருவித் தமிழ்நாடு தொண்டியா நாடு எனபபட்டது. தமிழ் நாட்டில் முருகன் நூலைக்கைககொண்ட சஙக ஆட்சி வழஙகினபடியால தொழுவ (=சங்கம) நாடு எனவும அநநாடு போபெறறது. இநநாட்டு நிலததிருவாளா தொண்டியா மணடலத தொழுவ வேளாளா எனபபட்டனா. தொண்டியா எனபது தொணடா எனமருவி யது; நாடு தொணடமணடலம எனககூறபபட்டது. பிற காலததில இபபோ தமிழநாட்டின் வடபாகததுககே அமைநதது.

தொண்டமண்டல சதகம அசசிட்ட வடலூா இராம லிங்க சுவாமிகள் அநநூற்குத தாம இட்ட உரையில் தொண்டமண்டலம என்பதைத தொணடாமண்டலம எனக

கொண்டால் இலக்கணத்திற்குப் பொருத்தமில்லை எனச் சொல்லி இச்சொல்லிற்கு உரை காண மிகவும முயற்சி செய்கிறார். தொண்டி என்பது தொண்டை என மருவியது எனக் கொண்டால சொலலிலககணம மிக நேரிதாய் அமைகிறது.

இனித்தமிழ்நாட்டில் முருகன நூலோடு இணக்க முடைய ஆகம முறை அடங்கிய திருககுறள தான் அதிகார முறையாகக் கைக்கொளளபபட்டு வநதது என்ற செய்தி தொண்டமண்டல சதகம 18-வது பாடலில வழங்குகிறது. அப்பாடல் வருமாறு :

கையாறிரணடுடைககாளை தன வாயிற் கவிதை கொணட,
பொயயா மொழிககும புகலிடமானது பொயகை யெலலாஞ,
செயயாா கமல மலா வணடானஙகள சென று திகழ,
மையாா குவளை வயல புடை சூழ தொணடமணடலமே.

முருகனுககருதபபடும உககிரப பெருவழுதியால் குறட்பெருமையைபபறறிப பாடிய வெண்பா ஒன்று திருவள்ளுவமாலையில காணபபடுகிறது.கையாறிரண்டுடைககாளை என்பதாற் சுட்டபபடட முருகன என்பது திருவள்ளுவ மாலையிலுள்ள மேறபடி வெண்பாவைபபாடிய உக்கிரப் பெருவழுதியைக குறிககிறது. ‘பொயயா மொழி’ என்பது பண்டையோா குறட்கு இட்டு வழஙகிய சிறபபுப பெயர். குறள் நீதியானது தொணடமண்டலததிலுளள சான்றோராலும் மற்றைய நாடடாராலும பயிலபபட்டும முறை செய்தலில பினபறறபபடடும வநதபடியால தொண்ட மண்டலததில் பொய்யா மொழி நூல பிறநதது என்று நாட்டின் பெருமை கூறபபடுகிறது. தமிழ் நாட்டில பொய்யா மொழி சமபநதமாகத தொனறு தொடடு வநத பெருமை

யைத் தான் படிக்காசுப்புலவர்தம சதகத்தில் சிறப்பாக எடுத்துக் கூறுகிறா.

இக்குறட்குரிய பெருமையை மறைக்கப பொய்யாமொழி என்ற புலவர் பேரே தொனறு தொடடுவநத இககதையிற புகலப்படுகிறது எனறும, அபபுலவரையே முருகககடவுள பாட்டுடைத்தலைவனாக வைதது ஒரு பாட்டுபபாடினார் என்றும், அபபாட்டும குறிபபிட்டு இதுதான் என்று ஒரு பாடல் வழங்குவதாகவும சொலலபபடுகிறது. அவவாறு வழங்குவதாகக கூறபபடட பாடல வருமாறு :—

விழுநத துளி அநதரததே வேம எனறும வீழநதால
எழுநது சுடாசுடும எனறேஙகிச—செழுங கொணடல
பெய்யாத கானகததே பெயவிலையும போயினளே,
பொயயா மொழிபபகைஞா போல.

இபபாடலும பொய்யா மொழிபபுலவா சமபநதபபடட கடடுக்கதையை உறுதிப படுததவிலலை. பொய்யா மொழிப பகைவா எனபது பிரசிததமான குறள நீதிககுமாறாக முறை செய்யும அரசரையும அரசவையததாரையும கருதுமே தவிர ஒரு சிறு புலவனை நோககாது. இததனிபபாடலும் திருவள்ளுவர் நூலின் பெருமையைபபறறி அநநூல்மாட்டுப பற்றுதலுடைய ஒரு நறபுலவனாற பாடப படடிருகக வேண்டும. சரிததிர சமபநதபபடட உககிரப பெரு வழுதியை முருகனாகப பண்டையோா பாவிததாா என்றல பொருநதும. அவவழுதியின் பாடலைக கைபபாறிரண்டுடைக காளையாகிய முருகன பாடினான எனக கோடலும திருவிளை யாடற்புராணததிலுள்ள உககிர குமாரபாணடியன கதை யாலும் பொருநதும. சிறு புலவனாகிய பொயயாமொழி என்னும் பேருடைய புலவனை முருகககடவுள பாடினாா எனக் கோடலும அக்கருததை யமைததே தொண்டமண்டல

சதகததில் படிக்காசுப புலவா பாடினா எனக் கோடலும் பொருததமிலலாத வைகளாய் முடியும.

பொய்யாமொழிப புலவர் சமபநதபபடட இககடடுக் கதையை அநுசரித்து திருபபுகழிலும ஒரு பாடல காணப படுகிறது. அருணகிரிநாதரால பாடபபடடிருநதாலும அல்லது வேறு ஒருவர்பாடித திருபபுகழில செருகப்பட்டிருநதாலும திருக குறடபெருமையை மறைகக ஏற்பட்ட முயற்சி முற்றியபின இததிருபபுகழ்பபாடல தோன்றியிருக்கவேண்டும.

மேலும திருவளளுவமாலையில அசரீரிபபாடல ஒன்று காணபபடுகிறது. இதுதான் திருவளளுவமாலையின் முதற் பாடல். அது வருமாறு:

திருததகுதெயவததிருவளளுவரோ
டுருததகு நறபலகையொக்க—இருகக
உருததிர சாமா என வுரைதது வானில
ஒருககலொ என்றதோர சொல

இதிற் சொலலபபடட உருததிரசாமா இறையனா களவியல நக்கீரர் உரையை மெசசிய உருததிரசாமா. இவா முருகபபிள்ளையாா என்று அவவுரைப பாயிரததில சொலலப படுகிறது. ஆகவே தமிழ் நாட்டில் பெருமையுடன நிலவின இரு பெரு நூல்களுககு முருகககடவுளின் ஆணை ஏற்படடிருபபதாகச் சொல்லபபடுகிறது. இதிலிருந்து நாம அறிநது கொள்ளவேண்டியது தமிழ் நாட்டு அரசியல் முறையும முறைசெய்த முறையும மண விதிகளின் முறையும் வடமொழி ஸ்மிருதியை அநுசரிககாமல ஸ்மிருதிகாரால பாசண்டம எனபபடட ஆகமததை அநுசரிததது என்பதே. தொண்டமண்டல சதகபபாடலகளில பொய்யா மொழி

யைப் பற்றிய பாடலுக் கடுதத பாடல் சேக்கிழாருடைய பெரிய புராணததைப பற்றியது. நீதி முறையிலும மண முறையிலும சேக்கிழார் ஸ்மிருதி முறையை அநுசரித்துப புராணம் எழுதியிருககிறூா. ஆனபடியால் ஸ்மாாதத மதத்தரை மகிழ்விககப படிககாசுபபுலவரால் சேககிழாரும புகழப் பட்டிருக்கிறூா. புலவாகள தம கருததை மறைதது தம்மை ஆதரிபபோரைப பரவியும பாடிஞாகளானபடி யால் படிக்காசுப புலவரும அவவிதிககு விலககாயிருக்க முடியாது.

மண முறையில் தமிழ்நாட்டில காதல் மணம முறை யான மணம எனக் கருதப்பட்டது என்பது திருவிளை யாடற்புராணத்திலுளள வனனியும கிணறும இலிங்கமும அழைத்த படலத்தால தெரிகிறது.

உடன் போககு மணம விஷயமாகச சமபநதர்பாடிய மயிலாப்பூாப பதிசமும புராணக கதையால பொருள மாற்றபபட்டுவிட்டது. சுநதரமூாததிநாயஞா துறவியாய் வாழ்நது தேவாரம பாடியிருகக மண முறையில ஸ்மிருதி முறை அவாகாலததில அநுசரிககபபடவிலலை எனக காட்ட யாரோ ஒரு பண்டை மண முறைபபற்றுடைய வரால் தடுததாட்கொண்டபுராணததிலும மற்றும் பாகங களிலும் பரவை, சங்கிலி எனற நாசசியாாகளின் சமபநதமான புராணக்கதைகள் புனையப பட்டிருக்கின்றன. சுநதர மூாத்தி நாயஞர் தமமரபிற் பெண்ணை மணக்கச செய்த முயற்சி தோறறுபபோன கதைபபாகததில திருவெண்ணை நலலூர் அநதணரிடை வழக்குத தீாககபபோனதாகச சொலலபபடும பாகம ஆகம முறையைபபின பறறி எழுதப படாததால சேக்கிழாா போககையே தழுவியிருககிறது.

# தமிழ் நாட்டில் பண்டையக் காலத்தில் முறை செய்த இயல்

திருககுறள் பொருட்பால அரசியல் என்ற தலைப்பின் கீழ் எழுதபபட்ட அவதாரிகையில் உரைகாரர் பொருளின் துணைக்காரணம் அரசனீதி என்றும, அரசனீதி என்பது காவலை நடாததும முறைமை எனறும அநநீதி அரசியல், அங்கவியல், ஒழிபியல என மூவகைபபடும என்றும கூறு கிறார். இககூறறின படியே பரிமேலழகர் உரையுடன் கூடிய குறட்பதிப்பில் பொருடபால மூனறு இயலகளாக வகுக்கப பட்டிருககிறது.

ஒழிபியல் என்னும இயலை அரச நீதிககுரிய பாகமாகக் கூறுவது பொருதத மினறு. ஆறு உறுபபுககளில ஒன்றான குடி' என்பதற் குரியவும குடிமை முதலாக உழவு ஈறாக உளளனவுமான 9 அதிகாரங்கள ஒழிபியலிற சேர்க்கப்பட் டிருபபதால உரைகாரா ஒழிபியலையும அரச நீதிககுரிய இயல் என்றா. இவ்வாறு சொலவது முறை தவறு. அங்க வியலில 'நாடு' என்பதைக் குடியாக உரைகாரர் கொண்டதால் உண் மையாகக குடிக்குரிய இவவொன்பது அதிகாரங்களை அவர் ஒழிபியலில சோததாா.

திருவளளுவா கருததுபபடி குடி என்பது முறை செய்யும பெருஙகுடிபபிறநதாரின அவையம ஆனபடியால குடிமை முதலிய 9 அதிகாரஙகளும் அங்கவியலில குடிமை யியல் எனச சேரககபபட்டு, மணக்குடவர் போல நாடு என் பது 'கூழ்' உடன் சேரககபபடடு, பொருளியலுக் குரியதா கக் கருதப்படவேண்டும.

இனிககாவலே நடாததும் முறைமை என்பதில் பரிமே லழகர் 'காவல்' என்பதால் உய்த்து உணர வைப்பது என்ன? தலையாரி, வெட்டியான், போலிசுக்காவலாளர் ஆகிய இறையின் வினை செய்வாா செய்யும காவலா அல்லதுவழக்குத தீர்பபில முறை இது என அறநூல், நீதி நூலகளை ஆராயநது துணிநது இறைவனுககு உறுதி கூறுவாா செய்யும நீதிக காவலா? எது குறளாசிரியா பொருட்பாலிற குறித்த அரசன் காவல?

மேற்கண்ட வினவிறகு 'இறைமாட்சி' அதிகாரததின் 8வது பாடலில விடை இறுக்கபபடுகிறது. "முறை செய்து காப்பாற்றும மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப படும்" என்ற குறட்பாவில இறைவனுக குரிய சிறபபுககடமை முறை செய்து குடிகள தமக்குள் ஒருவர்கொருவர் பொருளுக்கும உடலுககும் தீங்கு விளைககாதபடி ஆளுதல் என்று கூறபபடுகிறது. பிறநாட்டுப பகைவா நலியாமற் காத்தலே இவ்வதிகாரததின முதறகுறட்பா 'அஞசாமை யீகை அறிவு ஊககம இநநான்கும, எஞசாமை வேநதறகியல்பு' எனபதிலும 4-வது குறட்பாவிலுள்ள 'மறனிழுக்காமான முடையது அரசு' எனபதிலும் கூறப்பட்ட படியாலும பகை வரை எதிாததுப படைததுணையுடன் செய்யும் போரானது முறை செயவது போல என்றும நிகழ்தறகுரிய கடமை அல்லாதபடியாலும மககட்கு இறை என்று குடிகளால் வைககப படுவதற்குச சிறநத குணம அவாகட்கு முறைசெய்தலே என ஆசிரியா கருதி இககுறட்பா இயறறுகின்றாரானபடியாலும, உரைகாரர் 'காபபாறறும' என்ற சொலலே 'முறை செய்து' என்ற சொல்லினின்றும வேறு படுதது இரண்டு கடமைகள் இறைவனுக்கு இக்குறட்பாவில குறிபபிட்டிருப்பதாக உரை எழுதுவது பொருததமன்று.

இறைவன் பரிவாரம் புறநாட்டுப் பகைவர் போலல்லாமல நாட்டில வாழுங் குடிகளானபடியால் அவர் செய்த தீங்குகள் தீர்க்கபபடுதல், முறை செய்தல் என்பதன் கண் அடங்கும். அவரைத தண்டிக்கும நெறியை வாழ்வாரிடை முறை செய்கை என்ற கடமையினின்றும பிரித்துக் காப்பாற்றுதல் என்று வேறு கூறுவதில உரைகாரர் பிழைபட உரைக்கிறார்.

அரசன தன சிறந்த கடமையாகிய முறை செய்வதில் அறநூல நீதிநூலகளில தோந்த இனசதுடன ஆராய்ந்து அவா இடித்துச சொலலும சொறசளையும கேட்டு வழக்குத் தீரபபில துணிவுகொள்ளவேண்டும என்பது இச்சிறப்புக் கடமை எடுத்துக கூறிய குறட்பாடலுக்கு அடுதத 9-வது குறட்பாலில கூறப்படுகிறது. அப்பாடல வருமாறு:

"செவிகைப்பச சொற் பொறுக்கும பண்புடை வேந்தன
கவிகைக கீழ்த தங்கும உலகு"

இககுறட்பாவிலுள்ள 'கவிகை' (குடை) என்ற ராஜ சின்னத்திறகுரிய சொலலும், முறை செயதலில் இறைவற்கும் உடனிருக்கும அவையத்தாருக்கும வேண்டப்படும எண்பதம (எளிய செவ்வி அல்லது சமயம்) முதலிய 'பண்பு' என்ற சொல்லும அமைந்து கிடப்பது கவனிக்கததக்கது. ஒழிபியலில் 'குடிமை' என்னும அதிகாரத்தை அடுத்துச் சற்றுப பின்னுக வரும 'பண்புடைமை' என்ற 100-வது அதிகாரத்தில பண்புடைமையின தன்மை விவரிக்கப்படு-கிறது.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல இவ்விரண்டும
பண்புடைமை என்னும வழக்கு"

அரசனுடன் முறை செய்ய வீற்றிருத்தற்குரியார் யாரெனில் அவனுடைய நாட்டில் பிறந்த உட்குடியாயும், அகன்ற அல்லது பெருங்குடியாயும இருபபீவா என்று இபபாடலில சொலலபபடுகிறது. இக்குடி தொன்று தொட்டு நாட்டில உறைநது வருகின்ற பழஙகுடி என்பது 'குடிமை' அதிகாரததிலுள்ள 9-வது பாடலில் உணர்ததபபடுகிறது.

'வழஙகுவது உள வீழநதககணணும் பழஙகுடி
பணபிற்றலைப பிரிதலின்று"

என்பது அபபாடல. குடிமை என்னும் அதிகாரத்தில் 'குடிபபிறநதார்' எனப்படுபவர் இப்பழங் குடிகளே. 'பிறந தார்' என்னும சொல பிறநத நாட்டை நோக்கியது ; குடியின் தொழிலை நோககவிலலை. முறை செய்ய இறைவனுல விரும பபபடும கலவி, செலவம முதலிய தகுதி நோக்கி குடி என்பது ஆகுபெயரால பெருஙகுடி எனபபடும. இப்பெருங் குடியுடன் முறை செய்ய அரசன வீறறிருததல் நோக்கியே சிலபபதிகாரம மஙகல வாழ்ததுபபாடலில,

"பெருநிலம முழுதாளும பெருமகனதலை வைதத
ஒரு தனிக குடிகளோடு"

என்பதில் சோழமனனன் தனிக்குடிகள் அல்லது பெருங்குடிகட்குத தலைவன எனபபடுகிறுன.

முறை செயதறகுரிய இபபண்பும நாட்டிற் பிற குடி களுடன் வெறுத்தகக மனது கலநது உறவாடததகக பண்பு எனபபட்டது.

'உறுபபொததல மககளொப்பன்ருல் வெறுத்தக்க பண்
பொததல் ஒபபதாம ஒபபு' எனற குறட்பாவைக் காண்க.

'பண்பு' என்னும சொலலானது முறை செய்தற்குரிய குணமாகிய மக்கட் பண்போடு இயைபுடையதாகக் குறளாசிரியா கருதுகிருர் எனபது,

'அரம்போலும கூரமையரேனும மரம போலவா
மக்கட பணபில்லாதவா.'

என்ற பாடல மூலம் தெரிகிறது. இஙகே முறை செய்தற்குச் சிறநத சாதனமாகிய கூாமை மககடபண்புடன் இணைககப படுகிறது. முறை செய்தறகு இறைவன பெரியாரைத் துணைககொள்ளவேண்டுமென்று ஆசிரியா கூறி அபபெரியார் யாா எனபதறகு விடையாக அரசனினும பெரியாா அனறு அவனுடைய குடிகளிற பெரியாா எனறு கருததுப படக் 'குடிமை' அதிகாரததிறகுபபினனுல 'பெருமை அதிகாரம வைததிருக்கிருா. இவவதிகாரததில,

'ஒருமை மகளிரே போலப பெருமையும்
தனனைததான கொணடொழுகின உணடு'

என அமைநதிருபபதும, இதன் உரையில 'ஒழுகுதல் மனமொழி மெய்களை ஒடுக்கி ஒபபுரவு முதலிய செயது போதல்' என்று கூறபபடுவதும நோககததககன.

'பெரியாரைபபிழையாமை' என்ற அதிகாரததில் பெரியாா எனறு சுட்டபபட்டவா அரசனினும பெரியாா அன்று, குடிகளில பெரியாா எனபது அவவதிகாரபபாககள தெளிவுறுததுகின்றன. தவததாற பெரியராய முனிவரும இதனுற சுட்டபபடுகிறதாக உரைகாரா கூறுவதில் நேர்மை யிலலை.

'யாணடுச் செனறு யாணடும உளராகாா வெம துபபின
வேநது செறபபட்டவா'.

இபபாடலில பெருங்குடிகள துபபு அலலது வல்லமை யுடைய வேநது போல்வர் (நிலவாட்சிககுரிய வேநதாயில் லாமல் செலவாக்கில வேநதனின நிலைமை வகிபபவர்) எனப படுகிறது. பகை மனனா எதிாததால தன் கீழ்வாழும குடி யாகிய துபபின்வேநதரைததுணை கொண்டு வெலலலாம; ஆதரவாயிருக்கவேண்டிய பெருங்குடி எதிாததால பகை மன்னா உதவி பெற முடியாதே; பகை மன்னரிடம போறலை பழியுண்டு ஆனபடியால.

'வகை மாணட வாழககையும வான பொருளும எனனும
தகை மாணட தககாா செறின'

இங்கே தக்காா எனபது தகுதி அலலது நடுவு நிலை மையில் இருநது முறை செய்யக கூடிய சான்றோா அலலது பெருங்குடிகளைக குறிககிறது.

உரைகாரா 'தககாா' என்பதை 'அருநதவா' எனக் கொள்வது பிறழநத உணாவின் பாறபட்ட உரையாகும.

'ஏநதிய கொள்கையாா சீறின இடைமுரிநது
வேநதனும வேநதுகெடும?

இங்கே வேந்தன் என்பது இநதிரனைக் குறிபபதாகக கொளளவேண்டியது அவசிய மின்று. அரசியல் விவகா ரத்தில் முனிவர் பிரவேசியாரான படியாலும அவர் ஆசை நீத்தவரான படியாலும ஞானததில் முயலாதாா யாவரை யுமே, நீத்தார் வெருளுவாா ஆனபடியாலும, நகுஷன் சிவி கையை அகத்தியன முதலிய முனிவாகள தூககிச சென்றா என்ற சிறாநம்பும பொய்க் கதையை உடகொண்டு உரை எழுதப் படுகின்றபடியாலும் உரைகாரா கூறுவது அசம

பாவிதமானது. 'வேநதனும வேநது கெடும்' என்பதில வேந்து என்பது பொருட் பாலிற கருதபபடும அரசனே. பொதுச சொலலான வேநதன் என்பது மருதத திணைக்கடவுளாகக் கருதபபடட மழைக்குரிய இநதிரனைக குறித்ததாகப் பொரு ளதிகார உரைகாரரால கொளளபபட்டதை இங்கே குறளு ரைகாரா பின்பற்றுவது தவறுடைதது. பொருளதிகார உரைகாரா கொண்டது இக்குறட்பாவிற்கு இணங்காது. ஏநதிய கொளகையாா என இங்கு சுடடபபட்டவர் குடிமை எனனும அதிகாரததில் கூறபபட்ட ஒழுக்கம, வாய்மை, நாண், செபபம முதலிய கொளகைகளுடைய பழங்குடிப் பெருமககளாவா. பெரியாரைப பிழையாமை எனனும அதி காரததில குணறனுா எனபபடடவா, குடிமை அதி காரததிற கடுதத மானம என்னும அதிகாரததில கூறபபட்ட குன்றின அனையாராவர். ஏநதிய கொள்கையாா என்ப தற்குத் தெளிவான இக்கருததை விலக்கி அருநதவா என வலிநது உரை கூற வேண்டிய அவசியமிலலை. இனிப பெரியாரைப் பிழையாமை எனனும அதிகாரத்திற் கருதப் பட்ட பெரியாா, பெரியாரைததுணைக்கோடல் என்னும் அதிகாரததில கருதப்பட்ட பெரியாராவா.

இபபெரியாா அரசாககு அமைசசரினும வேறான உறுப் பினா. அமைசசா அரசனுககு வினை செய்து அவா முன் நிற்பவர். பெரியாா எனபவா பெருங் குடியாளராய் அரச னுக்கு முறை செயலில துணைபுரிநது அவனோடு ஒபப வீற்றிருததற்குரியாா.

பெரியாரைததுணைககோடல் அதிகாரததில் 'தம்மிற் பெரியாாதமரா ஒழுகுதல வன்மையுள் எலலாம தலை' என்ற பாடலில் தமமிற பெரியார் எனபது பதவியிற் பெரியார்

அன்று. 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' என்று சுட்டப் பட்டவரும் நீதியையும் உலகியலையும் அறிந்த அவையத் தாராவர்.

சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.—குறள். 45-5.

இங்கே சூழ்வார் என்றது உரைகாரர் கூறுகிறபடி வினை செய்யும் அமைச்சரன்று. ஒற்றும் உரை சான்ற நூலும் என்று குறிக்கப்பட்ட மன்னனின் இருவகைக் கண்களில் ஒன்றான உரைசான்ற நீதி நூலைக்கற்று முறை செய்ய அமர்ந்து அரசனைச் சுற்றியிருக்கும் அவையத்தாராவர்.

உற்ற நோய நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியாரப் பேணிக் கொளல்—குறள். 45—2.

இப்பாடலில் முறை செய்யும் நீதியவையத்தாரது மாட்சிகள் எடுத்தோதப்படுகின்றன. உரைகாரரின் உரை உண்மைக் கருத்தை மீறியும், குறைந்து கூறியும் செல்கின்றது.

உற்ற நோய் என்பது வாழுங்குடிகள்* ஒருவர்க்கொருவர் செய்யும் வியவகாரத்தவறும் பொருளுக்கும் உடலுக்கும் இழைக்கும் குற்றமும் ஆகும். இதை நீக்குதல் முறை செய்து யார்தவறு செய்தார் எனவும் குற்றஞ் செய்தார் எனவும் துணிந்து பரிகாரஞ் செய்தல். உறாஅமை முற்காத்தலாவது "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிரவருவதோர் நோய்" என்ற அறிவுடைமை அதி

*நாடு அதிகாரம் 8-ம பாடலில உரையில் நாட்டுக் குடிகளில் சான்றோர், வாழ்வார என இருதிறத்தர் சுட்டப்பட்டிருப்பது நோக்குக. இவ்வுரையில் வாழ்வாராகாவல் எனபபட்டது தலையாரி காவல். அரசர் காவல் எனபபட்டது அவன் சான்றோருடன் செயயும் முறை செய்கை.

காரத்துப் பாடலின்படி வரக்கடவதாகத் துணியப்பட்ட தவறுகளேயும் குற்றங்களேயும் தடுத்தல்.

இனி இப்பெரியாரின் அவை அரசனுக்குச் சிறந்த உறுப்பாகக் காணப்படுவதால் ஆறங்கத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர்களுள் எப்பெயரால் இவ்வுறுப்பைச் சுட்டுகிறார் என ஆராய்வோம்.

'இறைமாட்சி' அதிகாரத்தின் முதற் பாடலில் அரசனுடைய ஆறு உறுப்புக்களும கூறப்படுகின்றன.

"படை குடி கூழமைச்சு நட்பரணாறும
உடையான அரசருள் ஏறு"

படை என்ற உறுப்புக்கு படைமாட்சி, படைச் செருக்கு என்ற இரண்டு அதிகாரங்கள கூறப்படுகின்றன.

கூழ் என்பதற்கு கூழ் ஆகிய வினே பொருள் தரும் நாடு, இறைப் பொருள் திறைப பொருள் ஆகிய பொருள் செயல்வகை, என்ற இரண்டு அதிகாரங்கள் கூறபபடுகின்றன.

அமைச்சு என்னும் உறுபபிற்கு அமைச்சியலில் வைக்கப்பட்ட 10 அதிகாரங்கள் கூறபபடுகின்றன. இவ்வதிகாரங்களுள் ஒன்ருன 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்பதில் மன்னர் எனப்பன்மை கொடுத்தது ஆராயத்தக்கது. இவ்வதிகாரத்தின் முதற்பாடலில் சுட்டப்பட்ட இகல் வேந்தராகிய வேற்றரசர், 4-வது பாடலிற் கூறபபட்டவரும் தம் அரசரோடு முறை செய்தலில் துணைபுரிபவரும் ஆகிய அவையத்தாராகிய பெருங்குடியாளர், தமமன்னர், இகல் வேந்தருடன் வீற்றிருக்கும் அவையத்தார் ஆகிய நால்வகைப் பட்ட மன்னர்கள் இவ்வதிகாரத்தில் கூறபபடுகிறார்கள்.

அவையறிதல் அவையஞ்சாமை என்னும் இரண்டு அதிகாரங்களிலும் அவையின் தன்மையை அமைச்சர் தூதர்களேயன்றி அவையின் உறுப்பினராகிய பெரியார்களும் அறிந்து ஒழுகுதலும் அம்மூவகுப்பினரும் அவையிற் பேச அஞ்சாமையும் கூறப்படுகின்றன. 'சொல்வன்மை' அதிகாரத்தில் சுட்டப்பட்ட குணம் அமைச்சர்க்கு மட்டு மன்று. தூதர்களுக்கும் அவையத்தார்க்கும் கூறப்பட்டது.

'நட்பு' என்னும் உறுப்பானது 'நட்பு' அதிகாரம் முதல் 'பெரியாரைப் பிழையாமை' ஈறாக 12 அதிகாரங்களில் கூறப்படுகிறது. இத்தனை அதிகாரங்களில் ஊடேயுள்ள இரண்டு அதிகாரங்கள்* பொருட்பாலிற்கு உரித்தன்று. இவை துறவறத்திற் சேர்க்கத் தகுந்தவை; அல்லது ஆறுறுப்புக்களுடன் அடங்காத ஒழிபியலில் சேர்க்கப்பட வேண்டும்.

'நட்பு' உறுப்பிற் சுட்டப்பட்ட நட்பாளர் பகைவர் என்னும் இருதிறத்தாரில் பிறநாட்டு மன்னர்களும் உள் நாட்டுக்குடிகளில் சான்றோர் எனப்படும் பெருங்குடியாளரும் அடங்குவர். உட்பகை என்ற ஓர் அதிகாரம் கூறப்படுவதாலும் அவ்வதிகாரத்தில் 'தமர் நீரும் இன்னாவாம் இன்னா செயின்' என்பதாலும், வாள்போல் பகைவர் என்று பிறநாட்டுப் பகைவரைச் சுட்டிக் கேள் போல் பகைவர் என்று உள் நாட்டுப் பகைவரைச் சுட்டுவதாலும், உட்பகையுற்ற குடி என்று அரசனுடைய உள் நாட்டுக் கேளிரைக் குறிப்பிடுவதாலும், துபபின் வேந்தராகிய பகையாதற்குரிய பெருங்குடியாளரும் நட்பு என்ற உறுப்பில் சுட்டப்படுகின்றனர் என்று நாம் கருதவேண்டும்.

---

* பேதைமை, புல்லறிவாண்மை.

இனி அரண் என்ற உறுப்பிற்குத் திருக்குறளில் ஓர் அதிகாரந்தான் கொடுத்திருக்கிறது. ஆனால் இந்நூலின் 34-வது பக்கம் அடிக்குறிப்பில் கூறியபடி திருவள்ளுவமாலையிலுள்ள போக்கியார் பாடலின்படி அரண் என்ற உறுப்பிற்கு ஆதியில் இரண்டு அதிகாரங்கள் ஏற்பட்டிருந்தனவாகத் தெரிகிறது. பிற்காலத்தில் ஒரு அதிகாரம் தவிர்க்கப்பட்டு அதற்குப் பதிலாக இப்போதுள்ள 'நாடு' என்னும் அதிகாரம் குறளில் வேறு இயலிலிருந்து மாற்றப்பட்டோ அல்லது பொருளியலில் புதிதாகச் செருகப்பட்டோ இருக்க வேண்டும். இவ்வாறு குறளில் அதிகாரங்கள் மாறி அமைந்திருப்பதற்கு ஆதாரமாக நுண்பொருண்மாலையில் காணப்பட்டதாக வேறுபாடுடைய போக்கியார் பாடல் ஒன்று* மு. ரா. அருணைசலக் கவிராயரின் குறட் பதிப்பில் காட்டப்படுகிறது. இப்பாடலில் அரசியல் தவிர உள்ள அங்கங்கள் ஆறு என்ற குறளாசிரியரின் நிபந்தனைத் தொகைக்கு மாறாக நாடு, குடி ஆகிய இரண்டும் சேர்ந்து ஏழு உறுப்புக்கள் கூறப்படுகின்றன. இதிலிருந்து இப்பாடல் ஒரு நற்புலவன் பாடல் அன்று என நாம் யூகிக்கக் கூடியதாயிருக்கிறது.

இவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்ட 'நாடு' 'குடி' என்னும் உறுப்பைப் பற்றியது எனக் கொள்ள இசையாமல் மணக்குடவர் படை கூழ் என்பவற்றுடன் சேர்த்து 'நாடு' என்பதைப் பொருளியல் என்ற ஓர் அங்கத்தில் சேர்த்தார்.

---

*அரசியல் ஐயைந்து, அமைச்சியல் ஈரைந்து, உரை நாடரண் பொருள ஒவ்வொன்று—உரைசால் படையிரண்டு நட்புப்பதினேழ் பன் மூன்று குடி எழுபான தொக்க பொருட்கூறு.

மேற் சொன்னதிலிருந்து 'குடி' என்னும் இரண்டாவது உறுப்பு நாட்டிற் சிறப்புடன் வாழ்வாரும முறை செய்யும் அவையத் தாருமாகிய பெருங் குடியாளரை நோக்கிற்று. இக்கருத்தில் குடிமை முதல் நாணுடைமை ஈறுகவுள்ள 7 அதிகாரமும் குடிமை என்பதன்கண் அடங்கும. இங்கே குடிமை என்பதற்கு குடிப்பிறப்பு அல்லது உள் நாட்டுப பழம் பெருங் குடிகளிற் பிறநது உள் நாட்டுக் குடிகளுடன் செறியத்தக்க (அளவளாவத்தக்க) பண்பு என்பது கருத்து.

இந்த ஆராய்ச்சியால் 'குடி' என்பது நாடு என்ற அதிகாரத்தில் கூறபபட்ட உறுப்பாயில்லாமல் ஒழிபியலிற் கூறப்பட்ட (குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில்செல்வம், நாணுடைமை என்ற) 7 அதிகாரங்கள் கொண்ட உறுப்பு எனக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு உறுப்புக்களுக்குள் அடங்காதவையும அங்கவியல் ஒழிபியல்களிற் சேர்க்கப்பட்டிருப்ப வையுமான அதிகாரங்களை இல்லறத்திலும் துறவறத்திலும தகுதி நோககிச் சேர்த்துப் பொருட்பாலுக்கு அரசியல, அங்கவியல் என இரண்டே இயல்கள் அமையும்படி அதிகார வைப்பு முறை ஒழுங்கு படுத்தப்படவேண்டும்.

> 'வகை மாண்ட வாழ்க்கையும் வானபொருளு மெனனும்
> தகை மாண்ட தக்கார் செறின'

என்ற பாடலின் உரையில் 'உறுப்பழகு பெற்ற அரசன் அரசாட்சி என்ற சொற் றொடரிலுள்ள உறுபபு என்பது அமைச்சு, நாடு, அரண், படை என இவை' என்று எழுதப் பட்டிருக்கிறது. வெகுளத் தக்காராகிய குடியே நாடு என உரைகாரரால் கருதப்படுவதால், வெந்து விடக்கூடிய உறுப் புக்களில் நாடு என்பதையும் உரைகாரர் சேர்த்தார். தக்கார்

என்பது அரசனுக்கு இணையான பெருங்குடியாகிய சிறந்த உறுப்பைக் குறிபபதால், உரையில் வெந்து விடக்கூடிய உறுப்புக்களில் 'நாடு' என்பதற்குப் பதிலாக 'நட்பு' என்பது கூறப்படவேண்டும்.

இனிப் பொருளதிகாரம் புறத்திணையியலிலுள்ள வாகைத் திணைச் சூத்திரங்களையும் அச்சூத்திரங்களின் வரும் மேற்கோட்பாடலையும் உற்று நோக்கினால் குடி என்பது முறை செய்யும் அவையத் தாரைச் சுட்டியது என்பது நன்கு விளங்கும்.

பொருளதிகாரம் 76-வது சூத்திரத்தில் வாகைத் திணைத் துறைகளை இருவகைப்படுத்துக் கூறியிருக்கிறது. அவை மறத்துறை, அறத்துறை என்பன. அவற்றில் 'எட்டு வகை நுதலிய அவையத்தானும்' என்று ஒரு துறை கூறப்படுகிறது; அத்துறைக் குரிய எட்டுக் குணங்களை எடுத்துக் கூறும் ஒரு மேற் கோட் பாடல் உரையில் காணபபடுகிறது. அப்பாடல் வருமாறு :—

குடிப்பிறபபுடுத்துப பனுவல் சூடி
விழுபபே ரொழுக்கம் பூணடு காமுற
வாய்மை வாய்மடுத அ மாநதித தூய்மையில்
காத லின்பததுத தூஙகி வைகலும
அழுக்கா றின்மை யவாஅ வின்மை யென
இருபெரு நிதியமு மொருதா மீட்டும்
தோலா நாவின மேலோா பேரவை
உடன் மரீஇ இருக்கை ஒருநாட் பெறு மெனில்
பெறுகதில் லமம யாமே ; வரன் முறைத
தோன்று வழித் தோன்றுவழிப புலவுப் பொதிந்அ
நின்றுழி நின்றுழி ஞாஙகா நில்ல

நிலையழி யாக்கை வாய்ப்பவும்
மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே.

ஆசிரிய மாலை—புறத்திரட்டு—அவையறிதல்.

திருக்குறளில் அவையத்தார்க் குரிய எண்வகைக் குணங்கள் ஒழிபியலிலுள்ள குடிமை முதலிய எட்டு அதிகாரங்களில் கூறப்படுகிறது. பொருளதிகார மேற் கோட் பாடலிலுள்ள அவையத்தார்க்குரிய எண்குணங்கள் குடிமையியலில் அமைந்திருக்கிற தன்மையைக் கவனிப்போம்.

## 1. குடிப்பிறப்பு.

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல் பாகச்
செப்பமு நாணும் ஒருங்கு"—குடிமை 1.

செப்பம் என்றால் நடுவுநிலைமை.

"செப்ப முடையவ னாக்கஞ் சிதை வின்றி
எச்சத்திற் கேமாப்புடைத்து"

என்ற நடுவுநிலைமை அதிகாரத்துப் பாடலில் செப்பம் என்பது நடுவுநிலைமை எனப் பரிமேலழகர் உரை கூறுதல் கவனிக்கத் தகுந்தது. குடிப்பிறப்பு அதிகாரத்துப் பாடலிலுள்ள மேற்கண்ட பாடலின் உரையில் 'செப்பம் செம்மை என்றும் செம்மை கருத்தொடு சொல்லுஞ் செயலுந் தம்முண் மாறுகாமை' என்று கூறியிருப்பது பொருத்தமாகக் காணப்படவில்லை. நடுவு நிலைமை அதிகாரப் பாடலுக்கு உரை எழுதினவர் இக்குடிமை அதிகாரப் பாடலுக்கு உரை எழுதினவராய் இருக்கமுடியாது. இப்பின்பாடலின் உரை செருகுரையா யிருக்கவேண்டும்.

இனி 102-வது நாணுடைமை அதிகாரத்தில்

'ஊணுடை எச்சம் உயிர்க்கெலாம் வேறல்ல
நாணுடைமை மாந்தா சிறபபு'

என்னும் பாடல் காணபபடுகிறது. இதில் 'உடை' என்ற சொல் குடிப்பிறப்புடுத்து என்ற தொடருடன் இயைவது கவனிக்கத் தகுந்தது. ஊண் என்றதால் தன் வயிறு நிரப்புதலும், உடை என்றதால் தன் மானம மூடுதலும், எச்சம் (=சந்ததி) என்றதால் மக்கட் பேற்றிற்குக் காரணமான இணைவிழைச்சும (காமநுகர்ச்சி) குறிக்கப்படுகின்றன. இச் சிறு ஒழுக்கங்களைக் கல்லா மாநதரும மடநதையரும் பின் பற்றுவர். ஆனால் குடிப்பிறப்பிற்கு உரிய வாகக் குறளாசிரியரால் கருதபபட்ட செப்பம், நாண் என்ற இருவகைத் தாரகப் பண்புகளில் ஒன்றுன நாணம் மாநதர் தம்மைப போர்த்துக் கொள்ளும் உடை எனப்பட்டது. இநநாண் என்னும் பண்பின் தன்மை அவையத்தார்க்கு இன்றியமை யாது வேண்டபபடும் குணமாகக குறளாசிரியரால் கருதப் பட்டது என்பது நாணின் இருவகைத தோற்றங்களைக் கூறும் குறட்பாவாகிய,

"பிறாபழியும் தம்பழியும் நாணுவாா நாணுக்
குறைபதி எனனும உலகு"

என்ற பாவிற் புலப்படுகிறது. குடிகட்கு உற்றநோய் நீக்கி அவர்கட்கு எதிர்காலத்து அஞசபபடும அதிர்சசி நோய் உறாமல் முன்னே காக்கும் அவையததாா அக்குடிகள் ஒருவர் க்கொருவர் இயற்றும தவறு, குறறம ஆகிய பழிகளைத் தமக்கு நேர்நதன போல் கருதுபவராக இருக்கவேண்டும் என்பது இப்பாவின் கருத்து. முறை செய்யும் தக்காரை மனதில் வைக்காவிட்டால் இக்குறட்பா இவ்வளவு அழ குடன் ஆசிரியர் மனதில் உதயமாயிருக்காது.

## 2. பனுவல் சூடி.

'நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு'—பண்புடைமை-4.

உரைகாரர் இப்பாடலின் தொடக்கப் பாகத்திற்கு 'நீதியையும் அறத்தையும் விரும்புதலால்' என்று முறை செய்வார்க் குரிய நீதிநூல் அறநூல் ஆகிய, தண்ட நூல் வியவகார நூல் இரண்டையும் உட்கொண்டு உரை எழுதுதல் கவனிக்கத் தக்கது.

'அரமபோலும கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்'—பண்புடைமை. 7.

முறை செய்தற்கு வேண்டிய உய்த்துணர்வு இங்கே சுட்டப்படுகிறது.

'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்'
—பெரியாரைத் துணைக் கோடல். 1.

உரைகாரர் 'அறநுண்மை நூலானே யன்றி உய்த்துணர் வானும் அறிய வேண்டுதலின், அறனறிந்தென்றார்' என்று கூறுவது நோக்கற் குரியது.

'ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையால் நீளும் குடி'—குடி செயல் வகை. 2.

உரைகாரர் ஆன்ற அறிவு நிறைந்த அறிவு என்றும் நிறைதல் இயற்கை யறிவு செயற்கையறிவோடு நிரம்புதல் என்றும் கூறுதல் கவனிக்கத் தகுந்தது. இக்காலத்துச் செல்வர்களை ஜ்யூரர் (=Juror), அஸஸர் தொழில் செய்யும் பொருட்டு நியாய அதிகாரிகள் தேர்ந்தெடுப்பது போல் பண்டையக்

காலத்திலும் உள் நாட்டுப் பிறந்த பெருங்குடியாளரை அரசவைக்கு முறை செய்ய வருவிப்பது வழக்கத்திலிருந்தபடியால் குறுநில ஆட்சியாளரெல்லாம் முறை செய்யும் கடமைக்குத் தயாராக இருக்க அற நூல் நீதி நூல்கள் நாளடைவில் கற்றே தீரவேண்டும் என்பது இக் குறட் பாடலின் கருத்து.

'நுண் மாண் நுழைபுலம இல்லான எழில்நலம்
மண்மாண புனைபாவை யற்று'—கல்லாமை. 7.

இக்குறளில் 'பனுவல் சூடி' என்றதன் கருத்துக் கிடப்பது காண்க.

இப்பாவின் தொடக்கபாகத்திற்கு 'நுண்ணிதாய் மாட்சிமைப் பட்டுப் பல நூல்களினும் சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும்' என்று உரை கூறுதல் நோக்கற் குரித்து. எழுச்சி, உடம்பின் தோற்றப் பொலிவு; நலம், பூ முதலிய வற்றால் புனைதற் பொலிவு. பாவையைக் கோயிலிற் பூவாலும் நகைகளாலும புனைவது உட்கொண்டு இபபாடல் ஆசிரியர் திருவுள்ளத்தில் உதயமாயிருக்க வேண்டும். உரைகாரர் 'புனை' என்பதன் பொருளணியை விளக்காதது வருநதத் தக்கது. பனுவல் என்ற சொல்லும் நம்முடைய அருமை ஆசிரியரால் தமது அருமை நூலில் வழங்கபபட்ட சொல்லே.

'ஒழுக்கதது நீததாா பெருமை விழுபபதது
வேணடும் பனுவல துணிவு'—நீததாா பெருமை. 1.

'பனுவல்' என்பது சுருதி, அங்கம், பிடகம, ஆகமம், தர்மம், சித்தாந்தம் என்பது போலச் சிறப்புச சமய நூலன்று; பொதுக்கருத்துடைய சொல்லென்று உரைகாரரால் கூறப் படுவது கவனிக்க. ஆகலால் பொருளதிகார மேற் கோட்

பாடலில் பனுவல் என்பதால் முறை செய்வார்க் குரிய அற நூலும் நீதிநூலும் சுட்டப்படும்.

## 3. விழுப்போர் ஒழுக்கம்.

அதாவது தனக்கு விழுப்பம் அல்லது சிறப்பைக் கொடுக்கும் பணிவாகிய ஒழுக்கம். நாட்டிற் பிறந்தார் யாவரிடத்தும் தானும் அவர் நாட்டிலேயே பிறந்து அவருடன் பழகித் தான் அடைந்த நன்மையைத் தன் மனத்தில் வைத்திருப்பதாக அவர் முன் காட்டும் மரியாதை ஒழுக்கம்.

'நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு'—குடிமை. 10.

இங்கே பணிவு என்பது தன் நாட்டிற் பிறந்தார் மாட்டுத் தான் காட்டும் ஈரம் அல்லது அன்பு. 'யார்க்கும்' என்ற சொல்லின் வரம்பை உரைகாரர் நன்றாய் உணர்த்தவில்லை. 'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தமமுன்னோர் தந்தை தாய் என்றிவர் எல்லாரும் அடங்க, யார்க்கும் என்றார்' என்று உரைகாரர் கூறுவது பொருத்த மின்று. இப்பெரி யார்க்குக் காட்டும் மரியாதை இக்குறட்பாவிற் சொல்லப் பட்ட நாணுடைமையின் கண் அடங்கும்; இவர்க்குச் செய்யும் மரியாதையானது நலமாகிய புண்ணியம் பயப்பதால். பணிவு என்ற சொல்லால் இருக்கை எழுதல் போன்ற புறமரியாதை மட்டும் சுட்டப்பட்ட தன்று.

'நலத்தின் கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின் கண் ஐயப் படும்'—குடிமை. 8.

இக்குறட்பாவிலுள்ள நாரின்மை என்பதில் சுட்டப்பட்ட ஈரமுடைமையே மேற்கண்ட 10-வது குறட்பாவில் பணிவு

எனப்பட்டது. தனக்குள்ள நன்மை எல்லாம் தன் அண்டையிலும் தன் நாட்டிலும் தன்னைப்போற் பிறந்து வாழ்ந்தாருடைய சேர்க்கையால் ஆயது என எண்ணும் எண்ணமே பணிவு எனப்படும். இக்குணத்தைத் தருக்கின்மை எனச் சொல்லலாம்.

'பணியுமாம் என்றும பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியநது'—பெருமை- 8.

உரையில் 'அணியும்=புனையா நிற்பர், புனைதல்=பிறரில் தமக்கோர் மிகுதியை ஏற்றிக்கோடல்' என்று கூறப்படுவது கவனிக்கத் தக்கது.

இவ்விழுப்பேரொழுக்கமாகிய பணிவு அடக்கம் எனவும் படும்.

'செறிவறிந்து சீரமை பயக்கும் அறிவறிநது
ஆறறின அடஙகப பெறின'—அடககமுடைமை. 3.

இப்பாடலின் தொடக்கப பாகத்திற்கு 'அவ்வடக்கம் நல்லோரான் அறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும்' என்று உரைவரைநதிருபபது உற்று நோக்கத் தக்கது. 'நல்லோரான்' என்பது முன்னமே அரசனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையத்தார் என்று கருதப்படும்.

'ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும'—ஒழுககமுடைமை. 3.

உரைகாரர் 'குடிமை குலனுடைமையாம்'=என்று உரைப்பது உற்று நோக்குக. இழிநத பிறப்பு என்பதற்குத் தாழ்ந்த வருணம் என்று தவறுதலாக உரை வரையப்பட்டிருக்கிறது.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீ யொழுக்கம்
என்றும் இடும்பை தரும்'

—ஒழுக்க முடைமை. 8.

தீ யொழுக்கம் மற்ற உண்ணாட்டாரிடமிருந்து வெறுப்பை விளைப்பதால் இடும்பையாகிய 'சுகக்கேடு தரக் கூடியதாயிருக்கிறது. ஆதலால் மேற் பாடலில் இழிந்த பிறப்பு என்றது இடும்பையாகிய இழி நிலைக்குக் கொண்டு செலுத்தும் நிலை யெனப்படும். உண்ணாட்டாரால் விரும்பப்பட வேண்டும் என்ற உரிமைக்குப் பங்கம் ஏற்படுவதால் இழிந்த பிறப்பு எனப்பட்டது.

## 4. வாய்மை.

வாய்மை என்ற விஷயமாய்க் குறளாசிரியர் கூறுவது கூர்மையுடன் சிந்திக்கப்பட வேண்டும்.

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'—வாய்மை. 2.

இங்கே ஒருவன் தனி வாழ்க்கையில் **(Private life)** கவனிக்க வேண்டிய ஒழுக்கம் சுட்டப்படவில்லை. பிற நாட்டார் அல்லது பிற நாட்டார் நன்மையைக்கருதும் உண்ணாட்டார் அரசனுடைய குடிகளை அல்லது அருட் குருவின் சிஷ்யர்களை நாட்டு மக்கட்கு விரோதமான வழியில் திருப்புவதற்கு உபதேசிக்கப்படும் வேந்தியற் கொள்கை அல்லது சமயக் கொள்கை இங்கே சுட்டப்படுகிறது. அறிவில்லாத குடிகளையும் சிஷ்யர்களையும் அவர் நன்மை நோக்கி அமைதியில் தங்கும்படி செய்ய பொய்க் கொள்கை உணர்த்தப்படலாம்.

களவு, கொலை, தீயகாமம், கள் அருந்தல், பொய்கூறல் என்ற கடியப்படும் ஐந்துவகைக் குற்றங்களில் பொய்கூறலை விளக்கும் பொழுது சமயவாதிகள் யாவரும் மறு உலகம் சம்பந்தப்பட்ட மட்டில் தொன்றுதொட்டு அவ்வம்மதத்தில் வந்த கொள்கைகளை உண்மை எனக்கோடல் வேண்டுமென உபதேசிக்கின்றனர். யாவனொருவன் அக்கொள்கைகள் காட்சியளவை வரம்புக்குட்பட்டன அல்ல என்று அவற்றிற்கு விரோதமாகக் கொள்கைகளைப் பரப்பமுயலுவானாகில் அவ்வம்மதத்தாரால் அவன் பொய்யன் எனப்படுவான். அப்பேர்ப்பட்ட கட்டத்தை இக்குறள் நோக்கினது. மெய்ந்நூற்படி அக்கொள்கைகள் பொய்ப்பால ஆயினும் நாட்டமைதி நோக்கி அவை வாய்மையின் பாற்படும் என ஆசிரியர் நாட்டின் தலைவர்க்கு அந்தரங்க உபதேசம் செய்கிறார்.

'உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்'—புல்லறிவாண்மை 10.

உரையில் 'கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பயனும் முதலாக உலகத்தார் உளவென்பன பலவேனும் *சாதிபற்றி உண்டென்பதென்றும தானே வேண்டிய கூறலால்... அலகை என்றும் கூறினர்' என்று காணப்படுகிறது. பௌத்தரில் ஹீனயனவகுப்பினர்க்குரிய மூன்று பிடகங்களில் ஒன்றான சூத்ரபிடகத்துப் பஞ்சநிகாயங்களுள் கடைசி நிகாயமான குத்தக நிகாயத்தின் 15 பிரிவுகளில் ஒரு பிரிவான தம்மபதம் என்னும் சிற்றாகமத்தின் 'உலகம்' என்னும் தலைப்புப் பெயருடைய 13-வது அத்தியாயத்தில் 112-வது கட்டுரை மொழி அடியிற் கண்டபடி இருக்கிறது.

---

* மறுமைபற்றிய இனம்.

"இறைவனுடைய உபதேசங்களில் ஒன்றத்தனையி லாவது ஒருவன் தவறு வானுனாலும், மறுவுலகக்கொள்கை விஷயத்தில் அவன் நகையாடிப் பொய் கூறுவானுனாலும், அவன் செய்யத் துணியக் கூடாத தீது வேறொன்று இன்று." என்று கூறப்படுகிறது.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு'—மெய்யுணர்தல். 5.

என்ற குறட்பாவைக் கூறும் ஆசிரியரின் தர்க்க நூல றிவிற்கு சமயக்கட்டுப் பாட்டுக்குள் அடங்கும் வாய்மை யானது, ஐயத்தின் நீங்கிய தெளிவு என்று சொல்லப்பட மாட்டாது. ஆகலால் அவர் மெய்ந்நூலைப் பின்பற்றிச் சமயநூலை மீறி அக்கொள்கைகளைப் பொய் என்றார். ஆயினும் உலகம் தழீஇயதே ஒட்பம் என நம் அருமை ஆசிரியர் கொள்ளுதலால் மக்கட்கு இம்மை விஷயத்தில் தீது பயவாப் பொய்யும் வாய்மை இடத்தது என்றார்.

இனிப் பொருளதிகார மேற்கோட் செய்யுளில் வாய்மை எனப்பட்டது முறை செய்யும் அவையத்தார் வேண்டும் அற நூல் நீதிநூல்களிற் சொல்லப்பட்ட துணிவுகளில் ஒன்றும் பிறழாது கூறுதல்.

'வகையறிந்து வல்அவை வாய் சோரார் சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர்'—அவையஞ்சாமை. 1.

உரையில் "வாய் சோரார் அசரத்தால் வழுப்படச் சொல்லார்" என்று கூறப்படுகிறது. அவையறிதல் அதிகாரத்தின் முத லாவது பாடலின் உரையில் சொல்லின் தொகை, தூய்மை என்பன விளக்கப்படுகின்றன. இங்கே "சொல்லின் குழு எனவே செஞ்சொல், இலக்கணச் சொல், குறிப்புச் சொல்

என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின" என்று உரைக்கப் படுவதை உற்று நோக்கினால் முறை நூல் கற்று வழக்குத் தீர்ப்பாரை அவை சம்பந்தப்பட்ட இப்பாடல்கள் நோக்கு கின்றன எனத் தெரியும். உரைகாரர் 'அவை என்றது ஈண்டு அதன் அளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூவகைத்து; அறிதல் தம்மொடு தூக்கி அறிதல்' என்று சொல்வன எல்லாம் பொருந்தா உரைகள். நியாய சபையில் அச்சபையின் உறுப்பினருள் ஒருவர் ஒருவர்க்குத் தமக்கு முன் முறை வேண்டினோர் கொண்டுவந்த வழக்கில் துணி விற்கு வரும் பொருட்டு முறையிடுவார் கூறும் மொழி களையும் அற நூற்கொள்கைகளையும் தூக்கி ஆராயும் செய்கையை நோக்கின அவைக்குரிய இவ்வதிகாரங்கள். இதை உணராமல் தமிழ் நாடு சீர் குலைந்து நின்ற பிற் காலத்தில் வாழ்ந்த யாரோ ஒரு உரைகாரர் பிறழ்ந்த உணர்ச்சி வயப்பட்டுத், தமக்கு வேண்டியவாறு கூறுகிறார்.

துணிவுக்கு வருதலில் களையப்பட வேண்டிய வழு இது என

'இடை தெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
தொகை அறிந்த தூய்மையவர்'

என்ற குறட்பாவின் உரையில் கூறுகிறார். 'வழு சொல்வழுவும் பொருள் வழுவும்' என்பது தான் அது. இப்பாடலில் "இடை—அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வி" எனத் தவறுதலுடைய உரை கூறப்படுகிறது. இடை என்பது அற நூலில் பொருள் காணப்படும் கட்டுரைப் பகுதியும் முறையிடுவார் சபை முன் கூறும் வாக்கு மூலப் பகுதியும். அதிகாரத் தலைப்புப் பெயராகிய அவை யறிதல் என்பதும் ஒப்புரவறிதல் என்பது போல் அவைக் குரிய முறை செய்வதற்கு உதவியாகும் அற நூல்களையும்

நீதிநூல்களையும் கற்றறிதல் என்பதே பொருள். உரைகாரர் உரைக்கிறபடி 'அவையினது இயல்பை அறிதல்' என்று கருத்தன்று.

' சலம் பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம் பற்றி வாழ்தும் என்பார் '—குடிமை 6.

உரை :—பெருங் குடியாளர் என்பார் வஞ்சனையைப் பொருந்தி அமைவில்லாத தொழில்களைச் செய்யார் என்பது இப்பாடலின் கருத்து. முறை செய்தலுக்கு வேண்டும் பரிதானப் பற்றின்மையும் முறைக்குரிய இருபக்கத்தாரில் ஒருவர் பக்கம் சாயாமையும் இக் குறட்பாவிற் சுட்டப் பட்டன. வாய்மை விலகுதற்கு இவை காரணங்களான படியால் இவை கூறப்பட்டன.

இனிக் குறளில் வாய்மை எனப் பட்டது மூன்று கருத்துக்களில் உணர்த்தப்படுகின்றன என்ற விஷயம் நம்மால் கவனிக்கப்படவேண்டும். புறங்கூறாமை என்ற அதிகாரத்தில்

"அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன் அழீஇப் பொய்த்து நகை"

"புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலில் சாதல்
அறங் கூறும் ஆக்கம் தரும்"

என இரண்டு குறட்பாக்கள் காணப்படுகின்றன. இப் பாடல்களில் உள்ள பொய்த்து என்பது ஒருவனைக் கண்ட இடத்துப் புகழ்தலும் அவனைக் காணாத இடத்து இகழ்தலும் ஆகிய தன்மையைக் குறிக்கிறது. ஒரு நிகழ்ச்சியைப் பட்ட படியே சொல்லுதல் ஆகிய குணம் இங்கு சுட்டப்படவில்லை.

இனித்துறவற வியலில் வைக்கப்பட்ட 'வாய்மை' என்னும் அதிகாரத்தில் வழங்கப்படும் 'வாய்மை' என்னும்

சொல்லும் இருவகைத் திறங்களை உட்கொண்டு வெவ்வேறு கருத்துக்களில் அமைந்திருக்கின்றன.

'யா மெய்யாக் கண்டவற்றுளில்லை எனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற'—வாய்மை. 10.

உரைகாரர் 'மெய்யுணர்த்தவற்றை மெய் என்றார். காம வெகுளிகள் இன்மையின் பொருள்களை உணர்ந்த வாறே உரைக்கவல்லராய இறைவர் அருளான் உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவை எல்லா வற்றினும இது ஒப்ப முடிந்தது' என்று கூறுவது கவனிக் கத்தக்கது. உரைகாரர் கருதுகிறபடி திருவள்ளுவர் பிரமாணமாகக் கொண்ட ஆகமங்கள் மக்கள் மன அமைதி ஒன்றையே முடிவாகக் கருதிக் பொய்ச்சமயக் கோட் பாடுகளை மெய்த் துணிவுகளாக உரைக்கும் நூல்களல்ல எனத் தெரிகிறது.

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு'

என்ற குறளும் கவனிக்கத்தக்கது. உரைகாரர் 'உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத இருள் (அஞ்ஞானம) போகலின் பொய்யா விளக்கே விளக்கென்றார்' என்றும், மேல் பதவுரைப் பாகத்தில் "மனத்திருள் கடியும் பொய்யாமை யாகிய விளக்கும்" என்றும் கூறுவதிலிருந்து 'பொய்யா விளக்கு' என்பது இக்குறளாகிய பொய்யாமொழி போன்ற ஒரு ஆகமம் ஆகவேண்டும் எனத் தெரிகிறது.

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'—வாய்மை. 2.

இக்குறட்பாவானது திருக்குறளின் மேன்மைக்கு ஒரு இழுக்கு உண்டு பண்ணக் கூடியதாயிருக்கிறது. சமயக் கொள்கை விஷயமாக மன அமைதி நிமித்தமாகவும் உலகத்தில் சாந்தவாழ்க்கை நிலவுதலைக்கருதுதல் நிமித்தமாகவும் பொய்க் கொள்கைகளைப் பரவச் செய்தலில் குற்றமில்லை என அரசியல் வாதச் சார்பாக முற்காலத்தில் நம் நாட்டில் ஒரு கொள்கை ஆளப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. அக் கொள்கையை அநுசரித்த பிறமதத்தார் கொள்கை இக்குறளில் சுட்டப்படுகிறது. தமக்கு இணங்காத பிறமதக் கொள்கைகளிற் சிலவும் இத்திருக்குறளிற் புகுந்திருக்கின்றன என உரை ஆசிரியர் கருதி வேறு இடத்தில் உரை எழுதுகிறார்.

"இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்ற குறளின் உரையில் "மூவராவார் பிரமசரிய ஒழுக்கத்தானும் வனத்தின் கண் தீ*யொடு சென்று மனையாள் வழிபடத்தவஞ் செய்யும் ஒழுக்கத்தானும் முற்றத் துறந்த யோக ஒழுக்கத்தானும் என இவர். இவருள் முன்னை இருவரையும் பிறர் மதம் † மேற் கொண்டு கூறினார்" என்று காணப்படுகிறது. இக் குறளிற்குப் போலவே "பொய்ம்மையும் வாய்மை யிடத்த" என்ற மேற்கண்ட குறளுக்கும் பிறர் மதம் கூறப்பட்டது என உரை கூறலாம் எனத் தெரிகிறது. ஆதலால் தீது பயவாத மெய்ம் மொழியை வள்ளுவர் நன்று எனக் கொண்டாரே ஒழிய, நன்று பயப்பதாகக் கருதப்படும் பொய்ம் மொழியை நேர்

---

* வேதமந்திரத்தொடு மூட்டப்பட்டு வணங்கப்படும் அக்கினி
† ஆகம சமயம் அல்லாத வைதீக சமயம்.

மையின் பாற் பட்டது என அவர் கருதவில்லை என்று நாம் கொள்ளவேண்டும்.

ஒன்றோடொன்று இணங்காத குறட்பாக்களை இங்கு வாய்மை அதிகாரத்தில வைத்ததுபோல் பௌத்த நூற்களின் ஒரு பிரிவான தமமபதம என்னும் சிற்றுகமத்தில் 'மலர்கள்' என்ற தலைப்புப் பெயருடைய அதிகாரததில் வரும 15 வாய்மொழிகளில் மலர் என்பது ஒன்றுக் கொன்று மாறுண பல்வகைக் கருத்துக்களை யுடையதாய் வருகின்றது. 'மலர் மிசை ஏகினன்' என்பதிற் போல நன்மொழிகளாற் கோக்கப் பட்ட மாலை என்ற கருததிலும நலம புனைநதுரைத்தல் என்னும் அதிகாரத்தில் அமைநத சில பாக்களிற் போலக் காதலியின் உறுப்புக்களை ஒத்த மெல்லிய மலர்கள் என்ற கருத்திலும மலர் என்பது தமமபதததில வழங்கப்படுகிறது.

இம்முறைப்பட நூலியற்றுவது அக்காலத்தில் இலக்கண ஆசிரியர்களால் களையப் பட்ட முறை யன்று என நாம் யூகிக்க வேண்டியிருக்கிறது. ஓர் அதிகாரத்திற்குப் பத்துப்பாடல் அமைக்க வேண்டும என்ற நிபந்தனையானது வழுப்பட்ட இம முறைக்குக் காரணமா யிருக்கவேண்டும். அக்கால முறைப்படி இம்முறை வழு அமைதி என்று அங்கீகரிக்கப்படும்.

இனி வாய்மைக்குடி என்பதில் வாய்மை என்பதை மெய்ந் நூல், அற நூல், பொய்யா விளக்காகிய நூல் என்னும் நூல்களிற் கண்ட வாய்மை மொழிகளைக் கற்று அவற்றை அஞ்சாமற் சொல்லும தன்மை எனவும புறங் கூறிப்பொய்யா வழி எனவும் நாம் கொள்ளவேண்டும்.

மேலே எடுத்தெழுதப்பட்ட பொருளதிகார மேற் கோட்பாடலாகிய ஆசிரிய மாலைப்பாட்டில் வழக்குத் தொ

டுப்பார், வழக்கெதிர் மறுப்பார், வழக்கில் முறை செய்வார் ஆகிய மூவுறுப்புக்களால் ஆக்கப்பட்ட அவையின் கண் இறைவன் கட்டளைப்படி உயர்ந்த பலகை (bench) ஆகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் வரிசை பெற்ற முறை செய்யும் அவையத்தார்க்கு அமைந்திருக்க வேண்டிய பண்புகள் உடலின்பத்திற்குரிய எட்டு வகை நுகர்ச்சிப் பண்டங்களுக்கு உவமிக்கப்படுகின்றன. மானம் மறைப்பதற்குரிய ஆடை, கூந்தலுக்கு நறுமணம் கொடுக்கும் பொருட்டுத் தலையிற் சூடப்படும் பூமாலை, உடம்பிற்கு அழகிய தோற்றப் பொலிவு மிகும் பொருட்டு அணியப்படும் தடையம் (ஆபரணம்), ஆத்ம நன்மைபயத்தற் குரிய கல்விச் செல்வம், உணவுக்குரிய பொருட் செல்வம் ஆகிய இருபெருஞ் செல்வங்கள், பருகுதற் குரிய பானம், உறையுளாகிய மாளிகை, படுக்கையாகிய உறங்கிடம் ஆகிய எட்டுப் பொருள்களும் உவமானப் பொருள்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன. குடிப்பிறப்பு, முறை நூற்களில் தேர்ச்சி, பேரொழுக்கம், அழுக்காறின்மை, அவாவின்மை, வாய்மை, நடுவுநிலை, இல்வாழ்க்கை ஆகிய அவையத்தார்க்குரிய எட்டுக் குணங்களும் உபமேயப் பொருள்களாகத் தெளியப் பட்டிருக்கின்றன.

அப்பண்புகள் எட்டில், குடிப்பிறப்பு, முறை நூலில் தேர்ச்சி, பேரொழுக்கம், வாய்மை ஆகிய நாலு உவமேயப் பொருள்கள் திருக்குறளில் அரசன் தலைமைக்கு அங்கமாகக் கூறப்பட்ட ஆறு உறுப்புக்களுள் ஒன்றான குடிமை யாளரின் அவையத்து முறைக்குரிய பண்புகளாகச் சுட்டப்பட்டிருக்கின்றன என்று இவ்வியாசத்தின் மேலே சொல்லப்பட்டது.

இனி மற்ற நாலு பண்புகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம் :—

## 5-வது பண்பு: தூய்மையுடன் கூடிய காதல் மணவாழ்வாகிய இல்லற நிலையில் தங்கிச் சுகம் பெறுதல் :—

காதல் மணப் பெண்டிர் பொருட்பெண்டிர் போலத் தம் கணவனைப் பொருள் நிமித்தம் நியவழியிற் செலுத்தாராகை யால் முறைசெய்தலில் வழக்கிற்குரியாரிட மிருந்து பரிதானம் முதலிய எதிர்பார்த்து அவையத்தார் ஒருபக்ஷமாக வழக்கை ஆராயமாட்டார். மேலும் தன் மனைவியை மகிழ்விக்கக் கருதி அவள் வழியே நடந்து பெண்வழிச் செல்கை என்னும்குற்றம் தன்கணவனிடம் வராதபடி நற்குண முள்ள மனைவியானவள் முறை செய்தலில் பரிதானம் முதலிய வாங்கும்படி தன்கணவனைத் தூண்டாள்.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'—வாழ்க்கைத்
துணைநலம். 5.

'எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமையில'—பெண்வழிச் சேறல். 10.

என்ற குறட் பாக்களைக் கவனிக்க. மேல் ஆளப்பட்ட பாடல்களின் உரையில் சொல் என்பது புகழ் குறித்தது என்றும் எண் என்பது கருமச் சூழ்ச்சி குறித்தது என்றும் உரைகாரர் கூறுவது நோக்குக. இரண்டாவது பாடலின் உரையில் "இடன்=செல்வம் (அதை) உடையார்=வேந்தர்" என்று உரைகாரர் கூறுவதில் வேந்தர் என்பது அரசன் மேல் மட்டுமே அன்று அவைபத்தாராகிய பெருங்குடியாளர் மேலும் செல்லும்.*

---

* குறள். பெரியாரைப் பிழையாமை 5வது பாடலிலுள்ள 'வெந்துப்பின் வேந்து' என்பது போல.

'தூய்மையிற் காதலின்பத்துத் தூங்கல்' என்னும் தொடரில் தூய்மை என்பது அவையத்துறுப்பினனுக்குரிய பரிசுத்த மனதையும் குறிக்கலாம். பரிசுத்த மனதாவது தனக்குக் காதலின்பம் கொடுக்கும் மனைவியின் நிமித்தம் பொருளீட்டும் வினையில் தன்தலைமை குறையாமை.

'அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும
பெண்ஏவல் செயவாரகண்இல்'—பெண்வழிச் சேறல் 9.

உரை:—"(பிறவினையாகிய இன்பம்) நோக்கி அறச் செயல்கள் பொருட் செயல்கள் முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவன் கண்ணதாகலின்" என்பது கவனிக்கத் தக்கது.

இனித் தூய்மை என்னும் சொல்லில் உள் நாட்டுக் குடிபபிறந்தானின் பிறர் மனை நோக்காப பேராண்மைக் குணமும் சுட்டப்படலாம்.

'போற்றின அரியவை போற்றல கடுதத பின்
தேறறுதல்யார்க்கும அரிது'—மன்னரைச் சேர்ந்தொழுகல். 3.

உரை:—'அரியவை—அரிய பிழைகள். போற்றல்—தங்கண் வராமல் காக்க. அரிய பிழைகளாவன, அறை போதல், உரிமை யொடு (வாழ்க்கைத்துணை) மருவல், என்றிவை முதலாயின.'

தூய்மை வாழ்க்கை என்ற இக்கருத்துத் தவிர கோவலன் கண்ணகி இவர்களின் மணம் போலப பிராஜா பத்தியமாய்* வாய்க்காமல் தமிழ்நாட்டு மண முறையான உடம்பாட்டு மண முறைப்படி கட்டப்பட்ட மனைவியுடன் வாழ்வது என்ற கருத்தும் அடங்கியிருக்கலாம்.

* கொடை மணத்தின வகை.

பண்டைத்தமிழர் மணச்சடங்கானது அம்பல், அலர் என்ற இருவகைச் செய்திகள். இக்காரியங்களில் காதலியின் பெற்றோர்கள் அவள் தன் காதலனுடன் பயின்று வந்த முல்லைக்கற்பாகிய களவை அங்கீகரித்து அம்பல் அலர் என்ற வெளிப்படைச் சடங்குகளின் மூலம் அவ்விருவரையும் உடம்பாட்டு மணஞ் செய்வித்தார்கள். இதற்கு வடமொழிக் கற்பமாகிய மந்திரம் தெரிந்த புரோகிதர் வேண்டாம். தமிழ் நாட்டில் குடியேறிய வட மொழிப் புரோகிதரின் கரணம் எனப்பட்ட கற்பமந்திர முறையைப் பின் பற்றித் தமிழரிற் பெரும் பாலாரும பிராஜாபத்தியம் என்ற மண முறையைக் கைக் கொண்டார்கள். இம் முறைக்கு மணமகள் 12 ஆண்டுகளுக்குள் இருக்கவேண்டும். இதில் மணமாகிய குறிஞ்சிக்கு முன் முல்லைக்கற்பு ஆகிய களவு மார்க்கம் ஏற்பட வழியில்லை. வட நாட்டு முறைமையை மேம்படுத்த எழுதப்பட்ட பொருளதிகாரத்தில் இப் பிராஜா பத்திய மணத்திற்கு அநாவசியமாகப் பொருளில்லாமல் 'கற்பு' என்ற பேர் கொடுக்கப்பட்டது.*

வடமொழிப் புரோகிதரின் செல்வாக்குள்ள தமிழரசன் நாட்டில் வேத்தியல் துறையிலுள்ள தூது, படைத்தலைமை, முறை செய்யும் அவையத்திருத்தற்கு அறநூல்ஓதல் முதலிய தொழில்களெல்லாம் பிராஜாபத்திய மணஞ் செய்தார்க்கே கொடுக்கப்பட்டன.

> 'வெளிப்படை தானே கற்பினோடொப்பினும்
> ஞாங்கர்க்கிளந்த மூன்று பொருளாக
> வரையாது பிரிதல் கிழவோர்க்கில்லை' —களவியல், 50.

---

*'கற்பு' என்பது தமிழ மொழி நிலையில் மணச்சடங்கில் அம்மிமிதித்தற்கு இடப்படும கல்லை ஒத்த மனத்திண்மை; வடமொழி நிலையில் 'கற்பம்' என்பதன் திரிபு.

உரை:—மூன்று பொருள்: ஓதல், பகை, தூது. இங்கே வரையாது என்பது தமிழ் நாட்டுப் பெருங் குடிகள் அம்பல், அலர் என்ற வெளிப்படைச் சடங்குகளின் மூலம் மணஞ் செய்திருந்தாலும் மறுபடியும் பிராஜாபத்திய முறைப் படி வடமொழிக் கற்ப மந்திரப் புரோகிதர் மூலம் மணஞ் செய்து கொள்ளாவிட்டால் மேற்கண்ட ராஜசேவைக்கு உரிமை இல்லை என்பது கருத்து.

இக்கிரமத்தைச் சில தமிழ் மன்னர்கள் அநுசரிக்க வில்லை. அவர்கள் தங்களுடைய ஆட்சி நாட்டில் ராஜசே வைக்குப் பிரஜாபத்திய மண முறைப்படி விவாகஞ் செய்து கொண்டவர்களை ஏற்காமல் தாங்கள் தூய்மை எனக் கருதிய உடன்பாட்டு மணமாகிய வெளிபபடை மணஞ் செய்த வர்களையே தேர்ந்து எடுததிருக்கலாம்.

இவ் வழக்கத்தைத் தான் மேற் காட்டிய பொருளதி கார மேற் கோட்பாடல் 'தூய்மையிற் காதலில் துங்கி' என்ற சொற்றொடரால் சுட்டியிருக்கவேண்டும்.

'ஒருமை மகளிரே போலப் பெருமையுந
தன்னைததான் கொண்டொழுகின் உணடு'—பெருமை. 4.

இதுவும் அவையததார்க்கு வேண்டிய நிறையைக் குறிப்பிக்கிறது.

## 6. நடுவு நிலை நெடுநகர்.

எட்டுவகை நுதலிய அவையியல்புகளில் இக்குணம் ஆறுவதாகச் சொல்லப்படுகிறது.

'சொற்கோட்டமில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்'—நடுவு நிலைமை. 9.

உரை :—'செப்பம்=நடுவு நிலைமை' இப்பாடல் குடிமையோடு இயல்புடைய இல்லற வியலின் ஒரு அதிகாரத்தில் உள்ளது.

'ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்'—சான்றாண்மை. 9.

ஆழி என்ற கரை என்பதன் குறிப்புப் பொருளும் ஆதாரக் குணத்திற்கு ஒப்பிடப்படும் நகராகிய உறையுள் என்பதன் குறிப்புப் பொருளும் ஒன்றே.

## 7-8. அழுக்காறு. அவாவின்மை.

முறை வேண்டி வருவாரிடத்து அழுக்காறில்லாமையும் பொருளிடத்து அவாவின்மையும் அவையத்தார்க்கு வேண்டப்படும் குணங்கள் என்பது தெளிவான விஷயம்.

'அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலா'—குடிமை. 4.

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'—அழுக்காறாமை. 9.

உரை :—'அவ்விய=கோட்டத்தினைப் பொருந்திய; கோட்டம் ஈண்டு அழுக்காறு.'

'நகல் வல்லரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற்பட்டன் றிருள்'—பண்புடைமை. 9.

'அவ்வித் தழுக்காறுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்'—அழுக்காறாமை. 7.

இவ்விரண்டு பாக்களில் முன்னதிலுள்ள நகல் வல்லர் என்பது பிறர் ஆக்கம் கண்ட வழிப் பொறாமைக் குண

பிலராகி மகிழும் செம்மைக் குணமாகிய திருவை உடையவர் எனக் கருதப்படும்.

இரண்டாவது பாடலிலுள்ள செய்யவள் என்பது நகுதற் குணமுடைய திருமகளைக் குறிக்கும்.

வழக்குத் தீர்க்கும் முறை பற்றிப் பெரிய புராணத்தில் சில இடங்களில் வடமொழிச் சிமிருதி முறையும் வேறு இடங்களில் பண்டைத் தமிழ் நூல் முறையும் கூறப்படு கின்றன. பண்டைத் தமிழ் முறை யானது திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திலும மூர்த்தி நாயனார் புரா ணத்திலும் கூறப்படுகின்றது.

'நன்மை நீடிய நடு நிலை ஒழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமை சால் பெருங குடி தழைபப
வன்மை ஒங்கெயில் வளம்பதி பயினறது வரம்பின்
தொன்மை மேன்மையில் நிகழ் பெருந்தொணடை நன்னாடு'
—திருக்குறிப்பு. 3.

மூர்த்தி நாயனார் புராணத்தில் மதுரையில் ஆண்ட கருநாட வேந்தன் பட்டத்துக் குரிய வாரிசு இன்றி இறந்தகாலத்து வினைத்திறத்திற் குரிய அமைச்சர் தம் நாட்டிற்கு இறை என்று வைக்க ஒருவரைக் குறிப்பிடச் சிந்தனை செய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவ்வமைசசர் கருதிச் சொன்னதாக ஆசிரியா பாடிய பாடல் வருமாறு :—

"தாழுஞ் செயல் இன்று; ஒரு மனனவன தாங்க வேண்டும்
கூழும் குடியும் முதலாயின கொள்கைத் தேனும்,
சூழும் படை மனனவன் தோளிணைக் காவலின்றி
வாழும் தகைத்து அன்று இந்த வையகம" என்று சொன்னார்.
(மூர்த்தி நா. புராணம். 28).

இப்பாடலில் அமைச்சர் தோன்றா எழுவாய். அமைச்சர் சொன்னார் என இயையும். வையகம் என்பது ஆகு

பெயரால் அதன் கண் வாழ்வாராகிய எல்லாமக்களையும் குறிக்கும். குடி என்பது மன்னவன் இன்னுயிராயிருந்து தாங்கவேண்டிய ராஜாங்க யாக்கையின் ஆறு உறுப்புக்களுள் குறளில் இரண்டாவதாகக் கருதப்பட்ட பெருங்குடி. வாழ்வாரை வையக மாகிய நாடு எனக் குறிப்பிட்டு விட்ட தால் 'குடி' பரிமேலழகர் கூறுகிறபடி நாடு எனக் கருதப்பட முடியாது. அரசனுக்குரிய போர்த்திறம், முறைத்திறம், வினைத்திறம் என்ற முத்திறத்துள் முறைத்திறத்திற் குரிய பெருங்குடிப்பிறப்பாளராகிய உண்ணுட்டார் இங்கே குடி என்பதால் குறிக்கப்பட்டார்.

திருநாவுக்கரசு நாயனர் புராணத்தில் நாட்டின் சிறப்பு உரைக்கும் சந்தர்ப்பத்தில் வரும் பாடல்கள் :—

தொன்மை முறை வருமணணின் துகளன்றித் துகளில்லா
நன்மை நிலை ஒழுககதது நலஞ்சிறநத குடிமல்கிச்
சென்னிமதி புனைய வளா மணிமாடச் செழும் பதிகள்
மன்னி நிறைந்துளது திரு முனைபபாடி வள நாடு—(பாடல். 2)

ஆங்கு, வன முலைகள சுமந்து அணஙகு வன மகளிர் இடை
ஏங்குவன நூபுரஙகள் இரஙகு வன யணிக்காஞ்சி
ஓங்குவன மாட நிரை ஒழுகுவன வழுவில் அறம்
நீங்குவன தீஙகு நெறி நெருஙகுவன பெருங்குடிகள்
—(பாடல் 13)

இப்பாடலில் கடைசி வரி கவனிக்கத் தக்கது. பெருங்குடிப் பிறந்தார் முறை செய்வதற்கு அவைக்களத்தில் நெருங்கு வார்கள் (—கூடுவார்கள்); முறை செய்யும் தன்மையால் உறுப்பறை, குடிகோள், அலை, கொலை முதலிய பழி குற்றங்களை இழைப்பவர் பிறர்க்குத தீங்கு செய்யும் நெறியி னின்றும் நீங்குவர் (—விலகுவர்). மூன்றாவது வரியில் மாட

நிரை எனச் சுட்டப்பட்டது பெருங்குடிகளின் உரிமை. வழுவில் அறம் என்பது அவையத்தில் நெருங்கிய பெருங் குடிமையாளரின் உள்ளத்திலிருந்து துணியப்பட்டுப் போநத துகள்தபு சிறப்புடைய முறை நூற்றுணிபுகள்.

இனித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் புராணத்தில் ஞானசம்பந்தர்* தமிழ் நாட்டிற் பிறநததனுல் தமிழ் நாட்டிற்கு விளைந்த நன்மைகளை வரிசைப்படக் கூறும் சந்தர்ப்பத்தில், வரும் பாடல் வருமாறு :—

'திசை யனைததின் பெருமை எலாம் தெனதிசையே வென்றேற
மிசையுலகும பிறவுலகும் மேதினியே தனி வெல்ல
அசைவில செழுந் தமிழ வழக்கே அயல் வழக்கின துறை வெல்ல
இசை முழுதும் மெயயறிவும இடங கொளளும் நிலை பெருக.'
—பாடல. 24.

இப்பாடலில் மூன்றுவது வரி கவனிக்கத் தக்கது. வழக்கு என்றது இங்கே முறை வழக்கு என்று மட்டும் குறுகிய கருத்தில் வழங்கப்படாவிட்டால் அம்முறை வழக்கு இங்கு விலக்கப்பட வில்லை. ஞானசம்பநதரின் ஆகம ஞான நெறி இப்பாடற்குப் பின் ஒன்றடுத்து வரும் பாடலிற் கூறப் படுகிறது.

---

*சமணரைக் கழுவேற்றிய கதை பொயச் சரிததிரக் கூற்று. நம்பியாண்டாா நம்பி 'அமணா' வலி தொலையச சமபந்தர் பிறந்தார் என்று சொன்னரே ஒழிய அமணரைக் கொனறு தணடிக்க என்று கூறவில்லை. குலசசிறை நாயனரைப புகழும் அந்தாதிப பாடலின் முதலடி 'அருநத மிழ ஆகரனை வாதில் அமணின் வலி அழிய' என்றிருந்திருக்கவேணடும். நம்பியாணடாா சமபந்தரைப் பற்றிப பாடியதாகக் கூறப்படும மற்றப பிரபந்தஙசள் அவரால் ஆக்கப்பட்டவையாயிருக்க முடியாது.

தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்களெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரஞ் செய்தார்' *
—(பாடல் 26).

இனிக்கலைமகள் என்னும் மாத முறைப் பத்திரிகையில் 1939 ஆ ஏப்ரல் மாதத்துப் பகுதியில் வந்துள்ள 'பூர்வீக சுய ஆட்சி' என்ற கட்டுரையில் திருநெல்வேலிக்குச் சமீபத்திலுள்ள ஒருகிராம சம்பந்தமான சாஸனம் மன்றுடுபவர்களின் (மன்றுள்பவர்—அவையில் வழக்குத் தீர்ப்பார்) யோக்யதைகளைக் கூறுவதாகச் சொல்லப்படுகிறது.

"மந்திரப் பிராமணம் வல்லாரும், விருத்தரும், நிலம் முழுப்பங்கு உடையவர்களுமே மன்றுடும் உரிமை யுடையவர்கள்.........முழுச் சிராவணை (சுருதி ஓதுவதற்காக விடப்பட்ட நிலம்) இல்லாதாருக்கு வாரியததில் (மன்றில்) அங்கத்தினராகும் உரிமை யில்லை."

கட்டுரையில் ஆசிரியர் சாஸனத்தின் இருந்தபடியே யுள்ள சொற்களை அவ்வாறே எடுத் தெழுதியிருக்கிறார் என்றாவது அல்லது அச் சொற்களின் மொழிப் புரையைக் கூறியிருக்கிறார் என்றாவது வாசகர்கள் தெரிந்து கொள்ளும்படி வியாசத்தில் மேற்கோட் புள்ளிகள் (quotation marks) காணப்படவில்லை. இச்சாஸனம் 801 கி. பி. யில் பிறப்பிக்கப் பட்டதாகக் கணக்கிடப்பட்டி

* சம்பந்தர், அப்பர், மூர்த்தி, சுந்தர மூர்த்தி, நம்மாழ்வார் ஆகிய தமிழ் நாட்டுப் பெரியார்களைப் பற்றி நூல்கள் கூறும் இயல்புகளெல்லாம் சாங்கிய நூலின்படியும், குறளின்படியும் நல்லார்க்குக் கூறப்படும் இயல்புகளை ஒத்திருக்கின்றன.

ருக்கிறது. கிராமமன்று நிகழ்ச்சி அரசனுடைய தலைநகர் மன்று நிகழ்ச்சிபோல் அக்காலத்தில் இருந்தது என நாம் கருதினால் மேற்கண்ட சாஸனம் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் முறை செய்து வந்த இயலைத் தெரிவிக்கிறது என நாம் கருதலாம். சாஸனப்படி மன்றில் வீற்றிருத்தற் குரியார் மந்திரப் பிராமணம் வல்லர், விருத்தர், நில முடையவர் என முத்திறத்தர். "ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவானெனின்" என்ற குறட்பாவின் உரையில் சொல்லப்பட்டதும வழக்கு முறைக் குரியதுமான வடமொழிக் கற்ப நூல் இச்சாஸனத்திற் கூறப் படவில்லை. ஆலயத்தில் ஓதக் கூடிய மந்திரம், யாகம் முதலிய கிரியைகளில் ஓதப்படும் பிராமணம் ஆகிய இரண்டு வகை வடமொழி நூல்கள் மட்டும் கூறப்படுகின்றன. இதி லிருந்து பண்டையக் காலத்தில் முறை வேண்டினார் குறை வேண்டினார்களுடைய வழக்குத் தீர்ப்பதில் வடமொழிக் கற்ப சாஸ்திர விதிகள் பயன் படுத்தப்படவில்லை எனத் தெரிகிறது.

விருத்தர் என்ற சொல்லால் அரசனால் தேர்ந்து எடுக்கப் படும் இனத்தில் சேர்ந்தவராயும் அறனறிந்து மூத்த அறி வுடையவராயுமுள்ள தமிழ் முறை நூல் வல்லாரைக் குறிக்கும். நிலப் பங்கு உடையார் என்பது இந்நூலில் முன்னமே சொல்லப்பட்ட நிலத்திருவாளரைக் குறிக்கும்.

முடிவாகத் திருக்குறளில் பொருட்பாலில் அங்க வியலின் பாகங்களாக அமைச்சியல், பொருளியல், அரணியல், படையியல், நட்பியல் ஆகிய ஐந்து இயல்களிற் குரிய அதி காரங்கள் வைக்கப்பட்டமை போன்று, ஒழிபியலின் பாகமாக வழுப்பட வைக்கப்பட்ட குடிமைக்குரிய ஏழு அல்லது ஒன்பது அதிகாரங்கள் அவ்வொழிபியலினின்றும் நீக்கி

அங்கவியலில் வைக்கப்படுகை நேர்மை யுடைத்து என்றும், குறட்பாக்களுக்கு உரை கூறப்படும்போது குடி என்பது அரசன் தாங்கவேண்டிய ஆறு உறுப்புக்களுள் ஒன்றான முறை செய்யும் பெருங் குடி நெருங்கிய அவையைக் குறிப்பதாக மனதில் எண்ணிப் பொருள் கூறல் நேர் என்றும் நாம் அறியவேண்டிய விஷயங்கள்.

அவையறிதல் என்னும் பண்பு மதுரைக் காஞ்சியிலும் சொல்லப்படுகிறது.

'அச்சமும் அவலமும் ஆர்வமு நீக்கிச்
செற்றமும உவகையும செய்யாது (முறை) காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத தாகிச்
சிறந்த கொள்கை அறங்க கூறவையமும'

—மதுரைக் காஞ்சி வரி 489—92.

சிறந்த கொள்கை என்பது 'எட்டு வகை நுதலிய அவையத் தானும்' என்பதாற் சுட்டப்பட்ட குடிப்பிறப்பு முதலிய எட்டுக் குணங்கள்.

மலைபடுகடாம் என்ற பாட்டிலும் முறை செய்யும் அவை சுட்டப்படுகிறது.

'மதிமாறு ஓரா நன்றுணா சூழ்ச்சி'* மலை படுகடாம் வரி 62;

[மதிமாறு—அவையத்தார் இடித்துச் சொல்லும் மதிக்கு மாறாக.]

'நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லாராயினும் புறமறைத்துச் சென்றோரை
சொல்லிக்காட்டிச் சோர்வினறி விளக்கி
நல்கிதின் இயக்கும் அவன் சுற்றத் தொழுக்கமும்'

மலை படுகடாம் வரி 77—80.

*இதற்கு உரைஆசிரியா உரை நேரன்று.

[சுற்றம்—மந்திரச் சுற்றம் அல்லது முறை செய்யத் துணை புரியும் சுற்றம்].

சொல்லிக்காட்டி என்பது அவையத்தில் ஒருவர்க்கு ஒருவர் முறை வேண்டினர் குறை வேண்டினராகிய இருதிறத்து வழக்குக்களைச் சோர்வின்றி விளக்கி எனக் கருதப்படும்.

'பதி யெழலறியாப பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறூஉ* விழுப் பெருநியமம்'

—மலை படுகடாம் வரி 479—80.

கருத்து :—முறை செய்யும் பழங்குடி அவையத்தார் முன் நற்சமயம் பெறும் பெருமையுடைய முறை செய்யும் மன்றம்.†

'கல்லென் ஒக்கல் நல் வலத்திரீ இ
உயர்ந்த கட்டில் உருமபில் சுற்றம்'

—மலைபடுகடாம், வரி 549—50.

ஒக்கல், சுற்றம் என்பன முறை செய்யும் மந்திரச் சுற்றம். உரும்பு—கொடுமை. அதாவது நியாயஞ் சொல்வதில் பக்ஷ பாதம் காட்டல்.

பெரும் பாணாற்றுப்படை 443—7 வரிகளும் ‡ கவனிக்கத் தக்கன.

'முறை வேணடு நாக்கும் குறை வேண்டு நர்க்கும்
இடை தெரிந்துணரும் இருள் தீர் காட்சி
வேண்டுப வேணடுப வேண்டினர்க்கருளிய
கொடைக்கடன இறுதத கூடமபா வுள்ளத்து
உரும்பில் சுற்றமோடிருந்தோற் குறுகி'

---

*வியலிடம் பெறு என்ற பாடம் பிழைபட்டதா யிருக்கவேண்டும.

†இங்கும், திருமுருகாற்றுப்படை 70-ம் வரியிலும் நியமம் என்பது அங்காடியன்று. நியமம்—முறை செய்யிடம்.

‡நூலில் இருக்கிறபடி வரிகள் அமைப்பு பொருத்தமில்லை. இப்பாகத்தில் முறை வேண்டினர் குறைவேண்டினர் என்ற தொடரைப பரிமேலழகர் குறளின் உரையில் எடுத்தாளுகிறார்.

# இறையனார் அகப் பொருட்படி தமிழ் நாட்டில் முறை செய்த வகை

---

இறையனார் அகப் பொருள் 'கற்பு' என்னும் இரண்டாவது அதிகாரத்தில் 35-வது சூத்திரமும் உரையும் தமிழ் மக்கள் யாவரும் ஊன்றிப் படிக்கத் தகுந்தவை. இச் சூத்திரத்திலுள்ள 'காவல்' என்பது அரசன் முறை செய்தல் எனப் பொருள் தரப்படுகிறது. இனிக் காத்தற்குப் பிரியும் என்பது (p. 209) நாட்டகத்து நின்றும் நகரகத்துத் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும என இத் தொடக்கத்தார் தம் முறைக் கருமம் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும் காட்டகத்து வாழும் உயிர்ச் சாதிகள் ஒன்றனை ஒன்று நலிவன உளவாயின விடத்துத் தீ தென்று அவற்றை முறை செய்தற்கும் [1] கொடிவலைப் பட்டுக் கிடந்தன வற்றைத் துறை நீக்குதற் பொருட்டாகவும், வளன் இல்வழி வளந் தோற்றுவித்தற் பொருட்டாகவும், தேவ குலம் (கோயில்) சாலை அம்பலம் (அறவோர் சங்கம்) என்று இத் தொடக்கத்தன வற்றை ஆராய்வதற்கும் அழிகுடி ஓமபுதற்கும் பிரியும் என்பது. அல்லதும் பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவது போலத் தன்னாற் காக்கப்படும் உயிர் வாழ்சாதிகள் தன்னைக்

---

1. திருமுருகாற்றுப்படை "தீது தீர நியமதது" என்பதைக் கவனிக்க. போரறுவாசல் ஏற்படுத்தி தீது தீர்க்க முருகபிரான் முறை செய்ய வீற்றிருக்கும் கோலம் குறிபபிடப்படுகிறது. நியமம் என்பது அங்காடியன்று.

கண்டு இன்புறுதலின் அவர்கட்குத் தன் உருக்காட்டுதற்கும் பிரியும்.

சூத்திரத்தில் 'பகை தணிவினை' என்னும் தொடரைச் சந்து செய்வித்தல் என்ற ஒரே கடமையைக் குறிப்பதாகப் பொருள் செய்திருப்பது தவறு. பகைதணி என்ற சந்து செய்வித்தலும், ஆறுறுபயின் ஒன்றான 'சூழ்' எனப்படும் பொருள் ஈட்டிக் காத்து வருக்கும் அமைச்சுவினை* செய்தலும் என இருகடமைகளைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

இக்கருத்தில் 'பொருட் பிணிபரத்தை' என்பதில் பொருட்பிணி என்பதைத தனியே கொள்ளாமல் 'பரத்தை' என்பதற்கு அடைமொழியாகக் கொள்ளல் வேண்டும்.

36-வது சூத்திரத்தில் உயர்ந்தோர் என்பது அடியோர் பாங்கு, வினைவலபாங்கு என்ற இருவகை இழிந்தோர் எனப் படுவாரை நீக்கி, நால் வகைச் சாதியினர் எனக் கருத்துத் தரலாம். (பொருளதிகாரம் வாகைத்திணைச் சூத்திரத்தின் உரையின் படி நால் வகையினர்க்கும் ஓதலும் காவலும் உண்டு.)† இந்நூல் 1-வது சூத்திரத்தின் உரையில் சொல்லப் பட்ட எதிர்நூலாயிருக்கலாம் இந்நூல் உரை. அரசவையில் முறை செய்யும் உரிமை தமிழ் நாட்டிலுள்ள தமிழ் முறை நூல்கற்ற நிலத்திருவாளரிட மிருந்ததைப் பறித்து வட மொழி ஸ்மிருதிவல்ல வைதிகரிடைக் கொடுக்கப்படுவதற்கும் பொருளீட்டு தலாகிய அமைச்சுவினை யுரிமையைப் புதிதாக

---

*கு. இறைமாட்சி 5-வது பாடலைப் பாரக்க.

†. திருக்குறளின்படி பிரிவு எவ்வகையினர்க்கு எனச் சுட்டப்படாததால் எவ்வகை யினாக்கும பிரிவு உரிமையுண்டு. பரத்தையிற் பிரிவு குறளின் படி கிடையாது.

அவ்வடமொழி வல்லாரிடைக் கொடுப்பதற்கும் இச்சூத்திரங்களும் உரைகளும் அமையப் பட்டனவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் பூர்வ சரித்திர உண்மை விரும்புவோர் இப் பாகத்தை நன்முய் ஆராய் வாராக.

39-ம் சூத்திரத்தில் இழிந்தோர் என்பார் நால் வகைக்கும் அப்பாற்பட்ட வினைவலபாங்கர் அடிமை என்பாரைக் குறிக்கலாம். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை அவர்களிடம் ஒப்புவிப்பதற்காகவே இச் சூத்திரம் அமைந்திருக்கலாம்.‡

---

‡ இக்காலததிலுள்ள புதுச்சட்டபபடி நாட்டுக் குடிகட்கு ஆளும் உரிமை ஆஙகிலப்பிரபுக்களால் ஈயப்படுவது போல்.

அவ்வடமொழி வல்லாரிடைக் கொடுப்பதற்கும் இச்சூத்திரங்களும் உரைகளும் அமையப் பட்டனவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் பூர்வ சரித்திர உண்மை விரும்புவோர் இப் பாகத்தை நன்குய் ஆராய் வாராக.

39-ம் சூத்திரத்தில் இழிந்தோர் என்பார் நால் வகைக்கும் அப்பாற்பட்ட வினைவலபாங்கர் அடிமை என்பாரைக் குறிக்கலாம். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை அவர்களிடம் ஒப்புவிப்பதற்காகவே இச் சூத்திரம் அமைந்திருக்கலாம்.‡

---

‡ இக்காலத்திலுள்ள புதுச்சட்டப்படி நாட்டுக் குடிகட்கு ஆளும் உரிமை ஆங்கிலப்பிரபுக்களால் ஈயப்படுவது போல்.

# சிலப்பதிகார ஆராய்ச்சி

## 1. தமிழ் நாட்டில் வழங்கிய நீதிமுறை

சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூரெடுத்த காதையில் சோழ நாட்டின் தலை நகராயிருந்த காவிரிப்பூம் பட்டினத்தில் ஐந்து மன்றங்கள் இருந்தனவாகக் கூறப்படுகிறது.

திருட்டைக் கண்டு பிடித்துத் திருடரைத் தண்டிக்கும் வெள்ளிடைமன்றம், கூன், ஊமை, செவிடு, குஷ்டம் முதலிய உடற் பிணிகளைத் தன்கண் நிறைந்த பரிசுத்த நீரால் போக்கும் இலஞ்சி மன்றம், பாம்பு கடியுண்டோர், பேய்க் கோட்பட்டாராகக் கருதப்பட்டோர், நஞ்சிடப்பட்டோர், பகைவரின் கருமந்திரச் செய்கையான் அறிவு மாறுபட்ட மடைந்தோர் முதலிய துன்ப நோய்க் குட்பட்டார் தன்னை வலமாகச் சுற்றிவந்தால் அவர்களுடைய குறையைத் தீர்த்துச் சுவஸ்தமாக்கும் ஒளியை யுடைய நெடுங்கல் மன்றம், தவநெறி வழுவிக் கூடாவொழுக்க நடையுடைய துறவிகள், தாம் சேர்ந்து வினை செய்யும் வேந்தர் உயிர்க்குத் தீங்கு நினைத்தும் இன்னும் பல் வகையில் அவருடன் கிழமை தவறி அவர்க்குக் கேடு சூழ்ந்தும் ஒழுகும் அமைச்சர், வழக்காராய்ச்சியிலும் தண்ட நீதி முறையிலும் பொய்ச் சாட்சியம் கூறுவோர், பிறருடைய புகழுக்குப் பங்கம் பட வசை கூறுவோர், கொண்டவனிடத்து அன்பில் தவறிய பெண்டிர், தான் கொண்ட புருஷனுக்கும் தனக்கும் இடையே யுள்ள காதலுக்குப் பங்கம் வரும்படி அவளுடன் வஞ்சகமாக நயப்புக் காட்டிய மாந்தர் ஆகிய அறுவகைப் பெருங் குற்ற வாளிகளைத் தன்னிடமுள்ள சங்கிலிப் பாசத்

தால் பிணித்து உரத்த குரலுடன் அடித்துத் தின்னும் பூதம் நிற்கும் சதுக்க மன்றம், சோழநாட்டுப் பெருவேந்தன் முறை தவறித் தன் நாட்டில் வாழும் பழங் குடிகட்காவது புற நாட்டிலிருந்து வந்து தங்கி வாழும் புறக் குடிகட்காவது தீங்கு செய்தாலும் சோழமன்னன் முறை செய்யும் சூழ உக்களத்தில் அவனுடன் நீதி எடுத்துச் சொல்லி முறை செய்யும்படி துணை செய்யக் கட்டிற் பலகையில் உடன் வீற்றிருக்கும் அவையத்தினரும் உள்நாட்டுக் குடியிற் பிறந்த பெருங்குடியாளரு மாகிய சிறுத் தொண்டராேனார் தாம் கற்ற முறையுரை நூற்படி நியாயஞ் சொல்லாது ஓரவஞ்ச மாக நியாயஞ் செய்யும்படி தம் மன்னனைத் தூண்டினும் அம்மன்னனுக்கும் முறையுரை நூலோருக்கும் அஞ்சி அவர் முறை கோடிய மாதிரியை வெளிப்படச் சொல்லாது கண்ணீர்விட்டு அழூஉம் நியாயத் தெய்வமாகிய கொற்றவை நிற்கும் மன்றம் ஆகிய இந்த அஞ்சு மன்றங்கள் விவரிக்கப் படுகின்றன.

இங்கு கூறப்பட்ட ஐந்து மன்றங்களில் கடைசியாகச் சொல்லப்பட்ட மன்றத்தில் நின்ற தெய்வமே தமிழ் நாட்டில் அரசராலும் பெருங்குடிகளாலும் பிறராலும் வணங்கப்பட்டு வந்த தெய்வம் என நாம் கருத இடமிருக்கிறது. மன்றம் என்பது இங்கே கோயில் எனப் பொருள் படும். இம் மன்றங்களின் தன்மை வர்ணிக்கப்படும் போக்கைக் கவனித்தால் சிலப்பதிகார நூலின் இப்பாகம் இயற்கையில் நிகழ்ந்ததைக் கூறிய தன்று என்பது எளிதிற் புலப்படும். சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் பாண்டிய மன்னன் நிலைமையும் சோழ மன்னன் நிலைமையும் குன்றிச் சேர மன்னன் நிலைமை உயர்ந் தோங்கிய காலமாயிருக்க வேண்டும். இறையனார் களவியலில் நக்கீரனாரால் மேற்

சோளாக ஆளப்பட்ட பாண்டிக் கோவை என்னும் நூலானது சேரமன்னனவன் பாண்டி மன்னனால் தோல்வி யடைந்தான் என்று கூறுவதாலும், பத்துப்பாட்டின் பகுதி களுள் சோழ மன்னனை கரிகால்வளவனைப் பற்றிப் பாடப் பட்ட பொருநராற்றுப்படை, பட்டினப் பாலை என்ற இரண்டு நூல்களினும் சேர மன்னனும் பாண்டிய மன்னனும் கரிகால் வளவனால் தோல்வியடைந்தார்கள் என்று கூறுவதாலும் பிற்காலத்திய புலவரால் பாடப்பட்ட இச்சிலப்பதிகாரத்தில் பாண்டியனையும் சோழ மன்னனையும் ஒரு சேரப் பெருமை குறைத்துப் பாடப்பட்டிருக்கின்றது. பாண்டியன் சிறப்புற் றோங்கிய காலத்தில் பாண்டியன் நீதி தவறிக் கோவலனைக் கொல்வித்தான் என்று எப்புலவனும் பாடமுடியாது. அதே போன்று சோழ மன்னன் உயர் நிலையில் தங்கிய காலத்தில் அரசன் கோல்கோடினால் பாவை மன்றத்திலுள்ள பாவை கண்ணீருகுத்து அழும் என்று ஒரு புலவனும் பாடியிருக்க முடியாது.

மேலும் மேற் சொன்ன மன்றங்களிற் பாவைகள் அற்புத சக்திவாய்ந்தவை எனக் கூறப்படுகின்றது. பழைமை யான செய்திகளை வர்ணிக்கும் பொழுது தான் இயல் பொடு பொருந்தாத இவ்வர்ணனை ஏற்கும்.

வர்ணனையிலுள்ள விஷயங்களும் ஒன்றுக் கொன்று இயைவு படாமல் மாறுகின்றன.

இவ்வைந்து மன்றங்களில் தொழு நோய் தீர்க்கும் இலஞ்சி மன்றம், பேய்க்கோள் மருந்தாகிய நெடுங்கல் மன்றம் ஆகிய இரண்டும் ஒழித்து மற்ற மூன்று மன்றங்கள் அரசன் முறை செய்யக் கூடிய வியவகார நீதி, தண்ட நீதி ஆகிய இருவகை நீதிகள் சம்பந்தப் பட்டிருக்கின்றன.

இம் மூன்று மன்றங்களில் வெள்ளிடை மன்றமும் பூதச் சதுக்கமும் கிரிமினல் குற்றங்களின் பரிகாரத்துக்கு ஏற்பட்டிருந்தனவாகச் சொல்லப்படுகிறது. இக் குற்றங்களை இம் மன்றப் பூதங்கள் கண்டு தண்டித்தால் அரசனும் அவையததாரும் நாட்டில் என்ன கடமை செய்ய இருந்தார்கள்? குடிகளுக்குள் பொருள் விஷயமாய் ஏற்படும் வியவகாரத்தைத் தீர்க்கத்தான் அரசனும் அவையத்தாரும் கடமை பூண்டிருக்கிறார்கள் என்ற கருத்துத் தொனிக்கிறது. இந்த சிவில் விவகாரம் தீர்க்கும் பொறுப்பு அரசனுக்கும் அவையத்தார்க்கும் உண்டு என்று வெளிப்படையாகப் புலவர் கூறவுமில்லை.

அடைக்கலக்காதையில் கீரிப்பிள்ளையைக் கொன்ற ஒரு மடந்தையை அவள் புருஷன் நீத்துக் காசிக்குச் செல்ல அவள் தன்கருமத்தைத் தொலைப்பதற் குரிய செல்வவந்தனைத் தேடி அவனிடம் பொருள்கேட்க அச் செல்வவநதன் பொருள் கொடுத்துக் கருமந் தொலைத்த முறையைத் தன் கண் உபதேசித்த சாத்திரம் ஒன்று கேட்கப்படுகிறது. அச் சாத்திரம் ஒத்து உடை அந்தணர் உரை நூல் எனப்படுகிறது. மேலே பாவை மன்றம் சம்பந்தமாகக் கூறப்பட்ட அறங் கூறவையத்துரை நூல் இவ்வந்தணர் உரை நூலினின்றும் வேறோ அல்லது இரண்டும் ஒன்றையே குறிக்கின்றனவோ என நாம் துணிய முடியவில்லை.

இச்சிலப்பதிகாரக் கூற்றுக்களிலிருந்து தமிழ் நாட்டில் பண்டையக் காலத்தில் குடிகளுக்குள் வியவகாரம் தீர்த்து வந்த முறையானது சிதைந்து போய் வட நூலாகிய ஸ்மிருதி முறையும் அதன் அத்யாவசிய உறுப்பான ஜாதிக்கட்டுப்பாடு முறையும் குடி புகுந்து விட்டது என நாம் யூகிக்கும் படி ஏற்படுகிறது.

திருக்குறளில் இறை மாட்சி அதிகாரம் 8-வது குறள உரையில் 'முன்றை அற நூலும் நீதி நூலும் சொல்லும் நெறி' எனச் சொல்லப்படுகிறது. பெரியாரைத் துணைக் கோடல் என்னும் அதிகாரத்தில் 1-வது குறள்,

'அறனறிந்து மூதத அறிவுடையாா கேண்மை
திறனறிந்து தோ்ந்து கொளல்.'

என்று அமைநதிருக்கிறது. இதிலிருநது குறட்காலத்தில் தமிழ் நாட்டில் ஆண்ட மன்னன் அறநூல் அறிந்த பெரி யோரைத் தனக்குத் துணையாகக் கொண்டு முறை செய்து வந்தான் எனத் தெரிகிறது.

'ஒற்றும் உரை சானற நூலும் இவை யிரண்டும்
தெற்றென்க மனனவன கண்'

என்ற பாடலிலுள்ள உரை சான்ற நூல் முறை நூலாகிய அறநூல் என்றே கருதப்படவேண்டும்.

வெருவந்த செய்யாமை என்னும் அதிகாரத்தில்
'கடு மொழியும கையிகந்ததணடமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்'

என்ற குறட்பாவில் தண்டம் என்பதால் கிரிமினல் குற்ற* விவகாரம் சுட்டப்படுகிறது.

---

* பொருளதிகாரம் மெயபபாட்டியல் 2-வது சூத. உரையில் கூறப்பட்ட உருததிரம் எனபது சிவில வழக்குப பேததையும் 3-வது சூததிரததிலுள்ள வெகுளியாலாய (10வது சூததிரத்தில் கிளக்கப்பட்ட) உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்பன கிரிமினல் வழக்குப பேததையும் சுட்டிய என்பது கவனிக்கத தக்கது. உருத்திரம் என்பது வெகுளியனறு வணிகனை யொப்ப வழக்குச் சீர்தூக்கும் நடுவுநிலை. இறையனுர் களவியல் உரையில் கூறப்பட்ட உருத்திரதர்மனின் செயல் போன்றது உருததிரம் எனபபடும்.

அதே அதிகாரத்தில்,

"இனத்தாற்றி எண்ணிய வேந்தன் சினத்தாற்றிச்
சீறில் சிறுகும் திரு'

என்ற பாவில் சிவில் விவகாரத் தீர்ப்பு முறை சுட்டப் படுகிறது.

செங்கோன்மை என்ற அதிகாரத்தில்,

'எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும்'

என்ற பாவில் சிவில் விபவகாரம் சுட்டப்படுகிறது.

அதே அதிகாரத்தில் 9-வது பாவிலுள்ள 'குற்றம் கடிதல் வடுவன்று' என்பதிலும், 10-வது பாவிலுள்ள 'கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல்' என்பதிலும் கிரிமினல் சட்டமாகிய தண்ட நீதி சுட்டப்படுகிறது.

மேற் சொன்னபடி திருக்குறட் காலத்தில் தமிழ் நாட்டில் அரசனாலும் அவையத்தாராலும் இயற்றப்பட்டு வந்த செங்கோன் முறை மறைந்து வடமொழியாளர் ஆதிக்கம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பிற்காலத்தில் சிலப்பதிகார நூல் தோன்றினதால் இந்திர விழவூர் எடுத்த காதையில் பொய்க் கூற்றோடு பொருந்திய இவ் ஐவகை மன்ற வருணனை காணப்படுகிறது என நாம கருதவேண்டும்.

## 2. சிலப்பதிகாரத்தில் முப்பால் விளக்கம்

சிலப்பதிகாரம் மூன்று காண்டமாகப் பிரிக்கப் படுகிறது. மூன்று காண்டத்திற்கும் கதை நிகழ்ந்த இடத்தைக் கவனிப்பாக வைத்து முறையே புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்று தலைப்புப்

பேர்கள கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்பாகங்களிற் சொல்லப்பட்ட கருத்துக்கள் நோக்கி அப்பாகங்களுக்கு முறையே இந்திரகாண்டம் அல்லது காதற் காண்டம் என்றும், காவுந்திகாண்டம் அல்லது அறநூற்காண்டம் என்றும், சேரமான்காண்டம் அல்லது யுத்த காண்டம் என்றும் தலைப்புப் பேர்கள் கொடுத்தல் தகும்.

இனி அறத்தின் தன்மையும் பாகுபாடும் ஊர்காண் காண்டத்தில் திருக்குறளில் விவகரித்த பிரகாரம் எடுத்துக் கூறப்படுகிறது. அவ்வெடுத்துக் கூற்று வருமாறு:—

'பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும்
புரிகுழல் மாதர்ப் புணர்ந் தோர்க்கல்லது
ஒருதனிவாழ்க்கை உரவோர்க்கில்லை
பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில்
கொண்டோர் உறாஉம் கொள்ளாத்துன்பம்
கண்டனராகிக் கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலின் உழந்தாங்கு
ஏமஞ்சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால் இறந்தோர் பலரால்
தொன்றுபட வரூஉம் தொன்மைத்து'

இப்பாகத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை விசேஷ நயமுடைத்தாயிருக்கிறது.

மேல் வாக்கியத்தில் முப்பாலில் ஒன்றாகிய இன்பத்தைப் 'பெண்டிர்' என்ற சொல்லாலும் பொருளை 'உண்டி' என்ற சொல்லாலும் ஆசிரியர் குறிப்பிக்கிறார் என்று உரைகாரர் கூறுவது நயமாயிருக்கிறது.

அறத்துறைக்குரிய பொருள் தேட ஒட்டாது தடையாயிருக்கும் கழிபெருங்காதலைக் காமக்கடவுள் எனத் தொல்லோர் கூறியதை அநுசரித்தது மட்டுமன்றி அதற்கு மேலும் உருவில்லாளன் என்பதைக் காமன் மேலும் கட்புலனாகா வறுமைமேலும் ஏற்றுக என்று உரைகாரர் கூறினது அவர் புத்தி நுட்பத்தைத் தெளிவாய்க் காட்டுகிறது. இக்கருத்து நோக்கியே குறளாசிரியரும் பொருட்பாலுக்கு ஈறாகக் காமத்துப் பாலுக்கு முன்னாக நல்குரவு, இரவு, இராவச்சம என்ற அதிகாரங்களை வைத்திருக்கிறார். 'இரநதும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்' என்று திருவள்ளுவர் படைப்புக் கடவுளை வைவதின் நோக்கம் படைப்புக் கடவுளுக்குப் பகைவனை நல்குரவும் ஒரு கடவுளாகப் பாவிக்கப் படலாம் என்பதை உட்கொண்டிருக்கிறது. அதுதான் மூப்பும் சாக்காடும் உண்டுபண்ணும் தௌவை போலும். தௌவை என்றால் திருமகளுக்கு அக்காள் எனப்பின்னோரால் பிழைபட உணரப்பட்டது. நுகர்தற்குரிய பொருள் கிட்டாமற் செய்யும் வறுமை விரைவில் உடல் மெலிவு, தளர்ச்சியாகிய மூப்பு, சாக்காடு முதலிய வாழ்க்கைத் துன்பங்களை உண்டு பண்ணுவதால் காரணவாகு பெயராய் வறுமையும் தவ்வை அல்லது மூதவ்வை (மூதேவி என்பது கொச்சை) எனப்பட்டது.

இனிப் புணர்தல் காதல் வாழ்க்கையில் முன்னிலை என்றும், பிரிதல் அவ்வாழ்க்கையில் பின்னிலை என்றும் கருத்துப்பட உரையாசிரியர் எழுதுவது மிகவும் நயம்பட்டிருக்கிறது. முப்பால் என்ற தொகையில் இன்பவகையானது மண முறை வாழ்க்கை நோக்கியதே ஒழிய பொய்ம்மை முயக்கத்திற் குரிய வரைவின் மகளிருடன் வாழும் தீது வாழ்க்கையை நோக்கியதன்று. இதே ஊர்காண்

காதையில் மேல் எடுத்து எழுதப்பட்ட வரிகளை அடுத்து தசரதராமன் சீதையினின்று பிரிந்ததையும், நளன் தமயந்தியினின்று பிரிந்ததையும் பிரிவுக்கு உதாரணமாக ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

ஆதிகாலத்தில் குறள் முதலிய அருமைத் தமிழ் நூலிற் சுட்டப்பட்ட பிரிவுகள் எல்லாம் மண முறை வாழ்க்கைப் பிரிவுகளே. புணர்தற்குரிய காமத்துப்பாற் பகுதியைக் களவியல் என்றும் பிரிதற்குரிய காமத்துப்பாற் பகுதியை மட்டும் கற்பியல் என்றும் குறளில் வகுத்துத் தலைப் பெயர் சூட்டி யிருப்பது திருவள்ளுவர் கொண்ட முறையா இருக்க முடியாது என்பது இச்சிலப்பதிகாரப் பகுதி மூலம் தெரிகிறது. களவியல் என்பது காமக் கூட்டவியல் என்றும் கற்பியல் என்பது காமப்பிரிவியல் என்றும் தலைப்புப் பேர் சூட்டப் பெற்றுக் குறள் அச்சு மூலம் வெளிவர வேண்டும். அல்லது களவியலை முல்லை (முன்னிலை) என்றும் கற்பியலைப் பின்னிலை அல்லது பாலை என்றும் கூறவேண்டும்.

ஊர்காண்காதையில் மேல் எடுத்து எழுதப்பட்ட பாகத்துக்குச் சற்று மேலே,

'அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்'

என்று இரண்டு வரிகள் காணப்படுகின்றன. இதிலிருந்து பொருள் என்னும் பகுதி அரசியல் குடிமையியல் என்று இரண்டு வகையாகவாவது, போர் முறை, நீதி முறை, குடிமை முறை என்று மூவகையாகவாவது பிரிக்கப்படுவதற்கு ஏது இருக்கிறது எனத் தெரிகிறது.

இக்குறிப்பை அநுசரித்தே திருக்குறளிலும் ஆதியில் பால்வகை ஏற்பட்டிருக்கும் என நினைக்க இடந்தருகிறது.

இப்போது அமைந்திருக்கிறபடி குறளில் இல்லறம், துறவறம் அரசியல், குடிமையியல், அமைச்சியல், துன்பவியல், காதலியல் என்ன ஏழு இயல்கள் காணப்படுகின்றன. இல்லறத்தைக் காதலியலுடன் சேர்த்து இன்பம் என்றும், அமைச்சுவினை உட்குடியிற் பிறந்தார்க்கு உரிமையான தொழில் எனக் கருதப்பட்டு வந்ததால் அமைச்சியலைக் குடிமையியலுடன் சேர்த்து அங்கவியல் அல்லது உறுப்பியல் என்றும் தலைப்புப்பேர் கொடுத்து அறம், அரசு, அங்கம், துன்பம், இன்பம் என ஐந்து பாலாகக் குறளிலுள்ள விஷயங்களைப் பிரிக்கலாம். இப்பிரிவில் அறம் என்பது மெய்யுணர்வுப் பேற்றிற்குச் சாதனமான துறவறம் மட்டுமே சுட்டும்.

## 3. சிலப்பதிகாரம் :—அரும்பதவுரைக்கும் அடியார்க்கு நல்லாரின் உரைக்கும் உள்ள வேறுபாடு

### அந்திமாலைச் சிறப்புச் செய்காதை

ஒரு தனித்திகிரியுரவோற் காணேன்

... ... ... ...

திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல் எனத

... ... ... ...

திரை நீர் ஆடை இரு நில மடந்தை
அரசு கெடுத்து அலம் வரும் அல்லற்காலைக்
கறை கெழுகுடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொடு ஒருதிறம் பற்றி
வலம்படுதானை மன்னா இல்வழிப்
புலம்பட இறுதத விருந்தின் மன்னரில்
(தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்த)
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்வு எய்த

**அரும் பத உரை :—**விருந்தின் மன்னர்—வேற்றரசர். கறை கெழுகுடிகள் கண்ணகி முதலான தங்கு துணை பிரிந்தோர்க்கு உவமை.

விருந்தின் மன்னர் மாதவி முதலான காதலர்ப் புணர்ந்தோர்க்கு உவமை.

**அடியார்க்கு நல்லார் உரை :—**

கறை கெழு......மன்னரில்.

தம் பெயருக்கு வரும் இறையை யறிந்து பொருந்தியிருக்கும் இறைக் குடிகள் துயர முற, அங்ஙனம் இருது குறும்பு செய்யும் வில்லேர் உழவரை ஒருதலையாகப் பற்றி வெற்றி பொருந்திய சேனை மன்னரில்லாத இடமறிந்து அவர் நில மெல்லாம் கெடும் படி புதிதாக வந்து விட்ட குறுநில மன்னரைப் போல.

அறைபோதல்—கீழறுத்தல் அதாவது கிழமை அல்லது உரிமை **(loyalty)** அற்றுத் தம் மன்னனின் பகைவனுடன் போய்ச் சேர்தல்.

விருந்தின் மன்னர் என்பதை அரும்பத உரைகாரர் வேற்று நாட்டு மன்னர் எனக் கொண்டார். பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் மூவேந்தர் போன்ற முடிமன்னரும் அவர்க்குக் குறுநில மன்னராய்த் திரை மட்டும் செலுத்திக் கறை செலுத்தாத சிற்றரசர்களும் அவரினின்றும் வேறாய்க் குடிகளும் இருந்தார்கள் எனத் தெரிகிறது. முடிமன்னர் நாடிழந்து குறுநில மன்னர் அம்முடிமன்னர் பதவிக்கு வந்தாலும் அவர் நாட்டுக் குரியரே ஆனபடியால் வேற்று நாட்டுக் குடிகள் புதிதாக அவர் நாட்டுக்கு வந்து பழங்குடிகளோடு பதவிக்கும் வியாபாரத்துக்கும் போட்டிபோட முடியாது. ஆனதால் புதிதாக வரும்மன்னர் வேற்று நாட்டு

முன்னராயிருந்தால் தான் நாட்டுக்குக் கெடுதி வரும் என்ற உண்மையைக் கருத்தில் வைத்து விருந்தில் மன்னர் என்பதற்கு அரும்பதவுரைகாரர் வேற்று மன்னர் என நேரான பொருள் கொடுத்திருக்கிறார். இவ்வுரைகாரர் இருந்த காலம் தமிழ் நாட்டில் தேசாபிமானம் குன்றாமல் இருந்தகாலமாமாயிருக்கவேண்டும்.

அடியார்க்குநல்லார் குறுநில மன்னர் உள் நாட்டு அபிமானமுடைய மன்னராயிருந்தாலும் அவரால் குடிகளுக்குப் பொருள் நஷ்டம் இல்லாதிருந்தாலும் அக் குறுநிலமன்னர் வரவை நோக்க வேற்று மன்னர் வருதலில் கெடுதல் இல்லை எனக் கருத்துக்கொண்டு உரை எழுதுகிறார். மூன்று நாடுகளும் தத்தமக்கு உரிய முடி மன்னரால் ஆளப்படவேண்டும்; தவறினால் ஒருவர் நாட்டை ஒருவர் கைப்பற்றி ஆளலாம். அந்தந்த நாட்டிற் குரிய குறு நில மன்னர் நாட்டை ஆளப்படாது என்ற அழுக்காறு எண்ணம் அடியார்க்குநல்லார் காலத்தில் பரவியிருந்திருக்க வேண்டும்.

## 4. மங்கலவாழ்த்துப் பாடல்

இத்தலைப்புப் பெயரில் குறிப்பிட்ட மங்கல வாழ்த்து எது என ஆராய்வதை நுதலிற்று இவ்வியாசம்.

சிலப்பதிகாரத்துப் பாயிரமாகிய ப்திகத்தில் 63-வது வரியில் ‘மங்கல வாழ்த்துப்பாடலும்’ எனப், புகார்க் காண்டத்தின் பத்துப் பாகத்தில் முதலாவது பாகத்தைக் குறித்திருக்கிறது. அரும்பத உரையாசிரியர் மங்கலவாழ்த்து என்பதற்குக் கலியாண வாழ்த்து என உரைத்தார். அடியார்க்கு நல்லார் ‘மணத்தில் மகளிர் வாழ்த்துதலையுடைய பாடல்’ என உரை தந்தார்.

ஆகவே இவ்விரண்டு உரைகாரர்களின் கருத்துப்படி இம்மங்கல வாழ்த்துப் பாடலிலுள்ள 60—62 வரிகளில் அமைந்த மங்கல வாழ்த்தை நோக்கித் தான் சிலப் பதி காரத்தின் இம் முதல் அத்தியாயத்திற்குத் தலைப்புப் பேர் அமைந்திருக்கிறது எனக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வரிகள் வருமாறு :—

"போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
தீதறு.கென ஏதிச் சின் மலர் கொடுதூவி

... ... ... ...

அங்கண் உலகில் அருந்ததியன்னாளை
மங்கல நல்ல மனி ஏற்றினார்."

ஆகவே கலியாணத்தில் பெண்டுகள் கண்ணகியை வாழ்த்திய வாழ்த்து மங்கல வாழ்த்து எனப்படுகிறது.

ஆனால் பெண்டிர் கூட்டம் இம்மணமகளை வாழ்த்து தலுடன் நின்று விடவில்லை. சோழநாட்டு மன்னனாகிய செம்பியனையும் வாழ்த்தினதாகக் கூறப்படுகிறது. அவ் வாழ்த்து வருமாறு :—

"இப்பாலிமயத்திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற் கோட்டு உழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செமபியன்
ஒரு தனியாழி உருட்டுவோ னெனவே."

ஆகவே கலியாணவாழ்த்தில் செம்பியனை வாழ்த்தும் வழக்கம் இருந்ததாகக் கருதப்படும்படி நூல் அமைந்திருக்கிறது. கலியாணத்தில் கூறப்பட்ட இவ்வாழ்த்து நோக்கி அத்தியா யத்திற்குப் பேர் ஏற்பட்டதென்று வைத்துக் கொண்டால், இவ்வத்தியாயத்தின் முதற் பாகத்தில் செம்பியனையும் புகா

வையும் சிறப்பித்து நாலு சிந்தியல் வெண்பாக்கள் கூறப்படு கின்றனவே. நூலைத் தொடங்கும் இப்பாகம் அடியார்க்கு நல்லாரால் 'நடை மிகுத்தேத்திய குடை நிழன்மரபு' எனப் பொருளதிகாரச் சூத்திரவாய்ப் பாட்டால் சுட்டப்படுகிறதே. நூலிற்கு இது மங்கல வாழ்த்து அல்லவா ? இக் காரணத்தால் இப்பாகத்திற்கு ஏன் மங்கல வாழ்த்துப்பாடல் என அமைந் திருக்கக் கூடாது என ஓர் ஐயப்பாடு ஏற்படுகிறது. பொரு ளதிகாரம் புறத்திணையியல் 36வது சூத்திரத்தில் மண்ணு மங்கலம், வாண்மங்கலம், பெருமங்கலம் முதலிய அரசர்க் குரிய வாழ்த்துக்கள் கேட்கப்படுகின்றன. அடியார்க்கு நல்லாரும் முதல் அத்தியாயத்தில் கதை நிகழ்ச்சி இல்லாத தால் அது காதை எனப்படவில்லை எனக் கூறுகிறார். பதி கத்திலும் மங்கலவாழ்த்துப் பாடல் என்று மட்டும் கூறப் படுகிறதே தவிர மண நிகழ்ச்சிப் பாடல் அல்லது மங்கல அணி பூட்டியபாடல் என்று கூறப்படவில்லை.

ஆதலால் இம்முதல் அத்தியாயமானது 'முடித்த கேள்வி முழுதுணர்ந்தோரே' என்பது வரைக்கும் ஆதியில் அமைந்து 'அதனால்' என்ற சொல் இல்லாமல் 20வது வரி முதல் உள்ள நூற்பாகம் 2வது மனையறம் படுத்த காதைக்குப் பாயிரமாக அமைந்திருக்கலாம்.

அப்போது தலைப்புப் பேருக்கு இணங்க நூலின் தொடக்கப்பாகம் குடை, திகிரி, அளி, புகார் ஆகிய நாலு பொருள்களின் வாழ்த்துக்களுடன் முடிந்திருக்கலாம். அரசன் தண்ணளிக்கும் குடியோம்பல் கடமைக்கும் மழை உவமானமாகப் போற்றப்பட்டபடியால் குடை அரசன் முறை செய்யும் பெருமையைச் சுட்ட உவமையாக எடுக்கப் பட்டிருக்கலாம். முறை செய்யும் போது உள் நாட்டுக் குடிப்பிறந்த பெரியார் எனப்படுவார் குழாமாக அல்லது

அவையாக அரசனுடன் வீற்றிருந்ததாகக் கேட்கப்படுவதால் புகார் என்னும் ஊர் முறை செய்யும் அவையாகக் கருதப் பட்டுப் போற்றப்படுகிறது.

பொருளதிகாரம் புறத்திணை 30வது சூத்திரத்தில் 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்று கூறப்படு கிறது.* இதில் ஊர் என்பது முறை செய்யும் சபை, தோற்றம் என்பது அரசன் முறை செய்ய அவையுடன் வீற்றிருத்தல். "முரசு முழங்குதானை மூவரும் கூடி அரச வையிருந்த தோற்றம் போல்" என்று பொருநராற்றுப்படை (வரி. 54-5) யில் வருவது கவனிக்கத்தக்கது.

புகார் எனப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பழங்குடியாளரின் தன்மை மங்கலவாழ்த்தின் பகுதியாகிய அடியிற் காணப்படும் வரிகளிற் சுட்டப்படுகிறது.

'பொதியிலாயினும் இமய மாயினும்
பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொது வறு சிறப்பின் புகாரேயாயினும்
நடுக்கின்றி நிலை இய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடிந்த கேள்வி முழுது உணர்ந்தோரே'

இவ்வடிகளிலுள்ள 'உயர்ந்தோர்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் உரையில் ஒருதலைபாகத் துணிவுடன் பொருள் கூறப்படவில்லை. பொதிய மலையில் தெய்வமாய் வீற்றி ருக்கும் அகத்திய முனிவனும்† இமயத்தில் வீற்றிருக்கும்

---

*இச சூத்திரத்திற்கு பொதுமகளிரோடு கூடி வந்த விளக்கம் எனப் பொருள் கூறப்படுவது நேரன்று.

† அகத்தியன் என்பது அக+ஹததியன் எனப்பிரிந்து பாயத்தை நாசமாக்கிய அகமருஷ்ண ரிஷி எனப பொருள் படும்; குற்றத்தை அகலச் செய்த குற்றாலன் என்பதும் அப்பொருள் பயக்கும்.

கைலாச நாதனும் புகாரிலுள்ள அரசனும் என முதலில் உரைவகுத்துப்பின் அரசன் என்பதற்குப் பதிலாகப் பழங் குடியிலுள்ளாரும் என்று தெளிவான உரை கொடுக்கப் படுகிறது. இப்பழங்குடிகள் நிலத்திருவாளரையே குறிக்கும். அடியார்க்குநல்லார் பழங்குடிகள் புகாரிலுள்ள வணிகரைக் குறிப்பதாக மயக்க உரை எழுதுகிறார்.

'கூறுார்' என்ற வினைக்குப் புலவர் என்பது தோன்றா எழுவாயாகக் கருதப்படவேண்டும். முடித்த கேள்வி முழுது ணர்ந்தோராகிய உயர்ந்தோர் (அகத்தியனும், இறைவனும், பழங்குடியும்) அம்மூனறிடத்தும் தங்குதலால். அகத்தியன் தன்னுடைய முத்தமிழ்ப் பொருளிலகணத்தால் ஆத்மாப் பிரபஞ்சவிவேகத்தைத் தன் மாணவரிடம் பரப்பி மும்மலக் கொடுமை நீக்கி இன்பம் பயப்பது போலவும், இறைவனாகிய கைலாசபதி தன் மானச நூலாகிய ஆகம ஞானத்தைத் தேவ இருடிகளிடம் பரப்பி அவர்களுக்குப் பாப விமோசனம் செய்வது போலவும், புகாரில் அறநூலிலும் முறை நூலிலும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட சித்தாந்தங்கள் முழுமையும் உணர்ந்ததால் அறனறிந்து மூத்த அறிவுடையாராகிய பழங் குடிகள் (உண்ணுட்டுப் பிறந்தார்) தம் அரசனுடன் அவை யிருந்து முறை செய்து இன்பம் பயப்பித்தார்கள் என்பது கருத்து.

இப்பழங்குடிகள் சிலப்பதிகாரக் கதாநாயக நாயகிகளின் இனமாயிருக்கவேண்டு மென்று கருதி அடியார்க்குநல்லார் இவ்வாறு மயங்கி உரைத்தார். பண்டத் திருவாளராகிய வணிகரும் நிலத்திருவாளராகிய வேளிர் அல்லது குறுநில மன்னரோடு அவையில் வீற்றிருத்தற்கு உரியராயினும், நிலத்திருவாளர் இல்லாத அவைக்கு முறை செய்ய வணிகர் மட்டும் அழைக்கப் படுவது இயல்பாயிருக்க முடியாது.

இங்கே 'பழங்குடி' என்பதால் குறிக்கப்பட்டார் வணிகர் அல்லர் என்பதும் நிலத்திருவாளராகிய வேளிர் என்பதும் இம்மங்கலவாழ்த்துப் பாடலில் பின்வரும் பகுதியால் தெரிகின்றன. அப்பகுதி வருமாறு :

பெருநிலம் முழுதாளும் பெருமகன் றலை வைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந் தோஙகு செல்வத்தான்.

இப்பகுதிக்கு உரை எழுதுவதில் அரும்பதவுரைகாரரும் அடியார்க்குநல்லாரும் பிழைபட்ட அர்த்தத்தைக் கொடுக்கிறார்கள்.

பெருநிலம் முழுதாளும் பெருமகன் என்பது சோழ மன்னனாகிய கரிகாலனைக் குறிக்கும். அவன் வேளிரின் இனத்தான் என்பது நூற்பிரசித்தம். ஆதலால் அம் மன்னனைத் தலைமையாகக் கொண்டு ஒப்பற்ற தனிப் பெருமை வாய்ந்த பழங்குடியும் நிலத்திருவாளராகிய வேளிராயே இருக்கவேண்டும். இங்கே அக்குடிகளினும் மிக்க செல்வத்தை யுடையோன் மாசாத்துவான் என்பது அக்குடிகளின் தலைமையுடைய கரிகாலன் பெருமைக்குச் சிறப்பன்று.

குடிகளோடு என்பதில் 'ஓடு' என்பதை 'இன்' எனக் கொண்டு 5வது வேற்றுமைக்குரிய மிகுதிப் பொருள் கொடுத்து உரை எழுதுவது தவறான முறையாகும். 'இன்' என்பதற்கு ஒப்புப் பொருளும் உண்டானபடியால், வேளிராகிய பழங்குடி ஒத்த பெருமையுடைய வணிகனாகிய புதுக்குடி எனப் பொருள் கொள்ளல் நேரிது.

கரிகாலன் காலத்தில் சோழநாட்டில் உண்டாட்டுப் பிறந்த பழங்குடிகளாகிய நிலத்திருவாளர் அற நூலில் முடித்த கேள்வி முழுதும் உணர்ந்து முறை செய்து அகத்

இயல் நூலைக்கற்ற விழுமியோர் போலவும், இறைவன் நூலைக்கற்ற இருடிகள் போலவும் பெருமை யுடனும் புகழுடனும் வாழ்ந்தார் என்பதை மறைக்க சிலப்பதிகார உரைகாரர்கள் இவ்வாறு படிற்றுரை எழுதியிருக்கிறார்கள்.

## சிலப்பதிகாரத்தில் கதையில் முன்னுக்குப் பின்னுள்ள முரண்

நூலின் முற்பாகத்தில் கோவலன் தன் செல்வம் முழுமையும் மாதவிக்கு கொடுத்தும் மற்றும் சிற்றினத்துடன் கலந்தும் இழந்தான் என்ற கருத்துப்படக் கூறப்படுகிறது. இதற்கு மாறாகப் பின்பாகத்தில் பொருளை நல்வழியில் பெருமிதமாகச் செலவு செய்தான் எனக் கூறப்படுகிறது.

"ஒத்துடை அந்தணர் உரை நூற்கிடக்கையில்
தீத்திறப்புரிந்தோன் செய்துயர் நீங்கத்
தானம் செய்து அவள் தன்துயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வதுறு பொருள் கொடுத்து
நல்வழிப்படுத்த செல்லாச செல்வ" (சிலப. அடைக். 70-75).

இவ்வரிகளை அடியிற்கணடவற்றோடு ஒபபிட்டுப் பார்க்க.

"பொச்சாப்புண்டு பொருளுரையாளர்
நச்சுக் கொன்றேற்கு நனனெறியுணடோ"
(சிலப. கொலைக்கள. 65-66).

# அறிவனின் நேர்மைக் காட்சியும் புலவனின் பொய்த்தேர்ப் புகழ்ச்சியும்

புறத்திணையியல் வாகைத்திணை 22-வது சூத்திரத்தில் கூறப்பட்ட மறத்துறை, அறத்துறை என்ற இருவகைத் துறைகளில் அறத்துறைப் பகுதியைச் சார்ந்த "அருளொடு புணர்ந்த *அகற்சி" என்ற துறைக்கு அடியில் கண்ட பாட்டு உதாரணமாக எடுத்தாளப்படுகிறது.

"புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தணஅது
மூலைமருக் குழவி வாஙகிவாய மடுத்து
இரையெனக் கவர்வுற நோககி யாஙக
எரிளங குழவியின் முன்சென்று தாக்கும்
கூர்நுதிப் பிணைமான் † புலவு வேட்டுத தொடங்கிய
வாள் எயிற்றுக் கொள்ளையில தஙகினன் கதுவப்
பாசிலைப் போதி மேவிய பெருந்தகை
ஆருயிர்க் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சியின் அகலு மாறே"

இப்பாடலில் " தணஅது " என்பது பிணைமானைச் சுட்டியது. பிணைமான் என்பது பின்வரும் கதை நோக்கிப் புல்வாய் என்னும் மானைக் குறிப்பித்ததாகக் கொள்ளக் கிடக்கின்றது.

*அகற்சி = துறவு. † 1934-ல் அச்சிட்ட பொருளதிகார நூலில் காணப்பட்ட "கூருகிர்வயமான்" என்ற பாடம் பிழைபட்டதாகத் தெரிகிறது. நூலின் பிழைதிருத்தமும் நற்பாடத்துக்கு உதவவில்லை.

"சமீபத்தில் குட்டியீன்ற ஒரு பெண் புலியானது தன் ஆற்றாப் பசிதீர்க்க, ஒரு புல்வாயினின்றும் அதன் பால்குடி மறவாத குட்டியைப் பிரித்து இழுத்துத் தனக்கு இரையாக வாயில் செலுத்துவதை அப்புல்வாய் தடுக்கும் பொருட்டு தன் அழகிய இளங்குட்டியை விலக்கிக் கொண்டு அதற்கு முன்னாகச் சென்று புலி தன் குட்டியை விட்டுவிடும்படி அப் புலியை எதிர்த்துத் தாக்க, புலியானது குட்டியை விட்டுப் புல்வாயின் புலவை விரும்பி அதைத் தின்னச் செல்ல புலியின் வாள்போற் கூரிய பற்களைப் பார்த்தான் போதி மரத்தில் வீற்றிருந்த சகிய முனியாகிய புத்தன். புல்வாய்க் காகவும் அதன் குட்டிக்காகவும் அவைகளின் உயிர் காக்க மிகுந்த கருணை புணர்ந்து புத்த பெருமான் அப்புலிக்கு இரையாகத் தன் உயிர் அகலுமாறு அதன் திறந்த பற்களால் கொள்ளப்படடுத் தின்னப்பட (தன் உடம்பிற் பற்றுவிட்டு) புலியினால் பிடிபடத் தங்கினான்" என்பது மேற்பாட்டின் கருத்து.

"மடுத்துக் கவர்வுற" என்பதை "கவர்ந்து மடுக்க" என மாற்றுக. "கதுவத் தங்கினன் பெருந்தகை" என இயைக்க.

இக்கதையானது மாறுவடிவத்தில் வேம்பத்தூர் நம்பி ஆக்கிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் காணப்படுகிறது. அபபுராணததில் 53-வது விளையாட லாகக் காணபபடும் "புலி முலை புல்வாய்க் கருளின திருவிளையாடல்" என்ற கதையில் இம்மாறு வடிவம் தோன்றுகிறது. கதை வருவாறு :—

"மதுரை நகரானது பாண்டியனால் அமைக்கப்படு வதற்கு முன், காடாயிருந்த கடம்பவனத்தில் ஒருபுல்வாய் தான் சமீபத்தில் ஈன்ற இளமறியை ஒரு புதரில் பதுங்க

வைத்துவிட்டு நீர்வேட்கையால் ஒரு வாவியின் கண் சென்றது. சென்று வாவியில் நீர்பருகும் பொழுது, தன் காய் பசி நிமித்தம் ஏதாவது மிருகம் வருவதைப் பார்க்கக் காட்டில் மறைந்து நின்ற ஒரு வேடன் புல்வாயைக் கண்டவுடன் மகிழ் வெய்தி அப்புல் வாயைக் கொல்ல அதன்மேல் அம்பு எய்தான். புல்வாய் தன் குட்டியை நினைந்து அதற்காக உள்ளம் கசிந்து கொண்டு விழுந்து உயிர் நீங்கியது. யாவுக்கும் தாயான ஆலவாயுடையார் அப்புல்வாய் குட்டிக்காகக் கசிந்து அது அழுதற்குத் தரியாது குட்டிக்குப் பக்கத்தில் நின்ற புலி ஒன்றை அக்குட்டிக்குப் பாலூட்டும்படி அருள் சுரந்தான்."

"பாய்புலியும் இரங்கிமனஞ் சுரந்து முலைப் பாலளிப்பான்
நேயமொடு வரக்கண்டு வால் குழைத்து நேர் வந்து
தாய்வரவு காணுமல் தளர்ந்த மறி பயந்தணிந்து
தாயமுலைப் பாலுண்டு துள்ளிவிளை யாடியதால்"

தன் வேதவிதியை மாற்றிப் புல்வாய் மறிக்கு புலியை முலையூட்டச் செய்த ஆலவாயுடையார் ஆற்றலைக் கண்டு பிரமன் தலை வணங்கி வாழ்த்தவும் இந்திரன் வியக்கவும்* இளமைப் பருவம் கழியும் வரை அப்புல்வாய்க்குட்டி புலிமுலையுண்டு வளர்ந்தது.

அந்நாளில் மணவூரிலுள்ள ஒருவணிகன் வியாபார நிமித்தம் மேல்திசை நோக்கிப் போய்ப் பொருள் தேடிக் கொண்டு அம்மணவூர் நோக்கித் திரும்பி வந்தான். வரும் வழியில் கடம்பவனத்தில் அக்காட்டில் ஒரு ஒலி கேட்டு,

---

*புலிபுல்வாய்களுக் கிடையில் உள்ள பகைமை போன்ற பகையும், அப்பகை பாராட்டாது பால் கொடுக்கும் அன்பு போன்ற அன்பும் தன் சுவர்க்கத்தில் இல்லை யென்று இந்திரன் வியந்தான்.

அதன் நேர் போனுன். அங்கே திருவாலவாயுடையார் மூர்த்தம் (=வடிவம்) ஒன்று தங்கிய கோயிலில் அம்மூர்த் தத்தைக் கண்டு துதிசெய்து வணங்கியபின் ஓரிடத்தில் உறங்கினுன். காலையில் விழித்து அங்குள்ள கோயிலை நன்ருகப் பார்த்துவிட்டு மணவூருக்குத் திரும்பி வந்து ஊர் சேர்ந்தபின் அவ்வற்புதச் சேதியைப் பாண்டிய மன்னனுக்குத் தெரிவித்தான்.

உடனே பாண்டியன் தன் அமைச்சர்களுடன் கடம்ப வனத்திற்கு வந்து ஆலயத்தையும் ஆலயத்தின் அமர்ந்துள்ள சொக்கநாதரையும் அருகிலுள்ள பொற்ருமரை வாவியையும் கண்டான். கண்டவன் இறைஞ்சினுன். அங்கே பல புது மைகளுடன் சொக்கன் அருளால் புல் தின்னும் புல்வாயின் இனத்துக் குட்டி புலால் தின்னும் புலியால் முலைப்பாலூட் டப்பட்டு வளர்ந்து விளையாடுவதைப் பாண்டியன் தன் நெஞ் சுறக்கண்டு இது விசேட தலம் எனக் கருதி இத்தலத்தில் ஊர்காண உறுதி கொண்டான்.

ஊர்காண எல்லை காட்டும்படி பாண்டியன் அந்திப் பிறை முடிதரித்த ஆலவாயுடையாரை வேண்ட, அவர் எல்லை அடைவாகச் சித்தர் உருக்கொண்டு நடந்தார். எல்லை காட்டிய பின் உடையவர் ஒளித்தார். அக்காட்டில் எல்லைக்குள் பாண்டியன் மணிமாடம், கூடம், மதில், வீதிகள், மடங்கள், கழகங்கள் ஆகிய கட்டடங்கள் சமைத்து நல்ல குடியும் பல்படையும் தங்கும்படி செய்து வீற்றிருந் தான். இந்நகரம் கன்னி, மால், காளி ஈசன், ஆகிய நாற் கடவுளருடைய ஆலயங்களாற் சூழப்பட்டது. புறநாட் டரசர் தனக்குத் திரை செலுத்தும்படி யாகவும் இந்திரன் தன்னை வாழ்த்தும் படியாகவும் பாண்டியன் இன்னல்

இல்லாமல் எண்டிசைகளிலும் தன்னுடைய வெற்றியே புகழப்படும்படி நாட்டை ஆண்டுவந்தான்.

நம்பி திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்த ஆடலில் இந்திரன் கடம்பவனத்திற்கு வந்து வேட்டை யாடினதாகவும் அக்காட்டில் யானை, பன்றி, சிங்கம், கரடி, கலைமான், புலி முதலிய விலங்குகள் வேட்டையாடுவோர்க்கு விருப்பு உண்டாகும்படி நெருங்கியிருந்தனவென்றும் இந்திரன் வேட்டையாடி அம்மிருகங்களை எய்து மனங்களித்தான் என்றும் கூறப்படுகிறது. இந்திரன் அவ்வாறு வேட்டையில் விலங்குகளை எய்ததில் அவன் உள்ளத்தில் அக்காட்டு மிருகங்களைக் கொன்றிடக் கூடாது என்ற எண்ணந் தோன்றினதால் விசேடம் ஏதோ அக்காட்டில் இருக்க வேண்டும் என ஊகித்தான்.

பின் அக்காட்டில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டான். கொடிய விலங்குகள் மிடைந்திடும் இக்கொடிய காட்டில் சிவலிங்கம் பார்வதி தேவியோடு இருந்ததற்கு இக்காடு என்ன புண்ணியம் செய்தது என்று இந்திரன் சொல்லி மகிழ்ந்தான். விருத்திராசுரனைத் தான் கொன்ற பாபம் திரும்படி இந்திரன் சிவலிங்கத்தை வேண்டினான். இந்திரன் வேட்டையாட்டில் இளைத்து நெஞ்சில் ஆராநேய முற்றுத் தன்னை வழுத்தித்தான் வெயிலிலும் காற்றிலும் நோவாதபடி தனக்கு விமானம் கொடுத்ததால் அவனுடைய பாபம் தீர்ந்ததென்றும் ஊர்க்கும் தீங்கு இல்லையென்றும் சிவபிரான் சொல்லி அருளினார். இந்திரன் தான் மனத்தூய்மை பெற்றதற்கு மகிழ்ந்து சென்றான்.

இக்கதையில் வேட்டையால் துன்புறும் மிருகங்களின் துயரஞ்சி வேட்டை தீயது என மட்டும் உய்த்துணர வைக்

கப்பட்டதே தவிர அம்மிருகங்களுக்குச் சிவ பிரானாவது இந்திரனாவது நேரே யாதொரு உதவியும் செய்ததாகக் கூறப்படவில்லை.

இன்னும் நம்பி திருவிளையாடல் பன்றிக்குட்டி களுக்குத்தாயான ஆடலிலும் அக்குட்டிகளுக்கு (அமைச் சராக) அருள் புரிநத ஆடலிலும் சொல்லப்படும் கதையும் மேற் கதைகளுடன் ஒப்பு நோக்கத் தகுந்தது. வேளாண் மரபின் ஓர் வன்னியர் தலைவனும் தாயும் இறக்க அவர் மைந்தர்கள் ஆதரிப்பாரில்லாமல் பரதேசம போய் வேட்டை யாடிக் காலம் கழித்தார்கள். ஒருநாள் வேட்டையாடி வருகையில் புதரில தவஞ்செய்யும் ஒரு முனிவன் முன் சென்று அங்கை கொட்டிபபாடி அம்முனிவனை இகழ்ந் தார்கள். அம்முனிவன் அவ்வேளாண் வன்னியரைப் பன்றி களாய்ப் பிறந்து தாயை இழக்கும்படி சபித்தான். குற்றம் செய்த அவ்வன்னியர் முனிவனைப் பிழை பொறுக்கும்படி வேண்ட அவன் சொக்கனருளால் வன்னியரான அப் பன்றிகள் மனிதராய்ப் பிறநது தலைவராவார் எனச் சாப விடையாகிய வரம் கொடுத்தான்.

முனிவர் சாபப்படி அவ்வன்னியர் பன்றிகளாய்ப் பிறந்து வளருங்கால் ஒரு நாள் பாண்டியன் வேட்டையில் தாய்ப்பன்றியைக் கொன்றான். தாயிழந்த பன்றிக் குட்டிகள் தாய் வளர்பபு நீஙகப் பெற்று அலறின. சொக்கன் உடனே தாய்ப்பன்றி வடிவம் தாங்கி இருபாலும் தன் முலைகளி னின்றும் பால் ஒழுக்கி அவ்வன்னியர் பன்றிக் குட்டிகளைப் பரிநது ஊட்டினான். பின் உமையமமை தன் பிரபுவாகிய சொக்கனைப் பார்த்து அரசர்க்கு வேட்டை தருமமாக அமைந்ததென்றும் வேட்டையிற் கொன்ற பாவம் கொன்ற அரசன் மேல் எதிர்த்துச சென்று தீங்கு விளைக்காது

என்றும் அப்படித் தருமம் இருக்க ஏன்தான் வேட்டையில் தாயிழந்த பன்றிகுட்டிகளுக்குத் தாய்ப்பன்றி வடிவம் தாங்கிப்பால் கொடுத்தான் என்றும் வினவினாள். அதற்குச் சொக்கன்தான் பிரமன் முதலாக எறும்பு ஈருக எப்பிராணி தோறும் நெருங்கி நின்று காத்த போதிலும் ஒரு தாய் தன் மக்கள் பலருள்ளும் ஒருவர்மேல் எப்படி அன்பு செலுத்து கிறாளோ அப்படியே தாமும் முன் உள்ள முனிவன் சாபத் தால் பன்றிக்குட்டிகளாய்ப் பிறந்த வன்னியர்களைக் காக்கும் பொருட்டுத் தாய்ப்பன்றி வடிவமானதாகச் சொன்னான்.

பின் சொக்கன் பன்றிக் கோலம் நீத்துக் கோயில் சென்றபின் அக்குட்டிகள் வேளாண் குடுமபத்தில் மாந்த ராகப் பிறந்தன. அவர்கள் வலி, வாக்கு, நீதி, அறிவு முதலிய வற்றில் தேர்நது பாண்டியனால் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

## பரஞ்சோதி திருவிளையாடல்

இனிப் பாஞ்சோதி திருவிளையாடலில் திருநகரம் கண்ட படலத்தில் கூறப்படும் விவரமாவது: கடம்பவனத்தில் கோயில்கண்டு வந்த வணிகன் பாண்டியனுக்குத் தான் கண்ட அற்புதத்தைக் கூறவும பாண்டியன் கனவில் ஆலவாயுடை யான் தோன்றிக் கடம்பவனத்தைக் காடு வெட்டி நகரம் ஆக்குக எனக் கட்டளையிட்டான். இக்கட்டளைப்படியே மன்னவன் ஆணையால் அமைச்சர் ஏவலருடன் கடம்பவனஞ் சென்று காடெறிந்தார். காட்டில் மரங்கள் சினையிற்று வீழ்ந்தன. காட்டுமரங்களில் உள்ள பூவில் தங்கிய வண்டுகள் புறவாகிய முல்லை நிலத்தும் பழமையாகிய மருதநிலத்தும் தப்பிப் பிழைத்தன. மரக்கிளைகளில் குடம்பை கட்டி வாழ்ந்த பறவைகள் வானத்தில் உள்ள கற்பகச் சோலைக்குப்

பறந்தன. காட்டிலுள்ள, அஞ்சியோடும் மெல் விலங்குகளும் மனிதரைக் கண்டால் தாக்கும் வல்விலங்குகளும் அண்மையில் உள்ள மலைச்சாரல்களுக்கும் . காடுகளுக்கும் பேரரசர் முன் ஓடும் குறும்பரசர்போல ஒதுங்கி ஓடி உயிர் தப்பித்துக் கொண்டன.

அரசன் ஏவலர் இவ்வாறு காட்டிலுள்ள மரங்களை யெல்லாம் வேரோடு வெட்டித் தள்ளினர். பின் அங்கு சித்தர் வடிவம் தாங்கி வந்த ஆலவாயான் பணித்தபடி பாண்டியன் நகர் அமைத்தான். இக்கதையில் காடு எறியப் பட்டதாகச் சொன்ன போதிலும் யாதொரு விலங்கு களுக்கும் ஊறு ஏற்படவில்லை யென்றும் இயற்கைக்கு விரோதமாக நடந்தது ஆலவாயுடையான் அருளால் என்றும் உய்த்துணரும்படி சொல்லப்பட்டது காண்க. நம்பி திரு விளையாடலில் நகரம் கண்டதாகச் சொல்லப்படும் புலிமுலை புல்வாய்க்கருளின் படலத்தில் காடெறிதல் சம்பந்தப்பட்ட கூற்றே கிடையாது.

இனிப் பரஞ்சோதி திருவிளையாடலில் இந்திரன் பழி தீர்த்த படலத்தில் கதை வருமாறு : விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன் கடலில் ஒளித்தவனை அவன் குருவான வியாழபகவான் கூவிக் கொணர்ந்து சுவர்க்க லோகம் அடைந்து தன்பதவி ஏற்குமுன் தன்பழி தொலைக்கப் பூமிக்குச் செல்லவேண்டும் என்று அவ்விந்திரனை வேட்டைக் கென்ன பூமிசை வரச் சொன்னான். குருவின் கட்டளைப் படியே இந்திரன் பூமிவந்து கயிலை சென்று பின் தெற்கு நோக்கிவந்தான். கடம்பவனத்தருகே இந்திரன் வரும் பொழுது விருத்திராசுரவதம் நிமித்தமாகத் தன்னைத் தொடுத்தபழி தன்னினின்றும் வேறாகி விடுத்து அகன்றது. இந்திரன் பாரம் விடுத்தவன் ஒத்தான். அவ்விடத்திலிருந்து

செல்லும் இந்திரன் வழியில் விலங்கானதாற் கற்க முடியாத மந்தி அருவியில் குளித்து அருவிக்கீழ்ப்படிந்து கிடந்து மணிபோன்ற கற்களைப் பாறையாகிய ஆசனத்தில் சிவலிங்கமாக இருத்தித் தன் விரலால் அருவிநீர் கொண்டு சிவலிங்கத்தை அபிஷேகித்து தான் கொய்த அலரால் அவ்விலிங்கத்தை அணிந்து தான் மரத்தினின்றும் பறித்த கனியும் அவ்விலிங்கத்தின் முன் ஊட்டவைத்து வழிபட்டதைக் கண்டான். இன்னும் அக்கடம்ப வனத்தில் ஒரு நீர்த் துறையில் இயற்கையிலேயே பகைமையுடைமையால் விலகியிருக்கும் யாளிகளும் யானைகளும் தம் தும்பிக்கைகளால் தண்ணீர் நிரப்பி ஒன்றற்கொன்று நீர் உதவிக் குடிப்பித்தன. அக்கடம்பவனம் தவிர வேறுமற்ற இடங்களில் புல்வாய்க்கன் றுகிய மெல்விலங்கை இயற்கையில் உணவாக உண்ணக் கூடிய புலியானது அக்கடம்ப வனத்தில் தன் முலைப்பாலால் அப்புல்வாய்க் குட்டியின் பசிநோய் தணிக்க அதை ஊட்டி வளர்க்கும். புட்களில் வலியுள்ள பருந்தானது அக்கடம்ப வனம் தவிர வேறு இடத்தில் தான் பகைமை செலுத்தற் குரிய பாம்புக் குட்டியை அக்கடம்பவனத்தில் அக்குட்டிப் பாம்பின் மேல் வெயிற்படாதபடி தன் சிறகை விரித்து நிழல் பரப்பினது. அக்கருடன் வெயிலால் சூடு தாக்கப்பட்டுத் துன்புற்றதோ எனக் குரங்கு உருகக மடைந்து அருகு கிடந்த சங்கினுல் நீர் முகந்து தன் கருங்கையால் கருடன் முதுகில் ஊற்றினது.

கடம்பவனத்தின் ஒரு புறத்தில் மயிற் சேவலும் பெடையும் கூடிக்களித்து விளையாடுவதற்கு உதவியாகப் பாம்புகள் தாம் உமிழ்ந்த மணிகளால் விளக்கிட்டன. அங்கே மரக்கிளையில் உறையும் குயில்கள் ஓம் என்ற ஒப்புரவு அறிவிக்கும் மந்திரத்தைத் திருவள்ளுவரை ஒப்ப மக்கட்குக்

கற்பிப்பனபோல் இனிமையாய் ஆர்த்தன. கிளிப்பறவை யானது ஆனோந்து எனப்படும் ஐந்தற மொழிக்கு அறிகுறி யாகிய பஞ்சாட்ரத்தை முருகப்பிரான் அகத்தியனுக்குத் தொடர்பு பெற உசசரிததது போலச் சொல்மிழற்றின. அங்குள்ள பூவைப் பறவைகள் குயில் கிளியாகிய இரு பறவைகளிடமிருநது வநத அம்மநதிர மொழி போன்ற ஆர்ப்புகளேக் கேட்டு உபதேசம் பெற்ற சிடர்களேப் போல் மகிழ்நதன. இநதிரன் மேற்கண்டபடி விலங்குகளும் புட்களும் செய்த அரிய செயல்களேக் கண்டு மகிழ்ந்து சென்ருன்.

அப்பொழுது ஒற்றர்வநது இநதிரனிடத்துத் தாம் கண்ட சிவலிங்கத்தைப் பற்றியும் வாவியைப் பற்றியும் கூறிஞர்கள். உடனே இநதிரன் வாவியில் சென்று நீராடிக் கடம்பவனத்தில் நுழைந்து சிவக் கொழுந்தைத் தன் ஆயிரம் கண்களிப்பக் கண்டான். அச்சிவக் கொழுந்தானது அளவிறந்த உயிராகி அவ்வுயிர்க்கு ஓர் உணர்வாய் அகில சராசரங்களும் தன்மாட்டு உதித்து மடங்க நின்ற வித்துப் போல் முளேத்திருநத தெனப பரஞ்சோதி ஆசிரியர் வர்ணிக்கிருர்.

இந்திரன் அசசிவலிங்கத்தின் முன் அடியிற் கண்டபடி புகழ்ந்தான்.

"யாவையும் படைப்பாய் போற்றி யாவையும் துடைப்பாய போற்றி
யாவையும் ஆளுய் போற்றி யாவையு மல்லாய போற்றி
யாவையும் அறிந்தாய போறறி யாவையும் மறந்தாய் போற்றி
யாவையுப் புணர்ந்தாய் போற்றி யாமையும் பிரிந்தாய போற்றி.

பூசையும் பூசைக்கேற்ற பொருள்களும் பூசை செய்யும்
நேசனும் பூசைகொண்டு நியதியிற் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசையான் செயதேன் எனுமென் போத
வாசனே யதுவுமான மறைமுதலடிகள் போற்றி."

இவ்வாறு துதிசெய்துவிட்டு இந்திரனும் உடையவரிடம் வரம் பெற்றுத்தன் லோகம் சேர்ந்தான்.

மேல் பொருளதிகார மேற்கோட்பாடலிற் கண்ட புத்தனது அருட்டன்மைக்கும் இந்திரன் துதிப்பாடல்களிற் சுட்டப்பட்ட சிவலிங்கக் கடவுளின் தன்மைக்கும் வேற்றுமை காட்டும் பொருட்டு புல்வாய்க்குப் புலிபால் கொடுத்த கதையும் பன்றிக்குட்டிக்கு ஆலவாயுடையானே தாயாய் வந்து பால் கொடுத்த கதையும் பௌராணிகளாற் புனையப் பட்டிருக்கின்றன என்பது தெளிவாகின்றது.

இயற்கையில் உள்ள கொடுமையை நீக்கப் புத்தன் தன்னுயிர் கொடுத்தான் என்னும் கற்பனையின் அழகையும், இயற்கையின் கொடுமையும் அன்பும் கலந்து காணப்படுவதை உற்று நோக்கி அவற்றை ஆக்கியோனாகிய முதற் பொருள் நம் சிற்றறிவிற்கு எட்டாத் தன்மையுடையதாயிருக்கிறது என்ற வாய்மையையும் நாம் சிந்தித்து மகிழ்வோமாக.

பரஞ்சோதி திருவிளையாடலில் பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த படலத்தில் பாண்டியனுடைய மிருக வேட்டையின் தன்மை அகலக் கூறப்படுகிறது. வேட்டையால் இடுக்கண் அடைந்த ஆண் பன்றி ஒன்று பாண்டியனை எதிர்த்துப் போராற்றப் போம்பொழுது தன் காதற் பெடையை நோக்கி,

'இன்று பாண்டியனை நேரிட் டிருஞ் சமராடி வென்று
வன்திறல் வாகையோடு வருவனே யோ அன்றிப்
பொன்றுவனேயோ? நீ உன புதல்வரைப் பார்த்து காதலா
கன்றிவண் இருத்தி என்ன நகைபடேடு இன்ன கூறும.

ஆவியங்கேக இர்த ஆகமிங்கிருப்ப தேயிப்
பாவியோம மேஞள இந்தப பறழினே வருதத தெய்வம் ;
மா அமர் ஆடி வென்று வருதியேல் வருவேன் அன்றி
நீவிளிந்திடத்து மாயவேன் நிழலுக்குஞ் செயல் வேறுண்டோ.'

என்று சொல்லிற்று. ஆண்பன்றியுடன் பெண்பன்றியுஞ் சென்று முதல் ஆண்பன்றி இறந்து பின் பெண்பன்றியும் இறந்தது. பெண் பன்றியை அரசன்தான் எய்யக்கூடாது என அதை எய்ய அரசனால் அனுப்பப்பட்ட சருச்சரன் என்பவனும் இறந்தான். பின் குட்டிகளை ஆலவாயுடையார் தாம் பெண்பன்றியாய் வந்து முலைகொடுத்து வளர்த்து அடுத்த பிறப்பில் அவைகளை வேளாண் மாந்தராய்ப் பிறக்கச் செய்து அமைச்சர்களாகச் செய்தார். இக்கதையும் மேல் எடுத்தாளப்பட்ட பொருளதிகாரச செய்யுட் கருத்தை உட்கொண்டு அப்பாட்டு நீதிக்கு மாறானதும் மேலாய்க் கருதப் பட்டது மான நீதி ஒன்று கற்பிக்கப்படுகிறது.

புல்வாய் புலிபோன்ற பகைவிலங்கின் ஒற்றுமை நடையானது பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தில் விறகு விற்ற படலத்தும் எடுத்தோதப்படுகிறது. பாணனுடைய ஆளாய் விறகுச சுமை எடுத்து ஆலவாய் உடையார் பாணன் எதிரியாகிய வட நாட்டு ஏமநாதன் தங்கிய இல்லின்முன் இருந்து பாடிய கானம் மனிதன் ஒழிநத சராசரங்களையும் வயப்படுத்தியது என்று சொல்கிற கட்டத்தில்வரும் அடியிற் கண்ட பாடல்கள் ஒப்புநோக்கத்தக்கன.

பைத்தலே விடவாய் நாகம பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய வல்லியம் மருட்கை எய்தித்
தத்தம் ஆறு அறியாவாகித தலேததலே மயங்கிச் சோர
இத்தகை மாவும் புளளும் இசைவலேப பட்ட அம்மா.

வாழிய உலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரண மெல்லாம் அசைவற அடங்க ஐயன்
எழிசை மயமேயாகி இருந்தன உணர்ந்தோர் உள்ளம்
ஊழியில் ஒருவன்தாள் புக் கொடுங்கிய தன்மை யொத்த.

கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண்ணிறை தேவகீதஞ் சராசர உயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித தன் மயமே யாக்கி
உண்ணிறை உயிரும் மெய்யும் உருக்கிய து இசைவல்லானை.

பெரிய புராணம் ஆனைய நாயனார் கதையில் ஆனைய நாயனார் தம் புல்லாங் குழலில் பஞ்சாட்சரத்தை இசையுடன் வாசித்த ஒலியின் விளைவைக் கூறுமிடத்துக் காணும் பாடல் கவனிக்கத்தக்கது. அது வருமாறு :

நலிவாரும் மெலிவாரும் உணர் வொன்ருய் நயத்தலினல்
மலிவாய் வெள் எயிறறரவம் மயில் மீது மருண்டு விழும்
சலியாத நிலை அரியும் தடங்கரியும உடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

புலியினிட மிருந்து குட்டிகளின் நிமித்தம் தாய் மானைக் காப்பாற்றுவதற்காக அப்புலியின் வாயிடைப் புத்த பிரான் சென்ருன் என்ற கருத்துடைக் கதையானது குடிகளையும் பயிர்களையும் காக்கக் கடமை பூண்ட அரசன் வேட்டையிலும் பிராணிகளைக் கொல்லலாகாது என்ற கருத்தை உட்கொண்டிருக்கிறது. வேட்டைக்கு விரோதமான அக் கருத்தை நீக்கவே எல்லா உயிர்களையும் காப்பவரும அழிப்ப வரும் ஆகிய சர்வ வல்லமையுள்ள கடவுளால் வியாபகத துடன் ஆளப்படும் உலகில், அரசியற் குரிய அவர்வயப்பட்ட அரசன் தர்மவேட்டை யாடலாம் என்ற கருத்துப்பட மேற் கொண்ட புராணங்களிலுள்ள கதைகள் தோன்றினவாகத் தெரிகிறது.

பெரிய புராணத்தில் கண்ணப்பநாயனார் புராணத்தில் வேட்டையில் எவ்வெவ் மிருகங்கள் கொலையுண்ணப்படாது என்று குறிக்க ஒருபாடல் காணப்படுகிறது. அது வருமாறு :—

"துடியடியன மடிசெவியன துறுகய முனி தொடரார்
வெடிபடவிரி சிறு குருளைகள் மிசைபடு கொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன அணையுறு பிணை அலையார்
கொடியன எதிர் முடுகியும் உறு கொலை புரிசிலை மறவோர்."

இப்பாடலால் குருளைகளை பால் கொடுத்து வளர்க்கும பொருட்டு வாழ்ந்திருக்கும்படி தாய் விலங்குகளைக் கொல்லல் குற்ற முடைத்து என்று கூறப்படவில்லை. மேல் பொருளதிகாரப் பாட்டில் புத்தன் முறையில் குட்டியுடை அப்பெட்டை மான்கள் வேட்டையில் கொல்லப்படல் நேரன்று என்று சொன்ன விதிக்கு மாறாக இப்பெரியபுராணப் பாட்டு அமைந்திருக்கிறது. இப்பாட்டில் சினையுடைய பெண் மிருகங்களும் குட்டிகளும் தான் தவிர்க்கப்படுகின்றன.[1]

மேற்சொன்ன புத்தன் அருட்செயல் போன்ற செய்கையை உட்கொண்டு திருவள்ளுவரும் "நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கல்லால் அரிது" என்று கூறியிருக்கிறார்.

வித்தகர்க்குரிய இந்நிலையானது திருத்தொண்டர் திருவந்தாதியில் சித்தத்தைச் சிவன்பால் வைத்தார் நிலை எனப்படுகிறது.

---

1. கருவுடையன அணையுறு பிணை என்பதில் கருவுடையன பிணை, அணையுறு பிணையெனக் கொண்டால் குட்டியை உடைய தாய்மிருகஙகளும கொல்லபபடா வென்று பெறுகிறது. அப்படியானால் பொருளதிகாரப் பாட்டின் கருத்தும் பெரிய புராணக் கருத்தும் ஒத்திருக்கின்றன.

உததமத தானத்தறம் பொருள் இன்பம் ஓடி எறிந்து
விததகத்தானத் தொரு வழிக்கொண்டு விளங்கச் சென்னி
மததம் வைததான திருபபாத கமல மலரடிக் கீழ்ச்
சித்தம வைததார என்பர் வீடுபேறெய்திய செல்வாகளே.

## மலைபடுகடாம்

புத்தன் சம்பந்தப்பட்ட ஜாதகக் கதையும் (புத்தனின் பழம் பிறப்புக்கதை) சைவபுராணங்களிற் சுட்டப்பட்ட அருட் கருத்து பொதிந்த வாக்கியங்களும் பத்துப்பாட்டில் ஒன்ருனதும் பெருங்கௌசிகஞர் இயற்றியதுமான மலைபடு கடாம் என்ற நூலில் உள்ள அடியிற் கண்ட வரிகளை ஆதார மாகக் கொண்டு முறையே கட்டப்பட்டும் புனையப்பட்டும் இருக்கின்றனவாகத் தெரிகிறது.

புலியுற வெறுதத தன் வீழ் பிணை உளளிக்
கலை நின்று விளிக்கும் கானம (வரி. 404-5).

அளைசசெறி உழுவை கோளுற வெறுதத
மடக்கண் மரையான பெருஞ செவிக்குழவி (வரி. 505-6).
வெறுத்த—தாக்கிய.

இங்கே புலியால் தாக்கப்பட்டதும் தான் புலியால் இறந்தால் தன் பிணைமான் துன்புறும் என நினைத்துக் கூப் பிடுவதுமான கலைமான் உள்ளகாடு என்பது மேல் இரண்டு வரிகளின் கருத்து. கீழ் இரண்டு வரியின் கருத்தாவது: குகையில் உறையுமபுலியானது (தன்னைக் கொன்று தின்னும் பொருட்டு பல்லாலும் நகத்தாலும் காயஞ் செய்ய) வளைந்து வந்து தாக்க அத்தாக்கப்பட்ட மரையான் தன்பெரும் செவிக் குழவியைக் காப்பாற்ற உயிருடன் இருக்கவேண்டுமே என்ற கவலையுடன் அக்கொடிய புலியை எதிர்த்துத் தாக்க (=வெறுத்த) அம்மரையான் புலிக்கு ஆற்ருது கொல்லப்

பட்டபின் தாயின்றி தானே இரைதேடியலைய வல்லமை இழந்த மரையான்கன்று நன்னுடைய வேடுவரால் பிடிக்கப்பட்டு அவ்வாறு வந்த மரையான் கன்றின் மாமிசமும்.

இப்பாகங்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வழுவுடைத்து. வரி 404-405-ல் போரில் வீரர் தன் மனைவி மக்களின் க்ஷேமத்தை நினைத்துத் தமக்கு கொடுமை நினைத்த மாற்றாரை எதிர்ப்பதைக் குறித்திருக்கிறது.

தன் வீழ் (விரும்பும்) பிணையாகிய பெண்மான் தான் இறந்தால் தனித்து வாழுமே யென்ற கவலையால் ஊக்கப் பட்டுத் தன்னைக் கொல்ல முயலும் புலியை எதிர்த்த கலைமான் விளிக்கும் கானம் என்பது கருத்து. இது தான் கருத்து என்பது மலைபடுகடாம் 307—310 வரிகளில் உள்ள

கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்கு வரம்பாகிய கணவன் ஓம்பலின்
ஒண்கேழ வயப்புலி பாயந்தெனக் கிளையொடு
நெடுவரை இயம்பும் இடி உமிழ தழங்கு குரல்

என்ற பாகத்தால் நன்கு விளங்குகிறது. "கயந்தலை மடப் பிடி (—பெண்யானை) யின் தலைவனாகிய ஆண்யானை தனக் கும் தன்கிளையாகிய யானைக் குட்டிகளுக்கும் இரைதேட வெளியே போன சமயம் வயப்புலி தாக்க அப்பெண் யானை யும் யானைக்குட்டிகளும் பிளிற" என்பது பொருள்.

பகை மிருகங்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தன என்ற சைவபுராணக் கருத்தை அநுசரித்து பெரும் பாணாற்றுப் படையிலுள்ள "மந்திசீக்கும் மாதுஞ்சு முன்றில் ஒன்றிலங்கு

அருவிய மலைகிழவோனே"[1] என்ற பாகத்திற்கு உரையாசிரியர் உரையெழுதுவதும் கவனிக்கத்தக்கது. மானும் புலியுமாகிய மாக்கள் (மிருகங்கள்) உறங்குமாறு, மந்தியானது அவைபடுக்கும் இடத்தில் மரத்தினின்று கலைமானால் உதிர்க்கப்பட்ட மலர்க்குப்பையை அப்புறப் படுத்தும் மலைச் சாரலிடமும் அருவியுமுள்ள மலைக்கு உரிய மன்னனாகிய இளந்திரையன் என்று கருத்து.

பொருளதிகாரத்தின் உரையிலிருந்து மேல் எடுத்தாளப்பட்ட மேற் கோட்பாடலின் கருத்தானது மணிமேகலை உரையாசிரியரான உத்தமதானபுரம் டாக்டர் சுவாமிநாதப் பேராசிரியரால் தமது மணிமேகலை உரையில் காட்டப்பட்ட அடியிற் கண்ட மேற் கோட்பாடல்களால் விளங்குகிறது.

(1) தீதியல் புலியது பசிகெடு வகை நின்
திரு உரு அருளிய திறமமலி பெருமையை

(2) இருட் பாரவினை நீக்கி எவவுயிர்க்கும் காவலெனை
அருட் பாரம்தனி சுமந்த அன்று முதல் இன்றளவும்
மது ஒன்றும் மலரடிக் கீழ வந்தடைந் தோரா யாவர்க்கும்
பொது வன்றி நினக் குரிததோ புண்ணிய நின் திருமேனி
(வீரசோழியம் யாப்பு. 11. உதாரணங்கள்).

---

1. மலை. 497-500. இப்பாட்டில் கடைசி யடிக்கு முந்திய வரிகள் இரண்டும் பாட்டின் பொருளியைபுக்கு வேண்டா. அவை செருகு பாகமாயிருக்கலாம. பதுபபாட்டில் சில இடங்களில் இது போன்ற செருகு பாகங்கள் உள.

# நக்கீரர், கபிலர், பரணர்

திருவள்ளுவமாலையில் 47-வது பாடல் நப்பாலத்தனார் என்னும் புலவரால் ஆக்கப்பட்டிருப்ப தாகச் சொல்லப் படுகிறது. அப்பாடல் வருமாறு :—

'அறந்தகளி, ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்த நெய், செஞ்சொல் தீ, தண்டு—குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு'

நக்கீர தேவர்* ஆக்கினதாகச் சொல்லப்பட்ட கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி என்ற சதக நூலின் முதற்பாடல் வருமாறு :—

'சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல் இடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.'

இவ்விரண்டு பாடல்களிலுள்ள கருத்துக்களின் ஒற்றுமை கவனிக்கத்தக்கது. திரி, நெய், விளக்கு ஆகிய உவமானப் பொருள்கள் சாங்கிய நூலிலிருந்து எடுத்தாளப்பட்டிருக் கின்றன.

நப்பாலத்தனார்† என்ற பெயர்தானும் நல்ல இயல் நூலின் தந்தை அல்லது ஆசிரியன் எனப் பொருள்படும். இயல் நூல் என்பது பிரகிருதியின் முக்குணமாகிய மூவகை

---

*வடமொழிச் சாங்கிய நூலின் வடமொழிப் பாஷ்யத்தில் கேட்கப்படும் வாமதேவர் என்னும் பேர்போல நக்கீரதேவர் என்பது முக்குணக்கட்டினின்றும் விலகிய நிலையைக் குறித்த பேர்.

†அத்தனும் வந்தான் உமைப்போல் விடும் விடும் நும்மறி வின்மை, வே. திருவிளை சங்கப்பலகை. 17.

இயல்புகளைப் பற்றிக் கூறும் நூல் எனப்படும். முப்பால் என்ற தொடரிலுள்ள பால் என்பது தர்மம் அல்லது இயலைக்குறிப்பது போல, நப்பால் என்பதன்கண்ணுள்ள பால் என்பதும் இப்பொருளே குறிக்கும். திருவள்ளுவ மாலை, 48-ம் பாடல் பார்க்க. ஆதலால் நப்பாலத்தனார் என்ற நாமத்தால் சுட்டப்பட்டவர் சாங்கிய நூலின் இறைவனை (=ஆசிரியனை) கபில முனியாயிருக்க வேண்டும்.

மறைவுதல் ரூபமாகத் தமிழில் தெய்வங்கள் ஆசிரியர் களின் பேர்களைக் குறிப்பிடுவது பண்டைக்காலத்தில் பிரசித்த வழக்கமாயிருந்தது என்பது தமிழ் நூல் வட நூலொடு பழகுவார் யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயம்.

நப்பாலத்தனார் என்ற சொல்லில் உள்ள பால் என்பது முலைப்பால், பசுவின்பால் என்ற பொருள்களையும் குறிக்கும். பால் என்பது வடமொழியில் க்ஷீரம் எனப்படும். க்ஷீரம் என்பது தமிழில் கீரம் என மருவிவரும். ஆகவே நப்பால் அத்தனார் என்ற பெயரை நக்கீரர் என்றும் வடமொழியாளர் திரித்தனர். ஆகவே நக்கீரர் என்பதும் ஆதியில் கபிலர் என்பது போல சாங்கிய நூலாசிரியனையே சுட்டியிருக்க வேண்டும் என யூகிக்கப்படுகிறது. கபிலர் என்பது சேதா எனப்பட்டுப் பசுவாகவும், கீரம் என்பது சாங்கிய நூலாகவும் கருதப்பட்டிருக்க வேண்டும். முக்குணத்தினின்றும் விடுதலையடைந்த மானசன் என்ற ஆத்மா நாலாவது பொருளாகக் கருதப்பட்டுச் சாங்கிய நூலில் உதாசீனன் எனப் பட்டது. தமிழில் இந்நாலாவது பொருள் பரணன் (பிரகிருதிக்கு மேலிடத்திலுள்ளவன்) எனப் பட்டிருக்கவேண்டும்.

ஆகவே இறைவன், அவன் ஆக்கிய நூல், அந்நூலைக் கற்று வாலறிவனாகிய அவ்விறைவனின் நற்றாள் தொழுது

முக்குணத்தினின்றும் விலகிய ஈசுவரன் (=ஆண்டவன்) நிலைமை அடைந்த ஆத்மா ஆகிய முப்பொருள்களும் தமிழ் மொழியில் கபிலன், நக்கீரன், பரணன் என்ற மூன்று சங்கேத மொழிகளால் சுட்டப்பட்டிருக்கவேண்டும்.

பின்னால் புனையப்பட்ட திருவிளையாடற் புராணக் கதைகளில் இம் மூன்று நாமங்களும் வெவ்வேறு இறைவர்களை அல்லது சங்கப் புலவர்களைக் குறிப்பதாகச் சொல்லப்பட்டன. சாங்கிய நூலில் பிரகாசம், பிரவிருத்தி, நியமம்* என்ற முக்குணம், புருஷன் அல்லது மானசம் ஆக நாலு பொருள்களே உணர்த்தப்பட்டன. ஐந்தாம் பொருளாகிய பேராண்டவன் (பரமேசுவரன்) உணர்த்தப்படவில்லை. இப்பேராண்டவனை ஒரு உள் பொருளாகக் கருதிய மார்க்கம் சைவ சித்தாந்தம் எனப்பட்டது. நாற் பொருளே உள்பொருள் எனக் கொண்ட மார்க்கம் சாங்கிய ஆகம சிந்தாந்தம் எனப்பட்டது.

திருவிளையாடற் புராணத்தில் இவ்விருவகை மார்க்கதர்சனிகளுக்கும் நிகழ்ந்துள்ள வாதப் போரானது நக்கீரனுக்கும் திரு ஆலவாயானாகிய சிவ பிரானுக்கும் நடந்ததாகக் கூறப்படுகிறது. வடமொழிக் கபில சாங்கியத்தில் கூறப்பட்ட நாற் பொருளுண்மைக் கட்சியை திரு ஆலவாயார் வாதித்தார் என்றும் ஐம் பொருட்கட்சியையும் பிரகிருதியாகிய ஞானப்பூங்கோதைக்கு பரமேசுரன் தர்சன மின்றி ஓராற்றலும் கிடையாது என்ற கட்சியையும் நக்கீரன் வாதித்தான் என்றும் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்திலும் வேம்பத்தூரார் நூலின் சங்கப்பலகை தந்த படலத்திலும் கூறப்படுகிறது.

*இச்சங்கேதபதங்கள் சத்துவம், ரஜஸம், தாமசம் என்னும் மூன்றையும் குறிக்கும்.

'நய முறு பொருட்குப் பொருந்திய தத்தம்'
நலந்தரும் இருந்தமிழ் கண்டே
இயலுடை வாணர் மகிழ்ந்து அதிசயத்தோடு
இவை இவை ஒள்ளிய என்னச்
சயமுறு கீரன் பொருமையால் அங்கண்
சாற்றுவான் என்தனித்தமிழில்
செயிரறும் ஐந்தாம் பனுவலுக் கொப்புச்
செப்புதற்கு அரிதெனச் செப்ப'.

இப்பாடலில் 'ஐந்தாம் பனுவல்' என்றது மும்மலம் எனப் பட்ட முக்குணம், ஆர்யன் அல்லது உதாசீனன் எனப்பட்ட புருஷன், என்றும் போகத்தினின்றும் நீங்கிய பேராண்டவன் ஆகிய ஐந்து பொருள்களைப் பற்றி உணர்த்தும் சைவ சித்தாந்தம் அல்லது பாசுபதமாகும்.

வேம்பத்தூரார் திருவிளையாடலில் இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலத்தில் நக்கீரன் முருகப்பிரான் மேல் இயற்றியதாகக் கூறப்பட்ட திருமுருகாற்றுப்படையே ஐந்தாம் பனுவலாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். திருமுரு காற்றுப்படையில் உள்ள அடியிற்கண்ட பாகம் கவனிக்கற் பாற்று :—

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள் கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணி தோள்
... ... ... ...
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூ எயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து

ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ் பெருந்தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக் கிளர் செல்வனும்
நாற் பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் முறை † புரி கொள்கைப்
பலர் புகழ் மூவரும் தலைவராக†
ஏமுறு ஞாலந்தன்னில் தோன்றி

... ... ... ...

உறுகுறை மருங்கில் தம்பெறு முறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தை யொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்.

இங்கே பிரகிருதியின் முக்குணங்கட்கு அதிதேவதைக ளெனக் கருதப்பட்ட திருமால், முக்கட்பெருமான், இந்திரன் எனப்பட்ட மூவரும் முருகப் பிரானிடமாகிய திருவாவினன் குடிக்கு வருவதாகச் சொல்லப்படுகிறது கவனிக்கத்தக்கது.

உரையில் நச்சினார்க்கினியர் சைவப்பற்றுடைய வரான படியால் முக்கட் பெருமானைச் சிவபிரான் என்று கூறக் கூசி உருத்திரன் என்னும் கடவுளைக் குறித்ததாகக் கூறுகிறார். இறையனார் அகப்பொருள் உரையின்படி உருத்திர தர்மன் முருகனெனப்படுவதால் முருகனைப் பரம் பொருளாகக் கருதிய திருமுருகாற்றுப் படையில் உருத்திரன் முருகனைக் காண வந்தான் என்பதற்குப் பதிலாகச் சிவபிரான் முருகனைக் காண வந்தான் என்பது நயமாயும் புராணத் துக்குப் பொருத்தமாயும் இருக்கும். மேற்கண்ட பாகத்தில் முக்குணத்தையும் குணாதீதனை பேராண்டவனையும் ஆகிய நாற் பொருள்களை நக்கீரர் குறிப்பிடுகிறார்.

---

†அச்சடித்துப் பிரசுரமாயிருக்கும் பிரதியிலுள்ள 'ஒன்று' 'தலைவராக' என்ற பாடங்கள் நேரல்ல.

'சேவடி படரும் செம்மலுள்ள மொடு
நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை யாயின்' —திரு முரு. 62-64.

[புரிந்து என்ற பாடம் சிறப்பன்று].

இங்கே புலம் என்றது ஐம்புலன்; ஐம்புல நுகர்ச்சி நீத்து பேரின்பமுண்டவனுடன் உறை கின்ற செலவாகிய கதியின் பத்தைப் பெற்றதனால் செம்மையாகிய உதாசீன நிலையை அடைந்த உள்ளமாகிய புருஷன் ஐந்தாவது பொருளாக இங்கே கருதப்படுகிறது.

இந்தத் திரு முருகாற்றுப்படை நூலின்வரலாறும் உண்மையும் பரஞ்சோதியார் திருவிளையாடலிற் கூறப்பட வில்லை.

இனி நக்கீரன் பொருமையடைந்தான் என்பதும் அவனுக்கு ஆலவாய்க் கடவுளால் அகத்திய முனிவன் மூலம் பொருளிலக்கணம் உபதேசிக்கப்பட்டது என்பதும் நாற் பொருளை உணர்த்திய சாங்கிய நூலின் சார்பாக எழுந்த புராணக் கட்டுரைகள். இச் சார்பாகவே இடைக்காடன் கபிலனுடைய தோழனைபடியால் ஆலவாய்க்கடவுள் இடைக்காடன் பிணக்கைத் தீர்த்தார் என்ற கதையும் நக்கீரனுக்கு மாமுகத் தருமி என்னும் ஆதிசைவனுக்கு ஆலவாய்க்கடவுள் "கொங்கு தேர்வாழ்க்கை" என்னும் கவியை எழுதிக்கொடுத்துப் பாண்டியனிடமிருந்து பொற்கிழி பெறச் செய்தான் என்ற கதையும் எழுந்தன. இது சம்பந்தமாக வேம்பத்தூரார் நூலில் சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடலில் 1-வது பாடலில் இயல் வாணர் கபிலர் நக்கீரர் பரணர் எனக் கபிலர் சிறப்பாக முதலிற் கூறப்பட்டும் 4-வது பாடலில் ஆலவாய்க்கடவுளால் அருளப்

பட்ட சங்கப்பலகையில் முன் கீரர் இருந்தனர் பின் கபிலர் முதலிய மற்றைப் புலவர் இருந்தனர் என்றும் முன்னுக்குப் பின் முரணாகக் கூறப்படுகிறது.

பரஞ்சோதியார் நூலில் கீரனைக்கரை ஏற்றிய படலத்தில் கீரன் ஆலவாய்க் கடவுளின் நெற்றிக் கண்ணால் விழிக்கப் பட்டுச் சூடு பொறுக்க முடியாமல் தாமரைப் பொய்கையில் விழுந்த பின் நக்கீரன் இல்லாத புலவர் சங்கம் மதிப்பில் குறைந்தது எனக் கூறப்படுகிறது.

'ஏன்ற வேந்தன் இலாக்குடி யீட்டமும் இன்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞான மிலாதவா கல்வியும் ஆனதே
சான்ற கீரன் இலாது அவை கூடிய சங்கமே.'
—திரு விளை, கீரனைக்கரை. 3.

திருத்தொண்டர் திருவந்தாதியில் பொய்யடிமை யில்லாத புலவரின் வரிசை சொல்லப்படுவதில் கபிலர், பரணர், நக்கீரர் என நக்கீரரை மூன்றாவதும் கபிலரை முதலிலும் வைத் திருக்கிறது. உமாபதி சிவாசாரியரின் புராண சாரத்தில் நக்கீரர் பேர் சொல்லப்படவேயில்லை. கபில பாணர் முதலி யோர் என்று காணப்படுகிறது.

நக்கீரர் கபிலர் ஆகிய இரு புலவர்க்குள்ள ஏற்றத் தாழ்வு சம்பந்தப்பட்ட வாதத்தில் ஒரு துணிவுக்கு வர முடியாததால் சேக்கிழார் இப் புலவர்களைக் கூறவேண்டிய இடங்களில் ஒரு புலவரையும் கூறவில்லை.

பரஞ்சோதி முனிவர் நூலில் சங்கத்தார் கலகம் தீர்த்த படலத்தில் "தெருள் கீரன் முத்தண் தமிழ், கபிலன் தமிழ், பரணன் தமிழ் மூன்றும்" என்ற வாக்கியம் காணப் படுகிறது.

இதிலிருந்து முத்தமிழ் என்பது இன்னதுதான் என நூலாசிரியர்களால் துணிய முடியவில்லை எனத் தெரிகிறது. முப்புலவரின் தமிழ் நூல்கள் முத்தமிழ் எனக் கருதப்பட்டனவா, அல்லது மூவகையான தமிழ் நூல்கள் எனக்கருதப்பட்டனவா என்ற விபரம் தெரிய வில்லை.

முத்தமிழ் என்ற தொடரின் கருத்து:—இங்கே தமிழ் என்பது பாஷையைக் குறிக்கவில்லை. தன்மை என்பதன் மருஉ தமிழ் என்பது. தன்மை என்பது பொருளின் இயல்பு. சொக்கன் என்பதற்கு சுவக்கன் அல்லது இயல்பு நூலைச் சொன்னவன் என்பதே பொருள். ஒளி, முயற்சி, அடக்கம் என்பன அம் முத்தன்மைகள். ஆதியில் கருதப் பட்டு வந்த முத்தன்மைகள் எவை எனத் தமிழ் மரபினு மட்டு மன்று வடமொழிச் சாங்கிய நூலாசிரியர் பரம்பரையிலும் மறக்கப்பட்டு விட்டது. ஒளி, முயற்சி, மருள் என்று சிலர் கொள்கின்றனர்; பிரீதி, அப்பிரீதி, விஷாதம் என மூன்றும் தான் அம்முப் பொருள்கள் எனவும் கூறப் படுகிறது. குறளிற் கூறப்படும் காமம், வெகுளி, மயக்கம் என்பன இவற்றிற்கு நேராக இருக்கின்றன. காமம் என்பது சிவகாமமாகிய ஞான நிலையா, அவா ஆகிய மருணிலையா எதைக் குறிக்கிறது எனவும் அறுதியிட முடியவில்லை.

வடமொழியில் இப்போது பயிலப்படும் சாங்கியப் பகுதி ஆதி ஆசிரியன் நூலில் பதினறில் ஒருபாகம் தான் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழ்ப்புலவர்களும் முத்தமிழ் இன்னது எனத் தெரியாமல் மயங்கி, இயல், இசை, நாடகம் என்று இன்னது எனக் குறிப்பின்றிக் கூறுகிறார்கள்.

சாங்கிய நூலில் முக்கியமாகப் பிரகிருதிக்கு முக்குணம் உண்டு எனக் கூறியபடியால், தமிழர்கள் சாங்கிய நூலை

முக்குண நூல், அல்லது முத்தன்மை நூல் என்றார்கள். தன்மை என்பது தமிழ் எனத்திரிந்ததால் சாங்கிய நூலை முத்தமிழ் நூல் எனக் கொண்டார்கள். தமிழ் என்னும் சொல் பாஷையைக் குறிக்கும் போதும் தமிழ் நாட்டில் வழங்கிய புறமொழிகளை விலக்கி நாட்டின் தன்மைப் பாஷை அல்லது சுவபாஷையைக் குறித்தது. தமிழ் என்றால் இங்கிலீஷில் native language என்பதற்கு நேர். பாஷையைக் குறித்த 'தமிழ்' என்னும் சொல்லிற்கும் முக்குணத்தைக் குறித்த 'தமிழ்' என்னும் சொல்லிற்கும் நேரான தொடர்பு கிடையாது. இரண்டு சொற்களும் தன்மை என்னும் தமிழ் மூலச் சொல்லைப் பிறப்பிடமாகக் கொண்டன.

'முத்தமிழ் நான் மறை' என்ற தொடரில் பிரகிருதியின் முக்குணமும் அவற்றிற்குச் சாக்ஷியாயிருந்து அவற்றினின்றும் மறைந்திருக்கும் நாலாவது பொருளாகிய புருஷனும் என்று பொருள். அல்லது தமிழ்முனி கைக்கொண்ட உண்மை நூலும் வடமொழியிலுள்ள நாலு வேதமும் என்பது பொருள்.

இந்தியாவிலே தமிழ் முனியால் முதல் முதலாகத் தன்மை நூல் அல்லது தத்துவ நூல் உபதேசிக்கப்பட்டது. இந்நூல் வடமொழியில் கொண்டு போகப் பட்டும் தன்மை என்ற தமிழ்ச் சொல்லின் மாறு ரூபமான தத்துவம் என்னும் சொல்லையே வடமொழியாளர் ஞான நூல் என்ற கருத்தில் வழங்கினார்கள்.

தன்மை என்ற சொல்லில் தமிழ்க் குரிய 'மை' என்ற ஈறு கெட்டு வடமொழியில் 'தன்' என்ற மூலம் மட்டும் சென்று 'துவம்' என்ற அந்தத்துடன் இணைக்கப்பட்டு தத் + துவம் என மாறித் தத்துவம் என்ற சொல்லில் முடிந்தது.

வடமொழிக் குரித்தாயுள்ள 'தத்' என்ற மூலம் அது எனப் பொருள் பட்டு, உண்மை எனப் பொருள் படாததால், தத்துவம் என்ற சொல் தன்னுடைய 'உண்மை' என்னும் கருத்தைத் தமிழ் மொழியாகிய 'தன்மை' என்பதனிட மிருந்து அடைந்திருக்கிறது.

இனி இத்தத்துவ உண்மையின் முக்கிய அம்சமானது ஆத்மாவானது முக்குண வயப்பட்ட பிரகிருதி (=பிரபஞ்சம்) யினின்றும் வேறு என்று உணரக்கூடிய புருஷ பிரகிருதி விவேகமே. இப்புருஷ பிரகிருதி விவேகத்தைப் பயின்றவன் முருகன் எனவும் இவ்விரண்டு பொருள்களும் ஒன்றெனக் கொண்டவன் விநாயகக் கடவுள் எனவும் காட்ட ஆசிரியர் பரம்பரையில் ஒரு கதை வழங்குகிறது.

சிவ பிரான் தன் கையில் ஒருகனி வைத்திருந்ததாகவும் பிரகிருதியாகிய உலகைச் சுற்றி வந்தவனுக்கு அக்கனியை ஈவதாகவும் தன்குமாரர்களாகிய விநாயகனிடத்தும் சேயோ னிடத்தும் கூறினதாகவும் அக்கனியைப் பெறுவதற்காகச் சிவபிரானுகிய புருஷனிலும் பிரகிருதி வேறு எனக் கொண்ட முருகன் பிரகிருதியைச் சுற்றி வந்ததாகவும், அவ்விரண்டும் ஒன்று எனக் கொண்ட விநாயகன் பக்கத்தி லிருந்த சிவபிரானைச் சுற்றிவந்து முருகப்பிரான் வந்து சேர் வதற்குள் அக்கனியைப் பெற்றுக் கொண்ட தாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறு புருஷனும் பிரகிருதியும் ஒன்று எனக் கொண்டதனுலோ அல்லது வேறு எக்காரணத் தாலோ சாங்கிய காரிகையில் முதற் சூத்திரத்தின் உரையில் ஆதி ஆத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்வீகம் என மூன்ருகப்பகுக்கப்பட்ட துக்கங்களில் ஆதி தெய்வீக துக்கத்துக்குக் காரணமான தேவர்கள் யக்ஷன், ராக்ஷஸன், விநாயகன் முதலியவர்கள் என விநாயகக் கடவுளும் ஒரு

துக்ககாரண் பிராகிருத தேவதையாகக் கூறப்படுகிறது. ஆனால் சாங்கிய பிரவசன சூத்திரத்திற்கு அநிருத்தனால் செய்யப்பட்ட விருத்தியின் கடவுள் வாழ்த்தில் விஷ்ணு சூரியன் மஹேசனன் முதலிய கடவுளர்க்கு முன் விநாயகக் கடவுளும் வணங்கப்படுகிறது. இவ்வாறு சாங்கிய நூலின் கொள்கைக் குரிய தேவன் யார் என உணர்த்துவதில் ஆசிரிய பரம்பரையில் முரண் கூற்றுக்கள் காணப்படுகின்றன.

திருவள்ளுவமாலையில் 27-ம் பாடலை ஆக்கியோர் மோசி கீரனார் எனப்படுகிறார். இடைச் சங்கப்புலவர்களில் மோசி என்ற பெயருடையவர் கேட்கப்படுகிறார். மோசி என்பது மூசா என்னும் பாலிபாஷைச் சொல்லின் மரூஉ வாயிருக் கிறது. மூசா என்றால் பொய். ஆனதால் மோசி கீரனார் என்று குறிப்பிடப்பட்டவர் சாங்கிய நூலிற் பொய்க் கூற்று எனக் கருதப்பட்ட கொள்கையைப் பின் பற்றிய வராக இருக்கவேண்டும். உண்மைக் கூற்றை உரைத்ததாகக் கருதப்பட்டவர் நக்கீரர் (=சத்தியக்கீரர்) எனப்பட்டிருக்க வேண்டும். ஆகவே ஐந்து பொருள் கொண்ட ஐந்தாம் பனுவலின் ஆக்கியோன் நக்கீரர் என்றும் புருஷபிரகிருதி விவேகம் செய்யாது பொருள் ஒன்று எனக் கொண்டவர் மோசி கீரர் எனவும் கருதப்பட்டிருக்கவேண்டும். கணக் காயனார் மகனார் நக்கீரர் எனப்படும் நாமமும் சாங்கிய நூற் கொள்கை யுடையார்களில் தலை மகனை நக்கீரர் என்று கருத்துப்படும். இக் கருத்தில் ஆட்டிடையனுக உவமையில் கூறப்பட்ட இடைக்காடர் நக்கீரரினின்றும் வேறன்று. நக்கீரன் ஆலவாய்க்கடவுளால் இழிவு அடைந்ததை இடைக் காடன் பாண்டியனால் இழிவு அடைந்தான் எனக் கதை மாறு ரூபம் அடைந்திருக்கிறது. இடைக்காடன் தோழன் கபிலன் எனப்படுவதால் நக்கீரனும் சாங்கிய நூலாசிரியனான கபிலனுடன் தோழமை கொண்டவனே.

மேற் சொன்ன மோசி கிரனைத்தான் பிற்காலத்தார் மூஷிக விநாயகன் என்னும் தெய்வமாகக் கொண்டு அக் கடவுளுக்குப் பெருச்சாளிவாகனமும் கொடுத்தார்கள்.

**மாக்ஸ் மூல்லர்** என்னும் ஐரோப்பிய சமஸ்கிருத வித்வான் தம்முடைய 'இந்திய தத்துவசாஸ்திர அறுவகைச் சமயங்கள்' என்னும் நூலின்* முகவுரையில் அடியிற் கண்டபடி எழுதியிருக்கிறார் :—

"சமஸ்கிருதபாஷையில் ஏற்பட்ட வித்தை யுடன் தொடர்புடையதா யிருந்த போதிலும், மிகுந்த அழகும் சிறந்த மேன்மையும் வாய்ந்தவையும் உண்டுபட்டுத் தோன்றியவையுமான உண்மைகளைத் தன்கண்ணுள்ள தத்துவ சாஸ்திர நூற்கள் தென்னிந்தியாவில் இருக்கின்றன. உண்மை பரவுதலுக்கு நற்காலம் இல்லாததால் திராவிட பாஷைகளைப் பயில்வோரின் தொகை அருமையா யிருக்கிறது."

இக் கூற்று எழுதியபின் 40 வருஷம் கழிந்தும் ஆராய்ச்சிக்காகத் தமிழ் நூலைக் கற்பார் இன்றும் அருமை யாகக் காணப்படுகிறார்.

மாக்ஸ் முல்லர் சொன்னதைக் கடைப் பிடித்து, மேற்படி முகவுரை காணப்படும் நூலின் அகத்து அவ்வா சிரியர் கூறின சில அம்சங்களைக் கொண்டு சாங்கிய நூல் தமிழ் நாட்டில் தோன்றியதென ரூபிக்க நான் ஒருவாறு முயல்கின்றேன்.

மாக்ஸ் முல்லரின் மேற்கண்ட 'தத்துவ சாஸ்திர அறு வகைத் தர்சனம்' என்ற நூலில் சாங்கிய நூலைப்பற்றி 6-வது

---

* 'Six systems of Indian Philosophy' by **MaxMuller.**

அதிகாரத்தில் எழுதப்படுகிறது. இவ்வதிகாரத்தில் "அசுவ கோசனுடைய புத்த சரிதம்" என்று ஒரு உள்ளுரை காணப் படுகிறது. (பக். 237 ; 1903ம் ஆம் ப்பதிப்பு.) இவ்வுள்ளு ரையில் புத்த சரிதத்தில் எதிர் காலப்புத்தனுகிய போதி சத்துவாவுக்கும் ஆராதனுக்கும் ஒரு சம்பாஷணை நிகழ்ந்த தாகக் கூறப்படுகிறது. இந்த ஆராதன் என்பவரை சாங்கிய நூலின் ஆசிரியனின் ஆசிரியன் எனத் தாம் தெளிவடைந்த தாக மாக்ஸ்முல்லர் கூறுகிறுர். அந்நாலில் சாங்கியம் என்ற நூலின் பேர் காணப் படாவிட்டாலும் கபிலன் என்ற பேர் காணப்படுவதாகக் கூறுகிறுர். புத்தச்சரிதம் கி. பி. முதல் நூற்ருண்டில் எழுதப்பட்ட தாகத் தான் கருதுகிறுர்.

மாக்ஸ் முல்லர் தம் நூலின் வேறு இடத்தில் கபிலரின் சிஷ்யன் ஆசுரி என்றும், அவர் பாரம்பரையில் வந்தவர் பஞ்ச சிகை என்றும் கூறுகிறுர்.

மேற்படி பேர்களைத் தமிழ் நூற்களில் காணப்படும் சில பேர்களுடன் நாம் ஒப்பிட்டுப்பார்த்தால் ஆராதன் என்பதும் ஆசுரி என்பதும் தமிழ் நாட்டில் வாழ்ந்தவரின் பேர்கள் எனத் தெரியும். திருவள்ளுவமாலையிலும் இறையனுர் களவியலுரையிலும் திருவிளையாடற் புராணங் களிலும் காணப்படும் உருத்திர சர்மன் என்பது ஆராதன் எனப்படும் பேரின் திரிபு. உருத்திரசர்மன் என்பதும் உருத்திரதர்மன் என்பதன் மரூஉ. ஆராதன் என்பது திருவாரூர்க் கடவுளோடு சம்பந்தமுடைய ஆதிரை என்ப துடன் இணக்க முடையதாயிருக்கிறது. ஆ என்ற பகுதி நீக்கி திறன் என்ற தமிழ்ச் சொல்லுடன் சேர்ந்து ரௌத் திறன் அல்லது ருத்திறன் என ஆயது. ஆராதன் என்ருல் அழுபவன் அல்லது இரக்கமுடையவன் என்பது பொருள். யாகத்தின் உயிர்க்கொலையைக் கண்டித்து யாகத்தை

வெறுத்த சாங்கிய நூலின் இறைவனுக்கு ருத்திறன் என்ற இப்பெயர் தகுந்ததே. திருவள்ளுவமாலையின் 40-ம் பாடல் ஆசிரியன் பேர் இழிகட்பெருங்கண்ணன் எனக்காணப் படுகிறது. கண்ணீர் வடிக்கும் கண்ணன் என்பது இதன் பொருள். திருவிளையாடல் சங்கத்தார் கலகம் தீர்த்த படலத்தில் உருத்திரசர்மன் நன்னூற் பொருள் கண்ட பொழுது மயிர் சிலிர்த்து நடுங்கிக் கண்ணீர் விட்டதாகச் சொல்லப்படுகிறான். உருத்திர சர்மன் முருகன் எனவும் கூறப்படுவதாலும் கணக்காயனுகிய நக்கீரனுக்கு உபாஸக மூர்த்தியாய் முருகன் கூறப்படுவதாலும் புத்த சரித நூலிற் காணப்பட்ட ஆராதன் முருகனேடு ஒற்றுமைக் கருத்துப் பட நினைக்கத் தகுந்தவன் என நாம் தெளிவாய்த் துணியலாம்.

தமிழ் நாட்டிலும் மூவியல்பு உணர்த்திய முத்தமிழ் நூலுக்குப் பரமாசாரியன் முருகன் என்பது பரம்பரைக் கொள்கை. முருகனிடம் உபதேசம் கேட்ட அகஹத்தியன் என்பது தமிழ்ச் சொல்லாகக் கருதப்படக் கூடிய ஆசுரி அல்லது ஆசறி என்பதன் வடமொழிப்பரியாயம். ஆசுரி என்றால் மலம் உரிக்கப்பட்ட மனதை யுடையவன்; ஆசறி என்றால் ஆசு அறுக்கப்பட்ட மனதுடையவன்; அகத்தியன் என்றால் பாபத்தைக் கொன்றவன்; குற்றம் அகன்ற குற்றலன், பாபத்தை நாசமாக்கிய பாபநாசன் என்னும் தொடர்களுக்கு நேரானது அகத்தியன் என்னும் நாமம்.

முத்தன்மை என்பது தான் முத்தமிழ் என வழங்கப் பட்டதாலும் நக்கீரர் கபிலர் முதலிய சங்கப்புலவர் யாவரும் முத்தமிழ் வல்லோராய் இறைவனைப்பாடினுர் எனக் கூறுவ தனுலும் முத்தமிழ் நூல் என்பது சாங்கிய நூலே; இந் நூலில் தமிழ்நாட்டில் இரண்டு வகை நிலவினதாகத் தெரி

கிறது. தாமி எனப்படும் பிரகிருதியின் முத்தன்மைகளையும் அவற்றைப் பார்த்துக் கொண்டு அவற்றின் மாசடையாம லிருக்கும் நாலாவது தன்மையாகிய புருஷனையும் ஆக நாற் பொருள்களைப் பற்றிக் கூறும் கபில சாங்கியம் ஒருவகை; இந்நாற் பொருள்களுடன் பேராண்டவனுகிய முருகன் என்ற ஐந்தாவது பொருளையும் சேர்த்துக்கூறும் ஐந்தாம் பனுவல் என்ற இரண்டாவது வகை ஆக இரண்டு வகைச் சாங்கிய நூல்கள் பயிலப்பட்டன. அவற்றுள் பின்னது பாதஞ்சல முனிவன் ஆக்கிய வடமொழியோக நூற் போல் ஆஸ்திக சாங்கியம் எனப்பட்டுத் தென் நாட்டில் சைவசித்தாந்தம் எனவும் பாஞ்சராத்திர ஆகமத்தைக் கொண்ட வைஷ்ணவ சித்தாந்தம் எனவும் இருவகையாகப் பிரிவுபட்டன.

இச்சாங்கியகலை வட நாட்டில் பரவாமல் தென்நாட்டில் பரவிவந்ததால் தென்கலை எனப்பட்டது. புருஷனும் பிர கிருதியும் துவித மன்று எனக் கொண்ட கொள்கை வட நாட்டில் பரவியதால் வடகலை எனப்பட்டது.

மஹேஞ்சரதரோ என்னும் இடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களிலிருந்து சமஸ்கிருத மாகிய வடகலை இந்தியாவிற்கு வருமுன் எண் சித்தியுடைய சிவன் என்ற லிங்கமும், கொற்றவைக்கு நேரான பிரகிருதித்தாயும் ஆதிமக்களால் வணங்கப்பட்டார்கள் எனத் துணியப் பட்டி ருப்பதால் சாங்கிய நூல் இந்தியாவுக் குரிய பழைய நூலே.

நடுக்காவேரி வேங்கடசாமிப் போராசிரியர் நக்கீரரைப் பற்றி நடு நிலையில் ஆராய்ந்த அருஞ் சிறு நூலில் நக்கீரர் இன்ன குலத்தைச் சார்ந்தவர் எனக் கூற முடியாது என்று அப்பேராசிரியர் முடிவு கட்டியிருக்கிறார். கபிலர் என்னும் பேருடையார் இருவர் கேட்கப்படுகிறார்கள். ஒருவர் தொல்

கபிலர் எனப்படுகிறார் இன்னொருவர் வெறுமனே கபிலர் எனப்படுகிறார். சென்னை யூனிவர்சிட்டித் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தில் தமிழ் நூல் ஆராயும் வேங்கடாசல ரெட்டியார் அவர்கள் இயற்றிய கபிலர் என்ற நூலில் சாங்கிய நூல் இயற்றிய கபிலர் தமிழ் நாட்டிற்குரிய தமிழ் முனியாயிருக்க முடியாது என்ற கருத்துப்பட அச்சாங்கிய நூலாசிரியன் தம் ஆராய்ச்சி வரம்புக்குள் வரவில்லை எனக் கூறுகிறார். தொல்கபிலர் எனப் படுவதற்குக் காரணம் அவர் சாங்கிய நூலாசிரியனாய் இருந்திருக்கலாம் எனப் பண்டைத் தமிழர் யூகிப்பாயிருக்கலாம். இத் தொல் கபிலர் மணிமேகலையிற் கூறப்படும் வேளாப்பார்ப்பானாகிய ஆபுத்திரனாயிருக்கலாம். இவர்களுடன் சேர்ந்து மூன்றாவதாக வரிசை வைக்கப்பட்ட பரணரும் இவர்களைப்போலவே எச்சத்திற்குரிய சிறு தெய்வம் வணங்காத இனமாகிய வேளாப்பார்ப்பாரின் தொகுப்பைச் சேர்ந்தவராயிருக்கலாம்.

பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் ஆகமத்தைப் பின் பற்றிய துறவிகளின் சங்கத்துறுப்பினர், பிராமணம் அல்லது ஐந்திரம் எனப்படும் வேதத்தைப் பின் பற்றிய கிரகஸ்தரான புரோஹிதர்கள் எனச் சமய குரவர்கள் இரு வகையினர் காணப்பட்டனர். முன்னவர் உயிர்க் கொலை நிகழ்தற் குரிய யாகத்தின் பலனை வேளாத (விரும்பாத) வரானபடியால் வேளாப் பார்ப்பார் எனப்பட்டார்; தமிழரில் உடையார், வன்னியர் வேளாளர் மறவர் களமர் அகம்படியர் இடையர் உழவர் சமயச் சாரணர் எனப்படும் சான்றார் வினைவலபாங்கராகிய மற்றை வகுப்பினர் ஆகிய எல்லா வகுப்பினரிடை யிருந்து புலவுணவு நீத்த காரணமாகப் பிரிந்து வேறின மெனத் தவறுதலாகக் கருதப்பட்ட நோன்பிகள் ஆகமச் சங்கத்தைப் பின்பற்றி ஒழுகிய

தால் தாமும் அச் சங்கத்துறுப்பினர் போல் வேளாப்பார்ப் பினர் எனப் பட்டிருக்கவேண்டும்.

யாகத்தில் பலனை வேட்டு யாககர்மத்தைக் கைக் கொண்ட வைதிகர் வேட்கும் பார்ப்பார் அல்லது வேள்விப் பார்ப்பார் எனப் பட்டார்.

பார்ப்பார் என்னும் சொல்லும் தர்சனி என்பதற்கு நேரான இயற்கைத் தமிழ்ச் சொல்.

'இடிகரை வாழ்மரம் ஒத்தது வாழ்நாள்' என்று சொன்னதாகக் கூறப்படும் கபிலரும் அவரைப் போல் வாரும் ஜாதிக்கொள்கையை மேற் கொண்டார் என்றுவது அவர்கள் ஜாதி இன்னது எனத் தெரியும்படி மக்கட் பகுதி யினரின் ஒரு சாராருடன் இயைந்து ஒழுகினுர் என்றுவது கூற இயலாது.

தமிழ் நூல்களில் இம் முடிவுக்கு மாறுகக் கூறப்படும் வாசகங்களெல்லாம் இடையே பொய்ம்மையாய்ப் புகுத்தப் பட்ட படிற்றுரைகள் எனக் கருதப்பட வேண்டும்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் 11-வது சூத்திரத்தின் உரையில் 'கலத்திற் பிரிவு அந்தணர் முதலிய செந்தீ வாழ்நர்க்கு ஆகாமையின் வேளாளர்க்கே உரித்து என்றுர்' என்று கூறுவதில் வேளாளர் என்பார் வேளாதவர் என்றும் மற்றையவர் வேட்பவர் என்றும் கருத்துப்பட வரைந்திருப்பது நோக்கத்தக்கது. இவ் வுரையில் வேதவணிகர், வேதவணிகரல்லார் என இரு திறத்தாருண்மையும் கூறப்படுகிறது. வேதச்சார்பல்லா வணிகரும் வேளாளரைப் போல ஆகம நூலைப்பயிற்றிய துறவினர் சங்கத்தைச் சேர்ந்து வேளாப்பார்ப்பார் என்னும் பெயர்க்கு இலக்காயிருந்திருக்கவேண்டும்.

# முக்குணத்துக்கும் புராணக் கதைகளுக்கும் உள்ள தொடர்பு

## 1. தடாதகைப் பிராட்டியார் அவதாரம்

வேம்பத்தூரார் திருவிளையாடலில் தடாதகையார் அவதரித்ததைக் கூறும் புராணத்தில் 3-ம் பாடலில் மலயத்துவஜன் ஆதிமரபில் வந்த அரசர் குலத்திற் பிறந்த வடிவ மங்கை என்னும் மடந்தையை மணஞ் செய்து கொண்டான் என்று கூறப்படுகிறது. பின்னர் 5-ம் பாடலில் சொக்கன் மலயத்துவஜன் மீது அருள் கூர்ந்து அவனுக்கு மூன்று முலையுடைய ஒரு புத்திரியை அருளினதாகச் சொல்லப் படுகிறது. மலயத்துவஜன் தன் குழந்தைக்கு மூன்று முலை இருப்பதற்காகத் துயருற்றான். அவ்வாறு அவன் துய ருற்றுத் துயிலுங்காலை இணையிலானாகிய ஆலவாயுடையார் (=கடவுள்) அவன் கனவில் தோன்றி அதிகமாயிருந்த தனம் ஓர் வழியில் நீங்கும் என அவனுக்கு உரைத்தார்.

அரசன் விழித்த பின் கணிதம் வல்ல அமைச்சன் குழந்தைக்குத் தடாதகை என நாமம் இடச் சொல்லிப் பின்னும் இப்பெண்ணிற்குக் கணவன் வரும் காலத்தில் கணவன் இப்பெண்ணைக் கண்டால் இவளுடைய மிகை முலை மறையும் எனவும் சொன்னான்.

பின் மணஞ் செய்த திருவிளையாடலில் 12-ம் பாடலில் தடாதகை கைலாய மலையில் இறைவனைக் காணவும் மும் முலையில் ஒன்று மறைந்ததாகச் சொல்லப்படுகிறது.

இக்கதை சாங்கிய நூல் தத்துவத்தை மறைத்துக் காட்டு கிறது. சத்துவம், ராஜசம், தாமஸம் அல்லது ஒளி, முயற்சி

நியமம் எனப்படும் மூன்றும் பிரகிருதியின் முக்குணங்கள். தமிழ் மொழியில் இக்குணங்கள் முத்தன்மைகள் எனப் பட்டன; தன்மை என்பது 'மை' விகுதிக்குப் பதிலாக 'அம்' விகுதியுடன் தனம் எனவும் வரும்; கெட்டிக்காரத்தனம் என்ற சொல்லில் தனம் என்பது தன்மை அல்லது இயல்பு எனக் கருத்துத் தருதல் காண்க.

முத்தன்மைகள் என்பது முத்தனம் எனவும் சொல்லப் படும். பிரகிருதியாகிய ஆதி சக்தியின் முக்குணம் முத்தனம் எனப்பட்டது. தனம் (ஸ்தனம்) என்பது வடமொழியில் முலைக்குப் பரியாயப் பேர். முக்குணமுடைப் பிரகிருதியே மதுரையில் தடாதகைப் பிராட்டியாகப் பிறந்தாள் என்பதைக் குறிப்பிக்கச் சிலேடையாக தடாதகை முத்தனத்துடன் (மூவியல்பு அல்லது மும்முலை) பிறந்தாள் எனப் பட்டது.

பரமசிவனைக்காணவும் மனைவிக்குத் தனிக் கர்த்திருத்துவம் இல்லாததால் ராஜசமான நடுத்தனம் மறைந்தது எனப் பட்டது.*

## 2. விஷ்ணு பேய்முலை யுண்ட கதை

'பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ
மற்றையா ராவாரும் நீ பேசில்—எற்றேயோ
மாய, மாமாயவளைமாய முலைவாய் வைத்த
நீயம்மா காட்டும் நெறி'—இயற்பா. பெரிய திருவந்தாதி. 5.

நாலாயிர திவ்ய பிரபந்தம் நான்கு பாகங்களாகப் பிரிக் கப்படுகிறது. அவற்றின் மூன்றாவது பாகம் இயற்பா எனப்

* பரஞ்சோதி திருவிளையாடல் திருமணப்படலம் 43-ம் பாடல் உரையில் இடை முலை மறைந்ததாகக் கூறப்படுகிறது: ரத்னவேலு முதலியார் உரையுடன் கூடிய சாது அச்சுக்கூடப் பதிப்பு.

படும். இயல் என்றது பிரகிருதியின் மூவியல்களானபடியால், மூன்ருவது பாகத்துக்கு இயற்பா எனப் பேரிட்டதும் ஒரு மறை பொருளைக் குறித்தது எனக் கருதவேண்டியிருக்கிறது.

இப்பாட்டில் மாயவள் என்றது பிரகிருதியை. ஆன்மாக்கள் ஈசுரனிடம் அடையாதபடி மாயவள் தன் முக்குணத்தால் அவைகளை வயப்படுத்துவதால் ஆன்மாக்கள் பேய்க்கோட்பட்டவையாக உருவகஞ் செய்யப்படும். இக் கருத்தில் பிரகிருதியானது பேய் எனவும் படும். பிரகிருதியின் ஆன்மபந்தனைக் குரிய முக்குணங்கள் தமிழில் முத்தன்மை அல்லது முத்தனம் எனப்படும். இவை சிலேடையாக மூன்று ஸ்தனம் அல்லது மும் முலைகள் எனப்படும். மாயவள் பேராண்டவனிடம் நெருங்கிஞல் அகல் இல் (துறவு ஸ்தானம்) லில் (ஆல் இலையில்) உறையும்† அக்கடவுள் அவள் முக்குணங்களைக் கடந்து அவற்றை நாசப் படுத்துவர். ஆதலால் விஷ்ணு பேய்முலை யுண்டான் என மறை பொருள் கூறப்பட்டது. கடவுளின் சீலப் பெருஞ்சோதி* முன் இருளுடைய முக்குணம் நில்லா.

ஆட்பார்த் துழிதருவாய் கண்டு கொள் என்று நின்
தாள்ப் பார்த்து உழிதருவேன் தன்மையை—கேட் பார்க்கு
அரும் பொருளாய் நின்ற அரங்கனே உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம்.

—இயற்பா : நான் முகன் திரு அந்தாதி 60.

† ஆல் இலை = அகற்சி + இல்; ஐ வெறும் ஓசை குறித்த விகுதி 'பண்டை' என்பதிற் போல.

* பெ. திருவந்தாதி. 4.

இங்கே 'தன்மை' என்பதன் தமிழ்ச் சொல்லின் பிரயோகத்தைக் கவனிக்க. . தன்மை என்பது ஆத்மாவின் முக்குணம் நீங்கிய இயற்கைக் குணம். பாச மாகிய முக்குணப் பிரகிருதி வாழ்க்கையை நீத்து அரும் பொருளாய் மோக்ஷ அரங்கத்தில் இருக்கும் கடவுளைத் தியானித்தால் அக்கடவுள் ஆத்மாவே நீ உன் சுவபாவ தன்மையைக் கண்டு கொள் என்று ஆத்மாவிற்குக் கிருபை செய்வர்.

நான் முகன் திருவந்தாதி 93-ம் பாடலில் பேராண்டவனாகிய திருமால் 'குணபரன்' எனப்படுவது கவனிக்க.

மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண் துழாய் மார்பன்—சினத்துச்
செருநர் உகச் செற்று உகந்த தேங் கோத வண்ணன்
வரு நரகம் தீர்க்கும் மருந்து.—மூன்றாந்திருவந்தாதி, 3.

இப்பாடலில் மலராள் தனம் என்பது மோக்ஷத்தின் தன்மை எனப்படும். சிலேடையாக மோக்ஷத்தின் கொங்கையை அணைந்து ஞானப்பால் குடிப்பவன் எனக் கருத்துத்தரும். பிரகிருதியின் பேய்த்தனத்துக்கு மாறானது பேராண்டவனின் ஞானத்தனம். பேய்த்தனம் பேய் முலை எனப்பட்டதுபோல, ஞானத்தனம் மலராள் முலை எனப்பட்டது.

அறி வென்னும் தாள் கொளுவி ஐம்புலனும் தம்மில்
செறி வென்னும் திண்கதவம் செம்மி—மறை என்றும்
நன்கு ஓதி நன்கு உணர்வார்காண்பரே நாள் தோறும்
பைங்கோத வண்ணன் படி.—மூன்றாம் திருவந்தாதி. 12.

இங்கே 'படி' என்ற சொல் 'தன்மை' என்ற பொருளில் வந்திருக்கிறது.

மேல் மலயத்துவஜன் மனைவியும் தடாதகையின் தாயாரும் ஆன வடிவமங்கை என்பாள் பேரையும் கவனிக்க.

வடிவ மங்கை என்பது படிவம் அல்லது பிரகிருதித்தன்மையின் அம்சமான பொருள் என்பது கருத்து.

## 3. விளங்கனி உதிர்க்கக் கன்றைக் குணிலாகத் திருமால் எறிந்த கதை

பிரகிருதியின் முக்குணத்தின் வசப்பட்ட ஆத்மாவானது பால சேஷ்டையுடைய ஒரு வாலிபனுக்குச் சாங்கிய நூலில் ஒப்பிடப்படுகிறது. அதேபோல் இக்கதையில் பயம் அறியாத இளங்கன்றுக்குப் பிரகிருதி ஒப்பிடப்படுகிறது. விளங்கனி என்பது மோக்ஷ நிலை. முக்குண முடைய பிரகிருதியாகிய இளங்கன்றைத் தொலைத்தால் விளங்கனியாகிய முக்தி நிலை கிட்டும் என்பது இதன் பொருள்.

இரண்டாந்திருவந்தாதி 16-ம் பாடலில் 'குழக்கன்று தீவிளவின் காய்க் கெறிந்த தீமை திருமாலே' எனவருவது கவனிக்க. விளவு என்பதும் விழவு அல்லது சிறந்த மோக்ஷம் என்பதன் சின்னம். சாங்கிய நூலில் புருஷன் உதா சீனன் எனப்படுகிறான். உதாசீன நிலை பிரகிருதியைத் தீண்டாமல் மரத்தின் மேல் நிற்கும் நிலை. இதனால் தான் இராமாயணத்தில் மான் ஆகிய பிரகிருதியைத் தொடர்ந்ததால் சீதையாகிய ஞானநிலையிழந்த ராமன் (அறமன் = தர்மன்) துன்புறும் பொழுது குரு நிலைமையில் வந்து உதவிய அநுமான் (= நல்லுதடன்) விழவுக்கனியாகிய முக்தியை நுகர்ந்து கொண்டு ஞானமரத்தில் இருக்கும் குரங்காக உவமிக்கப்பட்டான்.

## 4. இராமாயணம்

ஆதியில் தமிழ் நாட்டில் முருகனே அறமன் அல்லது ராமன் எனப்பட்டான். முருகன் சம்பந்தப்பட்ட ராமா

யணக் கதை இப்போதுள்ள கம்பராமாயணத்திலும் வால்மீகி ராமாயணத்திலும் அடங்கியிருக்கிறது.

தமிழ் ராமாயணக் கதை நிகழ்ச்சியுள்ள இடங்கள் பாண்டி நாட்டிலும் இலங்கையிலும் தான் அமைக்கப் பெற்றன. கதையும் சரித்திரமன்று; சாங்கிய நூலின் கொள்கையைக் கதை ரூபமாகத் தமிழர்க்குக் காட்டியது.

ஆதித் தமிழ் ராமாயணத்தில் பரதன் சத்ருக்னன் லெட்சுமணன் முதலியோர் பாத்திரங்களாக வைக்கப்பட வில்லை. இவை வால்மீகியால் பின்னால் வடமொழி ராமா யணத்தில் சேர்க்கப் பட்டன.

ராவணன், விபீஷணன், கும்பகருணன் முறையே ராஜசம், சத்துவம், நியமம் ஆகிய முத்தன்மைகளைக் குறித் தார்கள். சூர்ப்பணகையும் ராமனை நெருங்கியதில் முத்தனம் (முக்குணம்) அறுபட்டாளே ஒழிய முலை, மூக்கு, செவியாகிய மூவுறுப்புக்கள் அறுபடவில்லை. நியமத்திற் குரிய மனவமைதி கும்பகருணனிடைக் காட்டப்பட்டது. ஞானத்திற் குரிய பேராண்டவன் சங்கம் விபீஷனிடத்துக் காட்டப்பட்டது. இராஜஸக்குணம் இராவணனிடம் காட்டப்பட்டது.

போரருவாசலாகிய திருப்பரங்குன்றம் தமிழ் ராமாய ணத்தின் அயோத்தி. பின்னால் சேர்க்கப்பட்ட பரதன், லட்சுமணன், சத்ருக்னன் என்னும் மூவரில் பரதன் விபீஷ ணனைப் போல் சத்துவத்தைக் குறித்தான். சத்ருக்னன் கும்பகருணனைப் போல் நியமத்தைக் குறித்தான்; லெட்சு மணன் இராவணனைப்போல் இராஜசத்தைக் குறித்தான். கதையில் இராவணன் விபீஷணனை எதிர்த்தது போல், லட்சுமணன் பரதனை எதிர்க்கிறான்.

ஆர்யன் என்னும் உதாசீன புருஷநிலேக்குரிய சங்கேதச் சொல்லும் ராமன் ஒருவனையே குறிக்கும்; ராமனின் மற்றைச் சகோதரர்களையாவது வேறு வட நாட்டாரை யாவது அச் சொல் குறிக்கவில்லை.

ஆர்யம் என்பது அருமையுடைய முக்தி நிலை எனத் தமிழ்ச் சொல்லாய்க் கருதுதற்கும் இட முண்டு.

மேற் சொன்ன வியாசங்களில் கூறப்பட்ட முத்தன்மை யாகிய முக்குணமே தமிழில் முத்தமிழ் எனப்பட்டது. இங்கே தமிழ் என்பது தன்மை என்பதன் மரூஉவாகிய பரியாயம்.

## 5. மணிமேகலை

இந்நூலில் கூறப்படும் ஆபுத்திரன் தமிழ்ச் சாங்கிய நூலின் ஆசிரியனை கபிலனின் மாறுரூபமே. கபிலன் சேதா எனப்பட்டதால் பௌத்த நூலில் கபிலனை ஆபுத் திரன் என மறைத்துக் கதை எழுதினர்கள்.

ஆபுத்திரன் சிந்தாதேவியிடம் பெற்ற அமுதசுரபி என்னும் பிக்ஷாபாத்திரம் கபிலன் செய்த சாங்கிய ஆகமத் தைக் குறிக்கும். சிந்தாதேவியாகிய ஞானேசுவரியிடம் பெறுவது ஞானநூலாய்த் தானிருக்க வேண்டும்.

அமுதசுரபி என்பதும் பால் சுரக்கும் பசு எனப் பொருள்படும்; திருவள்ளுவமாலையில் 'ஆவிற்கு அருமுனி ஆ' எனவருவது கவனிக்க; பசுக்களுக்குள் அரு முனி யாகிய கபிலன் செய்த நூலாகிய பசு எனப் பொருள் படும்.

பாத்திரம் பெற்ற மணிமேகலை முதல் முதலாகப் பிச்சைவாங்கினது 'ஆதிரை' என்பவளிடம் எனப்படுகிறது. ஆதிரை என்னும் சொல்லும் ஆராதன் அல்லது உருத்திர தர்மன் என்பதன் மரூஉவாகக் காணப்படுகிறது. ஆராதன்

என்பவன் கபிலரின் ஆசிரியன் என அசுவகோஷனுடைய புத்தசரிதையில் கூறப்படுகிறான். ஞானம் பெற வேண்டிய மணிமேகலையும் முதல் முதலில் மூல குருவை வணங்குவதும் நேரிதே. இவ்விஷயத்தை மறை பொருளாக வைத்து மணிமேகலையின் அமுதசுரபியில் ஆதிரை முதல் முதலாகப் பிச்சையிட்டாள் எனக் கூறப்படுகிறது.

இம்மாதிரி உள் பொருள் தேரப்படாவிட்டால் மணிமேகலையிலுள்ள கதை வெறும் நகையாடற்குரிய கட்டுக் கதையாய் முடிகிறது.

சைவ, வைஷ்ணவ நூல்களுக்குரிய சமயங்களை மணிமேகலை நூலின் சமயக் கணக்கர்தந்திறம் கேட்டகாதையில் வைதீக முறையோடு இணைத்துச் சொல்லப்படுகிறது. சாங்கிய நூலை வேறு பிரித்து பௌத்தச் சமயத்தோடு இணைத்துச் சொல்லப்படுகிறது.

இம்முறை சரித்திர முறைக்கும் உண்மைக்கும் மாறானது. சிவஞான சித்தியார் பரபக்ஷத்தில் பௌத்தத்தையும் வைதீகத்தையும் இணைத்து வைத்தும் சாங்கியம் வைஷ்ணவம் சுவபக்ஷசைவம் ஆகிய மூன்றையும் இணைத்து வைத்தும் முறைப்பட அவற்றின் தன்மைகள் விளக்கப்படுகின்றன. ஒருவாறு இம்முறை சரித்திர முறைக்கு ஒத்தது.

## 6. கந்தபுராணம்

கந்தபுராணம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்படுகிறது. இந்திரன் முதலிய எச்சத்திற்குரிய சிறு தெய்வங்களைக் காப்பாற்ற முருகன் சூர்மருங்கை அறுத்தான் என்பது இப்பாகத்தின் கருத்து. இது சமய வரலாற்றின் உண்மைக்கு மாறான கட்டுக்கதை.

இரண்டாவது பாகம் முருகன் வீரபத்திரராய் வந்து தக்ஷனுடைய யாகத்தைச் சிதைத்தான் என்பது. இது ஒருவாறு சமயவரலாற்றோடு இணைக்க முடையது.

## 7. விநாயகப் புராணம்

இது வைதிகப் புராணமே; ஆகமப் புராண மன்று. முருகனுக்குப் போட்டியாக வைதிகர்களால் பிற்காலத்தில் பாவிக்கப்பட்ட கடவுள் விஷயமாகவுள்ள புராணம்.

# இறையனார் அகப்பொருளும் திருக்கோவையாரும்

இவ்விரண்டு நூல்களில் இறையனார் அகப் பொருள் முந்திய காலத்ததாகத் தெரிகிறது. இந்நூலிலுள்ள பிரிவுக்குரிய 35-வது சூத்திரத்தை அநுசரித்துத் திருக் கோவையாரில் ஓதற் பிரிவு முதலிய அறு வகைப்பிரிவுகளுக்குரிய பாடல்களும் அவற்றின் உரைகளும் அமைந்தன வாகத் தெரிகின்றன. இறையனார் அகப் பொருள் 35-வது சூத்திரத்திலுள்ள பகை தணிவினை என்பதைத் தவறுதலாகக் கோவை ஆசிரியர் சந்து செய்வினை என்ற ஒரே கடமையைக் குறிப்பதாகக் கொண்டு அத்துறைக்குப் பாடல்கள் வகுத்திருக்கிறார். இதை அநுசரித்தே உரையாசிரியரும் உரை எழுதுகிறார். இக்கருத்தில் அரசியற்குரிய பொருள் ஈட்டும் வினையைத் காவல் என்ற கடமையில் இவர்கள் அடக்கியிருக்கவேண்டும். அல்லது 'ஓதல் காவல்' என்ற இச்சூத்திரத்திலுள்ள அறுவகைப் பிரிவுகளில் போர்ப்பிரிவு, பரத்தைப்பிரிவு, ஒழிந்த நால்வகைப் பிரிவுகளுக்குரிய கடமைகளை அரசர் வடமொழி சிமிருதி நூல்வல்ல அந்தணர் ஆகிய உயர்ந்தோர் எனப் படுவார்க்கு மட்டும் உரித்தாகக் கொடுக்கும் பொருட்டு அச் சூத்திரத்திற்குப் பிழைபட்ட அர்த்தம் திருக்கோவை ஆசிரியரும் உரையாசிரியரும் கொண்டிருக்கவேண்டும்.

அத்திருக்கோவையார் மூலத்தையும் உரையையும் அநுசரித்து இறையனார் அகப்பொருளில் 35-வது சூத்திரத்திற்குப் பின்னால் உள்ள 36-வது முதல் 40 வரையுள்ள சூத்திரங்கள் மாற்றப்பட்டும் சிதைக்கப்பட்டும் இருக்க

வேண்டும். 35-வது சூத்திரத்தின் 'உரையில் காவல்' என்னும் கடமை இத்தன்மை எனக் கூறும்பாகத்துக்கும் திருக் கோவையாரில் 'காவற் பிரிவு' என்னும் பகுதிக் குரிய பாடல்களுக்கும் ஒற்றுமை யில்லாததாலும் இறையனார் அகப் பொருளில் காவல் என்னும் கடமையை தமிழ் முறை நூல் வல்ல பெருங்குடியாளர்க்கு உரித்தாகப் பொதுப்படக் கூறாமல், உயர்ந்தோர்க்கு (முதலிரண்டு சாதியார்) மட்டும் உரித்து எனச் சூத்திரத்திற் கூறி உரையில் அரசர்க்குத் தனி நிலைமையில் உரித்து எனக் கூறுகின்ற படியாலும் 35-வது சூத்திரத்திற்குப் பின்னால் உள்ள சூத்தி ரங்கள் ஆதியில் அமைந்தபடி இல்லை எனக் கருத இட மிருக்கிறது.

மேலும் ஓதற்பிரிவு அறநூற் கல்வியைக் குறிப்ப தாலும், காவல், பகைதணி அமைச்சர்வினை வேந்தர்க குற்றுழி, ஆகிய நால்வகைப் பிரிவுகள் பொருட்பாலுக்குரிய அரசியலைக் குறிப்பதாலும், பரத்தையிற் பிரிவு இன்பத்தைக் குறிப்பதாலும், தனியே பொருட்பிரிவு என்று ஓர் பிரிவு வகை ஏற்பட நியாயமில்லை.

ஆதலால் இறையனார் அகப் பொருள் 39-வது சூத்திரம்,

> வேந்தர்க் குற்றுழீப் பொருட் பிணிப் பிரிவு என்று
> ஆங்க இரண்டும் இழிந்தோர்க்குரிய

என்று அமைந்திருப்பதற்குப் பதிலாக

> 'வேந்தர்க் குற்றுழிப்பகை தணிப்பிரிவு என்று
> ஆங்க இரண்டும் இழிந்தோர்க் குரிய'

என்று ஆதியில் இருந்திருக்கவேண்டும். அடுத்த 40-வது சூத்திரம் 'காதற் பரத்தை நால்வர்க்கும் உரித்தே' என்ப

தற்குப் பதிலாக 'பொருட் பிணி பரத்தை இழிந்தோர்க் குரித்தே' என்றிருந்திருக்கவேண்டும்.

பரத்தைப் பிரிவுக் குற்றத்தை இழிந்தோர் பாற் படுத்திப் பட்டாங்கு கூறியும் ஓதல், காவல், பகைதணி, அமைச்சுவினை, வேந்தர்க் குற்றுழி ஆகிய ஐவகைப் பிரிவுப் பெருமைகளை நாலு சாதியார் மட்டும் படுத்தி நடுநிலைப்படி சூத்திரங்கள் அமைந்திருந்தால் நக்கீரர், கபிலர், பரணர் முதலிய பொய்யில் புலவர்களின் இறைவனை ஆலவாய் அடிகளின் மேன்மைக்குப் பொருத்தமாயிருக்கும். 'காவல்' என்பதற்கு இறையனார் அகப் பொருள் உரையில் முறைக் கருமம் கேட்டுத்திருத்துதல் எனப் பொருள் உரைக்கப் பட்டிருக்கத் திருக்கோவையார் உரையில்* "காத்தலாவது தன் வினை செய்வாரானும், கள்வரானும், பகைவரானும் உயிர்கட்கு வரும் அச்சத்தை நீக்குதல்" என்று மட்டும் கூறி யிருக்கிறது கவனிக்கத் தக்கது. கோவையார் உரையில் காத்தல் எனப்பட்டது வேந்தர்க்குற்றுழி என்பதில் அடங் குவதால் முறை செய்தலாகிய காவற்கடமை அரசியற்கு உண்டு என்பதைத் திருக்கோவையார் உரை யாசிரியர் மறந்து விட்டதாகத் தெரிகிறது.

## நூலோர் பரம்பரையில் பரத்தையிற் பிரிவு கூறப்பட வந்த வரலாறு

பரிமேலழகர் திருக்குறளின் பொருட்பால், காமத்துப் பால், ஊழ் ஆகிய இவற்றின் அவதாரிகைகளிற் கூறுகிற விஷயங்கள் நம்மால் நன்ருய் உணரப்பட்டால் அறம் பொருள் இன்பம் என்பனவும் இம்மை மறுமை வீடு என்

* திருக்கோவை 312-உரை.

பனவும் ஒரே கருத்தில் பயிலப்படவில்லை என நன்கு விளங்கும்.

இல்லறத்தின் வழிப்படுவது இம்மையே பயப்பதாய இன்பம் என்றும், இன்பத்திற்குத் துணைக்காரணம் மணி பொன், நெல் ஆகிய பொருள்கள் என்றும், இப்பொருள் களின் துணைக்காரணம் அரசன் நீதி என்றும், அரசன் நீதி யாவது காவலை நடாத்தும் முறைமை என்றும், இக்காவலின் சிறந்த இரு பகுதிகள் புற நாட்டாருடன் போர் இயற்றும் வன்மையும் தன் நாட்டில் வாழ்வார் யாவர்க்கும் முறை செய்து தலையளித்தலும் ஆகிய அரசியற்கடமைகள் என்றும் உரையின் பல இடங்களில் பரிமேலழகர் கூறுகிறார்.

இன்பம் என்னும் சங்கேத பதமும் இன்னது எனத் தெளிவாய்க் கூறப்படவில்லை. குறள் காமத்துப்பாலிலுள்ள களவியல் என்ற தலைப்பின் கீழுள்ள அவதாரிகையில் இன்பப்பகுதியின் இரு கைகோள்களின் ஒன்றான களவின் இயல்பைக் கூறு மிடத்துப் பரிமேலழகர் “ களவாவது பிணி மூப்பு இறப்புக்கள் இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையவராய் தலை மகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவுமன்றி அடுப்பவு மன்றி (காட்சிக்குப் பின்னும் வரைவுக்கு முன்னும் காதலி நிமித்தம் காதலனாற் செய்யப்பட்டதும் உயிர்தப்புவிக்கும் வீரச் செய்கையுமான ஏதேடு இன்றி) இயற்கையில் உள்ளத் தெழுந்த அன்பால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது” எனக் கூறுகிறார்.

இங்கு விவரிக்கப்பட்ட இன்பம் இவ்வுலகத்தில் நிகழும் மக்கட் காதற்குரிய தன்று. மோக்ஷ இன்பம் ஆண்

பெண் இருபாலாரும் கூட்ட மின்றித் தனித்தனியே நுகரக் கூடிய இன்பம் ஆனபடியால் இவ்வியற்கை அன்புக் குரிய இன்பம் மோக்ஷ நிலைக்குரியது மன்று. ஆகவே இறையனார் களவியலுரையில் இவ்வின்பம் இல்பொருள் எனப்பட்டது.

நக்கீரனாரின் களவியலுரையிலிருந்து உள்பொருள் இரண்டு எனத் தெரிகிறது. அவை பிணியாகிய பந்த வாழ்க்கை, பிணி நீங்கிய மோக்ஷ வாழ்க்கை.

ஆத்மாவானது தனக்கு இயல்பாக உரியதும் பாபக் கலப்பற்றதுமான மோக்ஷ வாழ்க்கையினின்றும் பிரிந்து முக்குணம் வாய்ந்த இவ்வுலக வாழ்க்கை மேல் பற்று வைத்து அறம் பொருள் காதல்களை நுகரும் பொருட்டு இவ்வுல கத்தில் பிறப்பதுதான் பந்தவாழ்க்கை; இது ஆதி ஆசிரியர் களால் பிரிவு என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது. மோக்ஷவாழ்க்கையானது புணர்ச்சி எனப்பட்டது. மேல் பரிமேலழகர் உரையில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிணி மூப்பு இறப்பு என்ற சொற்களும் வடமொழிச் சாங்கிய நூலிற் குரிய காரிகையில் காணப்பட்ட அவிசுத்தி, க்ஷயம், அதி சயம் என்பவைகளுக்கு* நேர் மொழிகளாகத் தோன்று கின்றன. புருஷனின் நிலை இம் மூன்று இயல்புகளைக் கடந்ததெனக் கூறப்படுகிறது.

ஆகவே குறளின் களவியல் அவதாரிகையில் குறிக்கப் பட்ட களவின்பம் திருவள்ளுவர் கூறும் மக்கட்காதற்குப் பொருத்த மின்று.

இனி ஆதி ஆசிரியரால் குறிக்கப்பட்ட பிரிவு என்பது அறப்பிணி, பொருட் பிணி, காதற் பிணி என்ற முப்பிணி

---

*சாங்கிய காரிகை. சூத்திரம், 2. அதிசயம்=இறப்பு=going beyond this life.

களுடைய உலகவாழ்வை நுகரும் பொருட்டு புருஷன் எனப்பட்ட ஆத்மா பரலோகத்தினின்றும் பிரியும் பிரிவாகும். இக்கருத்தில் அறப்பிணி பொருட் பிணி, காதற் பிணி யாகிய மூன்றும் இவ்வுலகத்துச் சான்றோரால் அங்கீகரிக்கப்பட்ட நல்லொழுக்கமே. அறப்பிணி என்பது மெய்யுணர்வாகிய கதிநோக்கி மக்களால் செய்யப்படும் தவ முயற்சி. பொருட் பிணி என்பது அரசன் நீதியாகிய காவல் நடாத்தும் முயற்சி. காதற் பிணியானது, "தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்—தாமரைக் கண்ணான் உலகு"† என்றபடி பொருட்பெண்டிரல்லாக் குலமகளும் அவளிடைத்தன் முழு அன்பும் செலுத்தும் நிறைமகனும் ஓர் இல்லின்கண் இருந்து வாழும் வாழ்க்கை யாகும். காதற் பிணி நுகரத் தாம் பிரிந்து வந்த மோக்ஷ லோகம் இக்குறளில் தாமரைக்கண்ணான் உலகு எனப் பட்டது கவனிக்கத்தக்கது.

கடவுள் வாழ்த்தின் அவதாரிகையில் பரிமேலழகர் 'சத்துவம் முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு' என்று உரைப்பதில் அறம் பொருள் காதல் ஆகிய மூன்றும் பிரகிருதி பந்தத்திற்குரிய ஒளி, முயற்சி, மருள்‡ என்னும் முக்குணங்களோடு இயைபுடைய எனக் கருதப்படுகிறது. ஆகவே இவ்வுலகத்தில் நல்லன என நாம் கொண்ட முறைகள் எல்லாம் நாலாவது பொருளான மோக்ஷ லோகத்தை நோக்க வழுப்பட்ட முறைகள் எனவே கருதப் படும். இவ்வாழ்ந்த உண்மை நோக்கித்தான் தொல்காப் பியம் சொல்லதிகாரத்தில் எவ்வகைப் பட்ட நன்முறையும்

---

†குறள். புணர்ச்சிமகிழ்தல் 3. ‡ இவை சத்துவம், ரஜஸ், தமஸ் என்பவற்றிற்கு [illegible].

வழு அமைதி எனப்பட்டது. இக்கருத்தில் செய்யுள் வழக்கும் வழு அமைதி எனப்பட்டது.

இனிப் பின்வந்த நூலாசிரியராலும் உரையாசிரியர்களாலும் மோக்ஷ இன்பத்திற்குரிய பிரிவின் இலக்கணம் யாவும் இகலோக இன்பத்திற்குரிய பிரிவிற்கு மாற்றப்பட்டன. குடும்பவாழ்க்கையிலிருந்து தலைவன் அரசியலுக்குரிய போர், தூது, காவல், முறை செய்கை ஆகிய பொருட்பாற் கடமைகளின் நிமித்தம் பிரிகின்ற பிரிவு பொருட் பிரிவு எனப்பட்டது. இங்கே பொருள் என்றது தன் குடும்பச் செலவிற்கு வேண்டப்படும் நெல் பொன் முதலிய அன்று. அரசியல் காரியம் என்பது கருத்து. அரசியலானது, நாட்டில் பொருள் பரவுவதற்குக் காரணம் ஆனபடியால் காரியவாகு பெயரால் பொருள் எனப்பட்டது. பின்காலத்தில் கோவைப் புலவர்களால் பொன் முதலிய பொருள் தனக்குத் தேடும் பொருட்டுத் தலைவன் தலைவியினின்றும் பிரிகின்றான் எனப் புதுத்துறை வகுக்கப்பட்டது. இனி ஆத்ம இன்பம் நோக்கித் தலைவன் மடாலயங்களுக்கும் பேராசிரியர் மாட்டும் அற நூல் கற்கப் பிரியும் பிரிவு ஓதற் பிரிவு எனப்பட்டது. "செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும், கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்" என்று ஒப்பற்ற திருவாசகத்திற் கூறுகிறபடி கல்வி என்பதும் முபல்வாரின் ஒழுக்கமே ஒழிய முக்தித் துறையன்று. ஆனதால் ஓதலும் அறப் பிணி என்ற ஓர்பந்தமெனவே கருதப்பட்டது.

கிரமத்தில் இகலோக இன்பத்திற்கு இவ்விரண்டு பிரிவு வகைகளே உண்டு. முக்தி இன்பத்தினின்றும் பிரிந்த பிரிவு மூன்று எனக் கணக்கிடப்பட்டதன் காரணம் பிந்தின ஆசிரியர்களால் மறக்கப்பட்டது. ஆதலால் இவ்வுலக இன்பக்

கூட்டத்திற்கும் பிரிவு மூன்று எனக் கொண்டார்கள். தன் மனையாளை நீங்கிப்புறப் பெண்டிருடன் வாழும் வாழ்வும் ஆன்றோர் கட்டளையிட்ட முறையின் பாற்படும் என வஞ்சக உபதேசம் நாட்டில் நிலவத் தொடங்கியது.

'பரத்தை' என்ற சொல்லும் ஆதியில் புறவாழ்வு என்றே பொருள்பட்டிருக்கவேண்டும்.

மோக்ஷ இன்பத்தை நோக்க இகலோக வாழ்விற்குரிய முப்பாற் கடமைகள் பரத்தை வாழ்வு எனவே படும். இக லோகவாழ்வை நோக்க மோக்ஷ இன்பத்திற்காக முயலும் முயற்சியும் பரத்தை எனவே படும். பின்னால் இச் சொல்லின் ஆற்றல் சிதைந்து வரைவின் மகளை யுணர்த்துவதாக வழங் கப்பட்டது. இந்த நிலைமையில் இறையனார் களவியல் 35-ம் சூத்திரத்திற்கு நக்கீரனார் பெயரால் உரைவகுக்கப் பட்டது. அச்சூத்திரம் வருமாறு:—

*ஓதல் காவல் பகை தணி வினையே*
*வேந்தர்க்குற்றுழி பொருட்பிணி பரத்தை என்று*
*ஆங்க ஆறே அவ்வயின் பிரிவே.*

இச்சூத்திரத்தின் உரையில் பொருட் பிணி எனத் தனியே ஒரு பிரிவு ஆறில் ஒன்றாகக் கணக்கிடப்படுகிறது. இது கோவை நூல்கள் ஏற்பட்டதற்கு முந்திய காலத்து நூல் வழக்கைப் பின்பற்றாததால் தவறான முறையாகும்.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூவகை ஒழுக்கங் களும் பிணி அல்லது அவிசுத்தி எனப்படும். ஓதல் என்ப தால் கல்வி என்னும் பல்துன்பக்கடல் சுட்டப்பட்டது. காவல், பகைதணியாகிய சந்து செய்வித்தல், "அரு வினையும் மாண்டது அமைச்சு" "செயற்கை அறிந்தக் கடைத்தும்" என்ற குறட்பாக்களின் கருத்துப்படிக்குள்ள

அமைச்சுவினை, வேந்தர்க் குற்றுழி அவர்க்குப் போரில் படைதாங்கி யுத்தத்திற்குச் செல்கை, ஆகிய அரசியற் கடமைகள் நாலாகும். இவற்றால் செல்வம் என்னும் அல்லல் சுட்டப்பட்டது. சூத்திரத்தில் இவை நாலும் பொருட் பிணி எனப்பட்டன.

இனி நக்கீரர் உரையில் இந்நூல் மோக்ஷ நூல் எனக் கூறுகிறபடியால் பரத்தை என்பது பரமாகிய கடவுளைச் சந்தா தியானிக்கும் துறவு மார்க்கம் எனப்படும். ஓதற் பிரிவும் அரசியலாகிய பொருட் பிரிவும் இல்லறத்திற்கு மீண்டு வருதலை உட்கொண்ட வரம்புடைப் பிரிவுகள். பரத்தை என்பது மீட்சியில்லாப் பெரும் பிரிவு.

பரத்தை என்பதற்கு இப்படித்தான் ஆதி நக்கீரர் உரையில் கருத்து அமைந்திருக்கவேண்டும். பிற்காலத்தில் இழிவொழுக்கம் உயர் வொழுக்கம் என மயங்கப்பட்டு இம் மயக்கத்தை அநுசரித்துப் பழைய சூத்திரங்களும் உரை களும் மாற்றப்பட்டிருக்க வேண்டும். மாற்றப்பட்ட கருத் துக்களின் படி பரத்தை என்பதற்கு வரைவில் மகளிரிடை ஒழுகும் ஒழுக்கம் எனப்பட்டது. இக் கருத்திலும் பொருட் பிணி என்பதை வேறு தனிப்பிரிவாகக் கொள்ளாமல் பொரு ளாசையால் பிணிக்கப்பட்டு அன்பில்லா வரைவில் மகளிரி டைப் பிரிவு என்றே உரைத்திருக்கலாம். அறம், பொருள், காதல் ஆகிய மூன்றுமே உலகப்பிணிகள் எனப்பட்ட சாங்கிய நூலின் ஆப்தவசனம் மறக்கப்பட்ட படியால், பொருட் பிணியானது தனியே ஒரு பிரிவெனத் தவறுதலாகக் கொள்ளப்பட்டும், வினை என்பது தனியே ஒரு பிரிவாகக் கருதப்படாமல் பகை தணிவினை என்றது ஒரு பொருள் குறித்த தொடராகக் கொள்ளவும் பட்டது.

இன்பத்திற்குப் பிரிதல் இல்லறத்தானுக்கு உண்டு என்று பரிமேலழகரும் கூறுகிறார். ஆனால் எவ்வகையான இன்பம் என அவர் சுட்டவில்லை; 'பிரிவாற்றாமை' என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில் அவர் "வரைந்து (தன் காதலியை) எய்தியபின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுத் தொலைவிலுள்ள இடத்தினும் ஆயிடையாகிய தன் ஊரினும் தலை மகளைப்பிரிந்து செல்லும்" எனக் கூறுகிறார். 'ஆயிடை' என்றதால் வரைவின்மகளிர் உறைவிடம் எனப் புலவரால் ஊகிக்கப்படுகிறது. ஆனால் 'புலவி' என்ற அதிகாரத்திலுள்ள குறட்பாடல்களின் உரையிலும் பரிமேலழகர் பொதுமகளிர்ப்பிரிவு ஒன்று உண்டு என நாம் கருதும்படி உரை எழுதாததை நோக்கினால் பரிமேலழகர் பரத்தையிற் பிரிவு ஒன்று சான்றோரால் ஒப்புக் கொள்ளப் பட்டதென நமக்கு உணர்த்தவில்லை எனத் தெரிகிறது. இல்லற இன்பம் தவிர மற்ற இன்பம் எத்தகையது என அவர் கூற நேர்ந்த இடங்களிலும் பரத்தையர் மாட்டின்பத்தை ஓர் இன்பமாக அவர் குறிக்கவில்லை.

பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் ஐந்து—கு. நாடு. 8.

இப்பாடலின் உரையில் 'இன்பம்—விழவும் வேள்வியும் சான்றோரும் உடைமையானும், நுகர்வன உடைமையானும், நிலநீர்களது நன்மையானும் வாழ்வார்க்கு உள் நிகழ்வது" என்று கூறப்படுகிறது. வரைவின் மகளிர் சேரி சுட்டப் படாதது கவனிக்கத்தக்கது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.—கு. இறைமாட்சி. 5.

உரை : "காத்த வகுத்தல்=காத்த பொருள்களை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தல்.

கடவுளர், அந்தணர், வறியோர் என்று இவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலை அறப் பொருட்டாகவும், யானை, குதிரை, படை நாடு, அரண் என்று இவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும் மண்டபம், வாவி, செய் குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களால் நுகர்வன வற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க."

இவ்வுரையில் ஐம்புலன்களால் நுகரப்படுவன என்பது இசை, நற்காட்சி, நன்மணம், நல்லுணவு, நல்லுடை, நற்படுக்கை என்பவற்றைக் குறிக்கும். பொருட் பெண்டிர் முயக்கம் பொய்ம்மை யுடையது என வள்ளுவரால் கண்டிக்கப்படுவதால் பரிமேலழகரும் வரைவின் மகளிரை இன்பக் கொடைக்குரிய பொருள்களில் எடுத்துக் கூறவில்லை.

**தமிழ் நூல் விளக்க முதற்பாகம் முற்றும்.**

---

Printed at Art Printing Cottage, Madras.

# இணைப்பு

## தமிழ் கற்பார் அறியவேண்டிய குறிப்பு

---

பெரியபுராணம் திருஞானசம்பந்த நாயனர் புராணத்தில் சுட்டப்பட்ட அகமருட மந்திரம் இருக்குவேத சங்கிதையில் காணப்படுகிறது. இம்மந்திரத்திற்குரிய ரிஷி மதுச்சந்தாஸ் குமாரர் அகமருஷணரிஷி எனப்படுகிறது. இதன் தமிழ் வடிவம் வருமாறு :—

1. கடுந்தவமாகிய ஏதுவால் எண்ணத்தின் உண்மைப் பாங்கும் மொழியின் மெய்ம்மையும் தோன்றின; அதிலிருந்து கங்குல் பிறந்தது; அதிலிருந்து நீருடைக் கடலும் பிறந்தது. பின்னல்,

2. நீர்க்கடலிலிருந்து காலசக்கரத்தின் ஒவ்வொரு நிமிஷத்தையும் நியமிப்பதாகிய ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. அவ்வாண்டு இரவுப் போதையும் பகற் போதையும் நியமித்துச் செலுத்தியது.

3. ஆதிகாலத்தில் தாத்ரு என்னும் தெய்வமானது ஞாயிறு, திங்கள், வானுலகம், விண் மீனுலகம், இன்பநுகரும் ஆத்மாக்கள் தங்கும் (ஆகாசம்) ஆகிய யாவற்றையும் படைத்தது.

வடமொழியிலுள்ள உபநிஷத்துகள் ஆராய்கின்ற தத்துவ சாஸ்திர உண்மைகளுக்கு முற்காலத்தில் தோன்றியதும் அவ்வுண்மைகளுக்கு ஆதாரமென்று சில இந்திய நிபுணர்களால் கருதப்பட்டதுமான இவ்வகமருட மந்திரம் தமிழ் நாட்டில் பழையகாலந் தொட்டுப் பயிலப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. பொதியமலை முனியின் பெயராகிய அகத்தியர் என்பது அகமருஷணன் என்பதின் மாறு ரூபமான அகஹத்தியர் என்பதன் சிதைவு. இவ்வடமொழிச் சொல்லைத் தமிழில் குற்றுலன் என்றார்கள். குற்றுலன் = பாபநாசன் = அகஹத்தியன் = அகத்தியன். பிற்காலத்தில் முனியை அகஸ்தியன் என்ற வேறுமுனியாகக் கருதி மயங்கினர்கள்.

---

இதே ஆசிரியரால் இயற்றப்பட்ட
வேறு நூல்கள்

---

1. தொல்காப்பியம் சொல்லதிகார விளக்கம்
விலை ரூ. 1-8

2. An Interpretation of Porulatikaram or Grammar of Tamil Literature of Tholkappiyam As. 0-8

---

**P. R. Minakshisundara Mudaliar,**
**B.A., B.L.,**
7-D, JOSIER STREET
NUNGAMBAKKAM :: MADRAS

6501a